
# கரை மணலும் காகித ஓடமும்

PSA-13



# கரை மணலும்
# காகித ஓடமும்

பூவை. எஸ். ஆறுமுகம்

பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை-14 திருச்சி - 2 சேலம் - 1
கோயமுத்தூர் - 1 மதுரை - 1
ஈரோடு - 1 தஞ்சாவூர்

முதற்பதிப்பு : 1972

விலை : ரூ. 3-75

ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை 14.

# பாசத்தின் கதைகள் இரண்டு !

பால்வாய்ப் பசுந்தமிழின் மறுமலர்ச்சி இலக்கியம் கிளையும் கப்புமாகச் செழித்துத் தழைத்து, வளர்ந்து, வாழ்ந்து வரும் மகிழ்ச்சிக்குரிய — வரவேற்புக்குகந்த பொன்னான நேரம் அல்லவா இது ...?

ஆம் ; அட்டி இல்லை !

அட்டி சொல்லுபவர்கள் எட்டி நிற்கட்டும் !...

'புதினம்' என்ற சொல்லுக்கு விளக்கம் தரும் போது, 'புதினம் என்பது சமூகத்தின் ஆன்மா' என்று அடிக்கடி நான் குறிப்பிடுவது உண்டு. உண்மை நிலையும் அதுவேதானே ?

"பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும் !" என்று பாடினான் பாரதி. அவன் வாக்கு, புதினத் துக்கும் பொருந்தும் ; பொருத்தம் சொல்லும் !

'ஒரு நாட்டை அறிய அந்நாட்டின் இலக்கியத்தைப் படி ! என்றொரு மேலை நாட்டு மொழி உண்டு.

மெய்தான் !

நம் தமிழ்ச்சமுதாயம் விந்தை மண்டியது ; அவ்விந்தை யில் அதற்கே உரித்தான மரபும் பண்பாடும் நியமமும் கட்டும் ஒளி காட்டி விளங்கும்.

ஆண்டவனின் இயற்கைப் பூங்காவிலே உயிர்ப்பூக்களாக— பிறவிப் பூக்களாக மனிதர்கள் மணம் கட்டுகிறார்கள் ; மணம் காட்டுகிறார்கள் ; மனம் காட்டுகிறார்கள் ! அம்மனத்தின் மணத்தில்தான் எத்தனை வேறுபாடுகள், குணதோஷங்கள், ஏற்ற இறக்கங்கள் !

வாழ்க்கையைச் சோதிக்கவே இலக்கியம் உருவாகிறது ! அச்சோதனையின் முதற்கடனாகப் புதினத்துறை அமைய வல்லது.

நானும் இத்தகைய சோதனையையே நிகழ்த்தியிருக்கிறேன். பாசத்தின் அன்பை — அன்பின் பாசத்தைத் தாய், தந்தை, மகன் என்ற முக்கோணப் பிரிவினுள் சுற்றிய வண்ணம் சோதித்துப் பார்த்தேன். அதன் விளைபலனாக எனக்குக் கிட்டின இருவேறு கற்பனைகள்.

வாழ்க்கையை வாழ்க்கையாகக் காண்பித்த கற்பனைகள் அவை. யதார்த்தமான குணக்குறிகளே என் சிந்தனைகளுக்கு ஊற்றுக்கண்கள் அமைத்திருக்கின்றன.

'கரை மணலும் காகித ஓடமும்' என்ற புதிய மகுடம் சூட்டப்பெற்ற இந்நூலில், தலைப்பு நவீனத்துடன், 'வசந்தம் திரும்பி வரும்!' என்ற அடுத்த நவீனமும் இணைந்துள்ளது. தமிழ்ச்சாதிக் குடும்பத்தை இருவேறு மனநிலைகளில் படம் பிடித்துக் காட்டியுள்ளேன். 'தந்தை மனம்' இருவேறு அமைப்புக்களிலே சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளன; தத்துவ அடிப்படை கொண்ட யதார்த்த நிலை—நனவோடைச் சித்திரங்கள்!...

என் கடமையின் நிறைவை, உண்மையான தமிழ் இலக்கியத்தைப் பேணும் இலக்கிய ஆர்வலர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அவர்களது மதிப்பீட்டில், நான் சுட்டிக் காட்டி ஆய்ந்துள்ள பிரச்சினைகளும் இனம் காட்டும்!

'பத்தினிப் பெண் வேண்டும்!' என்ற என் நாவலை 'தமிழ் நாட்டு அரசாங்கப் பரிசு பெற்ற ஆசிரியர்' என்ற குறிப்புடன் வெளிப்படுத்திய புகழ்பெற்ற பழனியப்பா பிரதர்ஸார், இவ்வாண்டு இந்நவீனத் தொகுப்பை வெளியிடுகிறார்கள். தமிழ் வளர்க்கும் தகைமைகொண்ட இப்பதிப்பகத்தாரின் அன்பிற்கும் பாசத்துக்கும் நன்றியறிவுடன் தலை வணங்குகிறேன்.

இருபதாண்டுகளாக என் எழுத்துக்களைப் படித்து மகிழ்ந்து என்னை வாழ்த்தி வரும் இலக்கிய ஆர்வலர்களை நான் மறக்கவே முடியாது. அவர்கட்கு இப்பதிப்பகமும் என் எழுத்துக்களைத் தொடர்ந்து பரிசளித்து வருமென்றும் சொல்லி வைக்கின்றேன்.

வணக்கம்.

**பூவை எஸ். ஆறுமுகம்**

# கரை மணலும் காகித ஓடமும்!

## 1

## தஞ்சை மண்

**சோ**ழர்களின் வரலாற்றுப் புகழுக்கு வாய்த்ததொரு கலைக் கலங்கரையாக விளங்கிக்கொண்டிருந்தது பெரிய கோயில்.

நிழல் படியாத கோபுரம் கொண்ட அக்கோயிலின் நிழலில் அமைந்திருந்தது என்னும் ஒரு மயக்கத்தைப் படியச் செய்யும் வகையில் நின்றது அந்த மாளிகை. தென்புறத்தில் நழுவி ஓடிக்கொண்டிருந்த காவிரியின் புதுப்புனல் கோலத்துக்குப் பிரதியட்ச சாட்சியங்களாக அந்தப் பெருங்கோயிலும் அந்தச் சிறு மாளிகையும் பொலிந்துகொண்டிருந்தன போலும்!....

மாளிகை, தன்மானம் மிக்கவனின் சத்திய மனத்தைப் போன்று கம்பீரமான நளினம் பூத்து நின்றது. வெண்ணிலவு அள்ளித் தெளிக்கப்பட்டாற் போன்று வெண்மை நிறம் பனிச் சென்று துலங்கக் காட்சியளித்த அக்கட்டடத்தின் தும்பைப்பூக் கோலமே, அம்மாள் கைக்கு வாய்த்திட்டதொரு புனிதச் சின்னம் போலவும் தோன்றியது.

அத்தோற்றத்தில் மனம் தோய்ந்து, லயித்துப் பின்னிக் கிடந்த நிலையிலே, ஏதேதோ பழைய நினைவுகளின் தவிர்க்க முடியாத சுமை அழுத்தத்தின் சூழலிலே, மாளிகையின் நுழை வாயிலில் நின்ற சைக்கிள் ரிக்ஷாவை விட்டுக் கீழே இறங்கினன்

சிவஞானம். வேஷ்டியை இழுத்துச் செம்மைப்படுத்திக் கொண்டேன் அவன்.

கவனம் அவனுடன் இறங்கியது ; ஆனால் சுமை - மனச்சுமை அவனை விட்டு இறங்கவில்லை. என்றாலும், மனப்பளுவின் சலனத்தை ஒருநிலைப்படுத்தி ஆண்ட நிலைமையுடன் இறங்கிய அவன், தன் தோளில் சாய்த்து அணைத்திருந்த தன் குழந்தையை, வைரக் குவியலைப் பாதுக்காப்பதைப் போல, அத்துணை கண் காணிப்புடன் காத்தவண்ணம், அக்கவலையே தனக்கு விதித்த கட்டளை போன்று மனம் நெகிழ்ந்து, அந்நெகிழ்ச்சியின் புயல் கடந்த அமைதியுடன் மீண்டும் அம்மாளிகையை ஏறிட்டு விழித்துப் பார்த்துவிட்டு அப்படியே சிந்தனைக்குள்ளாகி நின்றான்.

குழந்தை அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தது. பட்டு மேனிக்கு அந்தப் பட்டுச் சொக்காய் மிகவும் பொருத்தம் காட்டியது.

இடது தோளில் தொங்கிக்கொண்டிருந்த பர்மாப் பையில் இருந்த பாலூட்டும் சீசா, தன் முதுகின் கீழ்ப்பகுதியை உரசிக் கொண்டிருந்ததை அவன் உணர்ந்தான். மறுபடியும், அவன் இதயம் உச்சிக்கு ஏறி, பாதாளத்துக்கு இறங்கியது.

"இந்தாங்க ஸார், பெட்டி," என்றான் ரிக்ஷாக்காரன்.

"ஓ.... ரொம்ப நன்றியப்பா !"

சிவஞானத்தின் வலது கைப்பிடிப்பில் தோல் பெட்டி ஏறியது.

தராசின் ஒரு தட்டில் படிக்கற்கள் ஏறும் பொழுது மற்றத் தட்டு அதற்குரிய பளுவின்றி 'சடக்' என்று தாழ்ந்துவிடுமே, அப்படிப்பட்ட நிலையிலே, அவனுடைய இடது கைப்பிடிப்பின் அணைப்பில் தேங்கியிருந்த குழந்தை தடுமாறியது. நல்ல வேளையாக, அவன் நிதானமும் கவனமும் கவலையும் அவனைக் கைவிட்டுவிடாமல் காத்தருளின. 'பகவானே !' என்று வெளிப்படையாக உணர்ச்சிவசப்பட்டுக் கூறிக்கொண்டான் அவன். அவ்வாறு அவன் கூறிக்கொண்டது, தன்னுடைய உள்ளார்ந்த மன ஆறுதலையும் பூர்த்தி செய்ததுடன், அவனது மனப்புறத்தையும்-புறமனத்தையும் தேற்றிவிட்டது.

ரிக்ஷாக்காரன், சிவஞானத்தையே பார்த்தவாறு இன்னமும் நின்றிருந்தான்.

குழந்தையின் முகத்தோடு தன்னுடைய முகத்தைப் பொருத்திய வண்ணம் நின்றுகொண்டிருந்த சிவஞானம், எதையோ மறந்துவிட்டு, பிறகு நினைத்துக்கொண்டவன் போன்று தடுமாறியவனாக, "உனக்கு எவ்வளவு பணம் தர வேணும்? எழுபத்தஞ்சு காசுதானே?" என்று கேட்டான். ரிக்ஷாக்காரன்பேரில் இப்போது அவன் கவனம் ஒட்டியிருந்தது. சிவகங்கைப் பூங்காவில் மெல்லிசை கேட்டது.

ஒட்டிக்கிடந்த கன்னங்கள் சற்றே விரிசல் கண்டு நெளியச் சிரித்தபடி, "கூலியைத்தான் ஸ்டேஷன் வாசலிலேயே தந்திட்டீங்களே, ஸார்!" என்று பதில் அளித்தான் ரிக்ஷாக் காரன். அச்சிரிப்பில் நயமில்லாவிட்டாலும் நாணயம் இருந்தது.

சிவஞானத்துக்கு, தான் கூலி கொடுத்தது அப்பொழுது நினைவு வந்துவிட்டது. சமன் நிலை கணித்து, தோல் பெட்டியைத் தரையில் வைக்கப் போனவன், அதைப் பழையபடி தன் கைப் பிடிப்பிலேயே நிறுத்திக்கொண்டான். "வாஸ்தவந்தானப்பா!" என்றான். 'சொல்லுக்குச் சொல், 'அப்பா-அப்பா!' என்று பேசினால் பட்டணக்கரையில் ஒரு அலாதி மரியாதை!.... இங்கொல்லாம் எப்படியோ?'

மாளிகையிலிருந்து ஆணும் பெண்ணுமாக ஒரு புதிய ஜோடி வெளியேறிக்கொண்டிருந்தது. "தி. மு. க. மகத்தான வெற்றி பெற ஒத்துழைத்த வாக்காளப் பெருமக்களுக்கு எங்களது நன்றி!" என்று அறிவித்த சுவரொட்டி, இன்னமும் புதுக் கருக்குடன் திகழ்ந்த விந்தையை ரசித்தபடியே அந்த இணை நகர்ந்தது.

'சிவனே' என்று நின்றுகொண்டிருந்தது அழகு மாளிகை. யாவரும் அதை 'உட்கார'ச் சொல்லாத வரை அதன் பாடு யோகந்தான்!....

அம்மாளிகையின் விசேஷம் என்ன, தெரியுமா?

அது ஒரு விடுதி. அதாவது, பிரயாணிகள் தங்கும் இல்லம் அது. அறைகள் பல கீழ்த்தளத்திலும் மேல் தளத்திலுமாக இருந்தன. இஷ்டப்பட்ட அறைகளை அவரவர் கள் பிடித்துக்கொள்ள உரிமை உண்டு. ஆனால், ஒரு விசேஷம்

என்னவென்றால், அறைகளுக்குக் கூலி, அதாவது வாடகை கட்ட வேண்டும். மாளிகையைக் கட்ட கொஞ்சமா பணம் செலவாகி யிருக்கும்?

அப்பெருமனைக்கும் பெயர் இருந்தது.

பெயர்: "அழகு மாளிகை!"

உண்மையிலேயே அழகு மாளிகை வாசம் செய்து கொண்டிருந்த இடம்தான் அது!

வெளியேறிய அந்த இணையை ஏறெடுத்துப் பார்த்தான் சிவஞானம். அதே நேரத்தில் ரிக்ஷாக்காரனும் அவர்களைக் குறிப்பாக நோக்கினுன்.

சிவஞானத்தின் கண்கள் கலங்கத் தொடங்கின. அந்த 'லாட்ஜின்' தரிசனம் அவனை எங்கெல்லாமே பிடர் பற்றி இட்டுச் செல்லத் தொடங்கியது. காலத்தின் பனி மூட்டத்தைக் குடைந்து கொண்டு சென்றது அவனது மனத்தேர்; 'மல்லி!.... மை டியர் மல்லிகா!...'

காலத்தின் கழிந்த நாட்கள் ஏந்தி நின்ற மனமோகன நாட்களுக்கென்று இப்படியொரு மாயக் கவர்ச்சியா?

சிவஞானம் அந்த ஒரு நிகழ்வின் நினைவில் மனம் லயித்தான்.

அப்பொழுது, இந்த 'அறுபத்தேழு தேர்தல்' சூடு பிடித்துக்கொண்டிருந்த நேரம். கொடி வகைகளும் சுவரொட்டித் தினுசுகளும் நகரமெங்கும் விதியின் புதிர்ப் புன்முறுவலாகச் சிரித்துக்கொண்டிருந்த வேளை அது.

சிவஞானம் தன் ஆருயிர்த்துணை மல்லிகாவுடனும் 'பச்சை மண்'ணுன மதலையுடனும் சென்னைக்குப் பயணப்படத் தஞ்சைக்கு வந்திருந்தான். 'ஜனதா'வில் சென்னைக்கு இரவு புறப்படத் திட்டம். காலையில் தஞ்சைக்கு வந்துவிட்டான். அப்போதுதான் அவர்களது புறப்பாட்டிற்கு 'சுபவேளை' கை கொடுத்திருந்தது. வந்தவன் நேராக அழகு மாளிகைக்கு வந்தான். கிறிஸ்துமஸ் பண்டிகை நாளானதால் இடம் கிடைப்பது அரிதாக இருந்தது. என்றுலும், அவனுக்கு மாடி யில்லே இடம் கிடைத்தது. சாமான்களை அவர்களுக்குக் கிட்டிய இருபத்தைந்தாம் எண் அறையில் வைத்துப் பூட்டிவிட்டு,

மாரியம்மன் கோவிலுக்குக் குடும்பசகிதமாய்ச் சென்று, அம்மன் தரிசனம் செய்து திரும்பினார்கள்.

மத்தியான்னம் வந்தது.

சிவஞானம் அன்றைக்கு ஓர் எடுப்புச் சாப்பாடு வரவழைத்தான். 'தாட்' இலைகள் இரண்டு வந்தன. மல்லிகா உணவைப் பரிமாற டிபன் பாத்திரத்தைத் திறந்தாள். கணவனின் இலையில் சோற்றை அள்ளி வைத்தாள். அவளது பூங்கரங்கள் அப்பொழுது வெளிறியிருந்தன; அவை நடுங்கிக் கொண்டிருந்தன. பிள்ளை பெற்று நாட்கள் முப்பதுகூட ஆகியிருக்கவில்லையல்லவா? உடல் தேறிவிடக்கூடுமா அதற்குள்?

சற்று முன் தென்பட்ட மேலை நாட்டுத் தம்பதியர் போய் விட்டனர்.

அப்போது, "ஹல்லோ அத்தான்!" என்ற குரல், அன்பின் பரிணமசக்தியுடன் கேட்டது.

எடுத்த எடுப்பில் திரும்பினான் சிவஞானம்.

அங்கு விஜயா நின்றுகொண்டிருந்தாள். ரோஜா நிறத்தில் நைலக்ஸ் புடைவையும் சோளியும் மின்னின.

"வா, விஜயா! சௌக்கியமாக இருக்கிறாயா? எங்கே உன் கணவர்?" என்று குசலம் விசாரித்தான் சிவஞானம். அவன் விசாரித்துக்கொண்டே விஜயாவை நோக்கினான். பொங்கி வழிந்துகொண்டிருந்த எழில், இப்போது புதிய மெருகுடனும் புதிய கவர்ச்சியுடனும் புதிய பொருளுடனும் பொலியக் கண்டான்.

மல்லிகா ஜாடையாக நோக்கி, தன் மாங்கல்யத்தை நெருடிய வண்ணம், அருகிருந்த விஜயாவை எடைபோட்டாள்.

"என் கணவர் அதோ வந்துக்கிட்டிருக்காங்களாக்கும்! என் அன்பு அத்தானை நீங்க இப்போதான் முதன் முதலாகப் பார்க்கப் போறீங்க!" என்று கூறினாள் விஜயா. "வாங்க அத்தான்! இவர்தான் என் அத்தான் மிஸ்டர் சிவஞானம்!" என்று அறிமுகப்படுத்தினாள் விஜயா. மகிழ்வு பொங்கி வழிந்தது.

விஜயாவுக்கென்று இப்படி ஒரு சிரிப்பா? துடிப்புடன் இயங்கும் மன இயல்பு கொண்ட விஜயா பம்பரமாகச் சுழன்றாள்.

நாகரிக மினுக்குச் சுடர் தெறித்தது. 'டிரான்ஸிஸ்டர்' மூலையில் அடங்கியது ; குரல் அடங்கவில்லை.

சிவஞானமும் விஜயாவின் கணவனும் பரஸ்பரம் வணக்கம் சொல்லிக்கொண்டார்கள்.

"உங்க பேர்...?" என்று இழுத்தான் சிவஞானம்.

"மிஸ்டர் சபேசன் !..." என்று இடைமறித்தாள் விஜயா. களி துலங்கச் சிரித்தாள். துடித்த மார்பகத்தில் தங்கத்தாலி பளிச்சிட்டது.

மல்லிகாவுக்கு அச்செயல் வியப்பை அளித்திருக்க வேண்டும். 'புருஷன் பெயரை இப்படி வெட்கமில்லாது சொல்லுதே, இந்தப் பொண்ணு ?' என்று மல்லிகா அந்சயப்பட்டிருக்க வேண்டும் !

"இவங்கதான் உங்க சம்சாரமா ?" என்று வினவினுள் விஜயா.

"ஆமாம்," என்ருன் சிவஞானம்.

"மல்லி, இதுதான் விஜயா. என் மாமா பெண். இதைப் பத்தித்தான் நான் உன்கிட்டே அடிக்கடி பேசுவேனே ?" என்ருன் சிவஞானம்.

'ஊம் !'—பூவிதழ் விரித்து, விரித்த இதழில் நாணம் அடக்கி, நளினமாக நகை காட்டி நின்ருள் மல்லிகா. கைவிரல்களில் சோற்றுமணிகள் ஒட்டிக் கிடந்தன.

"எங்க சிவஞானம் அத்தான் ரொம்பத் தங்கம் !..." என்று சபேசனை நோக்கிச் செப்பினுள் விஜயா. குளிர்ச்சிக் கண்ணுடியைக் கழற்றிவிட்டு நின்ருள் அவள்.

சபேசன் 'காமிரா'வைத் தோள்பட்டையிலிருந்து எடுத்து, வலது உள்ளங்கைக்குள் அடக்கினுன். "ஊம் !" கொட்டினுன் அவன். இடது கை 'பாண்டு'க்குள் அடக்கம்.

தூளியில் கண் வளர்ந்துகொண்டிருந்த குழந்தை, தன்னையும் அறிமுகப்படுத்திக் கொள்ள விழைந்தாற்போன்று மெல்ல அழுகை கூட்டத் தொடங்கியது.

குழவியை வாரியெடுத்து உச்சி மோந்தாள் விஜயா. "நீங்க கொடுத்துவச்சவங்க !"

குழந்தை தாயின் பாலமுதம் அருந்திய பின்னரே அடங்கியது.

"விஜயா, உங்க அத்தானையும் உட்காரச் சொல்லுங்க !" என்றாள் மல்லிகா.

"உட்காருங்க அத்தான் !" என்று சிவஞானத்தை நோக்கிச் சொன்னாள் விஜயா.

சிவஞானம் சிரித்தபடி, "உன் கணவரை உட்காரச் சொல்கிறாள் என் மல்லி, சாப்பிட !" என்று விளக்கினான்.

சபேசன் கைக்குட்டையால் சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

பேஷ் ! திருமணத்துக்குப் பிறகும்கூட அந்தத் தம்பதிகளால் சிரிக்க முடிகிறதே ! நல்ல ஜோடிகள் இவர்கள் !...

விருந்தில் கனிந்த அந்நினைவின் பழங்காட்சியை சிவஞானத்திடமிருந்து 'சடக்' என்று பிரித்தது அவனது குழந்தையின் அழுகைச் சத்தம். "அழாதேடா ராஜா !" என்று கெஞ்சி, குழந்தையின் பட்டுச் சொக்காயின் முதுகுப்புறத்தைத் தடவிக் கொடுத்தான். குழந்தை சலனம் கண்டது போலவே, அவனது உள் மனமும் சலனம் கொண்டது. இந்த அழகு மாளிகையின் அன்புத் தரிசனம் சற்றமுன் கிட்டியதிலிருந்து அவனுக்கு இதே நிலை பல முறை பல நிலைகளில் ஏற்பட்டுவிட்டது. முன்னைப் போலவே இப்போதும் அவன் தன்னை—தன் கண் கலக்கத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டான். ஆனால், அவன் தன்னுடைய நெஞ்சின் தவிப்பையும் ஏக்கத்தையும் கட்டுப்படுத்த முடியவில்லை.

"அண்ணாச்சி !..." என்ற அழைப்போசை சிவஞானத்தின் இதயத்தில் பாசப்பிரவாகத்தை உண்டுபண்ணியது.

ரிக்ஷாக்காரன்தான் அப்படிக் கூப்பிட்டான்.

'அண்ணாச்சி !' என்ற அந்தப் பாசத்தின் குரலுக்குத்தான் எவ்வளவு சக்தி !....

"என்னப்பா ?"

"இந்தக் குழந்தை...?" என்று கேட்டுவிட்டு, கேட்ட கேள்வியை அந்தரத்தில் நிறுத்திவிட்டு, ஏனோ அப்படியே நின்றான் ரிக்ஷாக்காரன்.

"இந்தக் குழந்தை என்னுடையது !" என்று பதிலளித்தான் சிவஞானம். ரிக்ஷாக்காரனது ஐயப்பாட்டை அனுமானம் செய்தவனாக வைத்த மறுமொழி இது.

8

“அது புரிஞ்சிட்டுதுங்க. ஆனா, இந்தக் குழந்தையோட அம்மா...?” என்று இரண்டாந்தடவையாகத் தயங்கலானான் அவன்.

அவன் கேட்டு வாய் மூடவில்லை.

அதற்குள் குழந்தை வாய் திறந்து மீளவும் அழ ஆரம்பித்தது.

“குழந்தை சதா அழுதுகிட்டிருக்கிறதிலேருந்து உனக்கு உண்மை புரியலையாப்பா?... இதோட அம்மாவை விதி காணாமல் அடிச்சிருச்சுதப்பா!... நானும் ‘இது’வும் அழத் தொடங்கி ஒரு மாசம் ஆகப் போகுது. ஆனா, விதியோ எங்களைக் கண்டு சிரிச்சுக்கினு இருக்குது!....” நாத் தழுதழுக்கக் கூறினான் சிவஞானம். அவனிடம் கண்ணீர் இருந்தது. குழந்தையை அமைதிப்படுத்த முயன்றான் அவன். கண்ணீர் பீறிட்டது.

அதே கண்ணீர் அந்த ஏழையிடம் இருந்தது.

‘மல்லி!’—சிவஞானம் மனம் அதிர்ந்தான்.

எதை நினைப்பான்? எதை மறப்பான்?

“அண்ணாச்சி, இங்கிட்டுப் பெட்டியைத் தாங்க. நீங்க பிள்ளையைப் பத்திரமாய் வச்சுக்கிடுங்க. ஊம், நடங்க!” என்றான் ரிக்ஷாக்காரன்.

குழந்தை இப்போது சிரித்தது!

அந்திமாலைக்கென்று மயக்கசக்தியா, என்ன?...

அச்சக்திதான், தஞ்சை மண்ணுக்கு வாய்த்த வரலாற்று மகிமையோ?...

## அமரர் நேரு

வரவேற்புக் கூடம் வந்தது. சிவஞானம் உணர்ந்து தவித்த தனிமையின் வேதனையை 'அழகு மாளிகை'க்குரிய வரவேற்பறையின் ஆழ்ந்த அமைதி மிகவும் நெருக்கமாகக் காட்டியது. பிரிவின் இனம் புரிந்த துயரம், இனம் புரியாத வகையில் அவனது மன உளைச்சலை வளர்த்தது; மேனியில் பட்டுப்படர்ந்த செயற்கைக் காற்றின் குளுமை அவன் தவிப்பைச் சூடாக்கியது. இயற்கையின் சீதளக் காற்று, அவனது உடலைக் கடந்து உள்ளத்தைத் தீண்ட முற்பட்டிருந்தது. அப்போது தான் அவன் தன் நிலைமையை உணரலானான்; தன் முன்னே விரிந்திருக்கும் கடமையை எண்ணலானான்; அழுவதும் சிரிப்பதுமாகப் பொழுதைக் காட்டும், அம்மழலையைத் தலை குனிந்து கீழ்ப்பார்வை வீசிப் பார்த்தான் அவன்.

மாயப் பிரபஞ்சத்தில் வாழ்க்கை ஒரு மாயம் என்று பேசப் பட்டுவருகிறது.

ஆனால், அந்தக் குழந்தையோ, எதைப்பற்றியுமே கவலைப் படாதது போன்று, சலனம் கடந்த நிலையில் அழகுடன் கண் வளர்ந்துகொண்டிருந்தது.

அமரர் நேரு ரோஜாப்பூ மாலை அணிந்திருந்தார்!....

சிவஞானம் அக்காட்சியைக் கண்டு, பக்தியுடன் தலை தாழ்த்தி, மனம் நெகிழ்ந்து, இனம் கண்டு பெருமூச்சுவிட்டான். இடது விலாப்புறத்தில் ஒளிந்துகொண்டிருந்த வலி லேசாகத் தலை தூக்கியதை அவன் உணராமல் இல்லை. பெட்டியும் கையுமாகத் தன்னையே வைத்த விழி எடுக்காமல் உறுத்துப் பார்த்தவாறிருந்த ரிக்ஷாக்காரனை அவன் கவனித்ததும்தான், மாளிகையின் வரவேற்புக்கூடத்தில் நின்றுகொண்டிருப்பது அவனுக்கு விளங்கியது. அவன் வரவேற்பறையின் நிர்வாகியை நோக்கினான். அதே பழைய ஆள்தான். டெர்லின் ஸ்லாக் இல்லாமல் இருக்கமாட்டார் போலும் அந்தப் பெரியவர்?

"வாங்கோ ஸார், வாங்கோ. என்ன, வழக்கம் போல டபிள்ஸ் ரூம்தானே?.... இருங்க, காலியாயிருக்கிற ரூமைப் பார்த்துச் சொல்லுகிறேன்," என்று சொல்லிக்கொண்டே, நீண்டு தடித்திருந்த ஒரு புத்தகத்தைப் புரட்டினர் அவர். நன்றிக் கடன் மிக்கவர். பெயர் : சின்னத் தம்பி. ஆனால், பெரிய தம்பி அவர் ! அன்ருடம் இருபத்து நான்கு மணி நேரமும் அவருக்கு அம்மாளிகைதான் ஞாபகம் ! இல்லையென்றால், மலேசியாவில் மாளிகையின் முதலாளி இருந்துகொண்டு, தம் முதலை ஆள இவரை நியமித்திருப்பாரா ?

காத்திருந்த மௌனத்தைக் கலைத்துவிட்டு, ஏதோ சொல்ல வாயெடுத்த சிவஞானத்தை முந்திக்கொண்டு, "ஸார், வழக்கம் போல உங்களுக்குக் கிடைக்கக்கூடிய இருபத்தஞ்சாம் நம்பர் அறை, மாடியில் காலியாக இருக்குதுங்க. ஆமாம், டபிள்ஸ் ரூம்தான். புக் பண்ணட்டுமா ?" என்று வினவினர் சின்னத் தம்பி !

'வழக்கமாகக் கிடைக்கிற டபிள்ஸ் ரூம் இருக்குது ; ஆனா, வழக்கமாய் வருகிற என் மனைவிதான் இந்தத் தரம் இல்லை !' இவ்வாறு எண்ணினன். நெஞ்சு அடைத்துக்கொண்டது. அவன் தன்னையும் குழந்தையையும் பார்த்துக்கொண்டு 'ஒன் ப்ளஸ் ஒன் !...' என்று புள்ளி போட்டுக்கொண்டவனுக, 'ஊம்' கொட்டுவதற்கு எத்தனம் செய்தான். அதற்குள், பெரியவர் ரசிதொன்றை அவன் வசம் நீட்டிவிட்டார்.

வாடகை அறைக்குரிய 'டெபாஸிட்' தொகை ரூபாய் பத்தை, ஒரே தாளாக 'ஸ்லாக்' பையிலிருந்து நீட்டினன் சிவஞானம்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவரும் தமிழகத்தின் புதிய அமைச்சர் தலைவரும் எதிரும் புதிருமாகக் காட்சியளித்தார்கள்— படங்களிலே !

பணத்தைப் பெற்றுக்கொண்டு, அந்நன்றிக்குப் பிரதியாக ஓர் அசட்டுப் புன்னகையை முன்பற்கள் விழுந்திருந்த வாயோரங்களில் இழையவிட்டார் பெரியவர். சிவஞானத்தையும் குழந்தையையும் மட்டுமே கண்டாதாலோ என்னவோ, அந்தப் பெரிய மனிதரின் புன்னகை சுருங்கியது.

"மேலே போவோம்," என்றான் சிவஞானம், குழந்தையை வலது தோளுக்கு வசம் மாற்றிக்கொண்டு. முழங்கையை உயர்த்தி நெற்றி வேர்வையைத் துடைத்துக்கொண்டான்.

வழி காட்டிய மாடிப்படிகளில், தானே ஒரு வழிகாட்டி போல இயங்கிய வண்ணம் படிகளில் ஏறினான் அவன். இடது தோளில் ஊசலாடிக்கொண்டிருந்தது, பையிலிருந்த பாலூட்டும் சீசா.

மாடித்தளத்தில் சிவஞானம் வந்து நின்றான். தெற்குப் பார்த்து நின்ற அறைகளின் வரிசையைப் பார்த்தான் அவன். பிறகு, நடந்தான்; பழக்கப்பட்ட கால்கள் அந்தக் கோடி அறையின் முன்னே நின்றன.

ஆம்; அதுதான் இருபத்தைந்தாம் எண் அறை.

"உள்ளே வாப்பா," என்று ரிக்ஷாக்காரனை நோக்கி அழைத்தான் சிவஞானம். அவன் முன்கூட்டியே அவ்வறைக்குள் பிரவேசித்தான். புதிய விரிப்புக்களுடன் விளங்கிய இரு மெத்தைகளைக் கண்கலங்க நோக்கினான். மனத்தைத் திடம் செய்துகொண்டு, மெதுவாகக் குனிந்து, கீழ் மூலைக் கட்டிலின் மெத்தையில் குழந்தையைக் கிடத்தினான்; பழந்துணிக் கிழிசலைக் குழந்தையின் இடுப்புக்குக் கொடுத்தான். குழந்தை விழித்துக்கொண்டது; பெருங்குரலெழுப்பி அழுதது. அதன் அழுகையை அடக்குவதற்குள் அவனுக்கு அழுகை வந்து விட்டது. கைக்குட்டையை எடுத்து குழந்தையின் வேர்வையை அங்கம் அங்கமாகக் கனித்துத் துடைத்தான். பையை எடுத்து, அதனடியிலிருந்த 'ஜால்ரா'வை எடுத்து, ஆட்டினான். குழந்தையின் அழுகை நின்றால்தானே? அவன் நின்று கொண்டே யோசித்தான். அவன் கண்களுக்குப் பாலூட்டும் சீசா இலக்கானது. உடனே அவசரமாக அதை எடுத்தான். வாய் நுனியில் பொருத்தப்பட்டிருந்த ரப்பரைக் கைக்குட்டை கொண்டு அழுந்தத் துடைத்து, சீசாவைக் குழந்தையின் செப்பு வாயில் பொருத்தினான். பதட்டமான அவசரத்தோடு ரப்பரைச் சப்பி, பாலை இழுத்துக் குடிக்கத் துவங்கியது குழந்தை.

'ஈஸ்வரா!' என்று முணுமுணுத்தவனாகத் தன் கண்களைத் துடைத்துக்கொண்டான் சிவஞானம்.

"ஐயா !" என்று, பெட்டியும் கையுமாக நின்றிருந்த ரிக்ஷாவாலா விளித்தான். 'அண்ணுச்சியை, மறந்துவிட்டானு ?' ஊஹூம் !

சிவஞானம் திரும்பினுன். ரிக்ஷாக்காரன் இன்னமும் பெட்டியைத் தரையில் வைக்காமலே சிந்தனை வசப்பட்டு நிற்பதைக் கண்ணுற்ருன். "பெட்டியை அப்படியே மேஜை யண்டை சுவரோரமாகப் படுக்கை வசத்தில் வச்சிடப்பா !" என்று நினைவூட்டினுன்.

ரிக்ஷாக்காரன் சுயநினைவு தூண்டப் பெற்றவனைப் போல ஓர் அரைக்கணம் தடுமாறி, பின் தெளிந்து, கொடுக்கப்பட்ட குறிப்புக்களுக்கு ஏற்ப, பெட்டியை வைத்தான். எதையோ கேட்டுத் தெளிய வேண்டுமென்னும் ஒரு துடிப்பு அவன் நெற்றியில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது.

முழுக்கைச் சட்டை 'ஸ் டா ண் டி ல்' தொங்கியது. அப்பொழுது, சிவஞானம் மேல்புறம் திரும்பி, ஜன்னல் விளிம்பில் மடித்துச் செருகி வைக்கப்பட்டிருந்த பத்திரிகையை எடுத்துப் பிரித்தான். எடுத்த எடுப்பில், "மாலதி — மாதவன்" என்ற பெயர் காணப்பட்டது. சற்றுமுன் கீழே நின்றிருக்கையில் ஜோடியாக — ஜோடி காட்டி — ஜோடி சேர்ந்து சென்ற அவ்விணை அவனது மனத்திரையில் கனவின் நிழலாகச் சென்றது ! நாற்காலியைக் காற்ருேட்டமான வட பகுதியில் இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தான். முண்டா பனியனில் காற்று ஓடியது !

"அண்ணுச்சி !..."

"என்னப்பா ?"

சிவஞானம் தலையை உயர்த்திய நேரத்தில், குழந்தை படுத்துக் கிடந்த கட்டிலின் பகுதியிலிருந்து மெல்லிய சத்த மொன்று கேட்டது.

விரைவுடன் அவ்விடத்திற்கு நகர வேண்டியவனுனுன் சிவஞானம். குழந்தை மலம் கழித்துக்கொண்டிருந்தது. இடுப்புக்குப் போட்டிருந்த கிழிசலைக் கால்களின் புறத்தில் பின்னுக்கு இழுத்துவிட்டான். குழந்தையின் முக்கலும் முன கலும் அடங்கின. துணிக்கிழிசலைக் கவனமாக நகர்த்தி இழுத்து மடக்கி மூடி அறையின் ஓரத்தில் வைக்கப்போனுன் !

"மல்லிகா !..." என்று ஒரு முறை தன்னுள் சொல்லி ஏக்கப் பெருமூச்சிழைத்தான் அவன்.

அப்போது, "அண்ணுச்சி, அந்தப் பீத்துணியை எங்கிட்டே போடுங்க. நான் கசக்கிட்டு வந்துடுறேன்" என்ருன் ரிக்ஷாக் காரன்.

அவனை ஏறிட்டுப் பார்த்த சிவஞானம் செருமத் தொடங்கினன். "வேண்டாமப்பா. என் விதி என்னேடவே இருக்கட்டும் !....பொழுது படட்டும். நானே என் கடமையைச் செஞ்சுக்குவேன் !..." என்ருன். குரல் தழுதழுத்தது. "நீ உட்காரப்பா !" என்று வேண்டினன்.

"ஆண்டவன் ரொம்பப் பொல்லாதவன், அண்ணுச்சி !" ரிக்ஷாக்காரன் பேச்சில் வெஞ்சினம் எடுப்பாக இருந்தது. நின்றுகொண்டே இருந்தான் !'

"விதிதானப்பா ரொம்பப் பொல்லாதது !" என்ருன் சிவஞானம். அனுபவித்த வெங்கொடுமையின் தணல் இருந்தது, பேச்சில்.

அந்தித் தென்றல் சுகம் காட்டியது.

"விதின்னு ஒண்ணு இருக்குதுங்களா, அண்ணுச்சி ?" ரிக்ஷாக்காரனின் வினவில் ஆத்திரம் கோலோச்சியது.

"விதின்னு ஒண்ணு இல்லேன்னு சொல்றீயாப்பா ?" ஏக்கத்தின் தாபத்துடன் அவனை நிமிர்ந்து ஊடுருவிப் பார்வையிட்டான் சிவஞானம். அவன் இதயத்தில் சாவின் சந்நிதியில் ஊசலாடி 'வரம்' கோரிய மல்லிகா தோன்றிஞளோ ?

"ஆமாங்க !" அழுத்தமாகப் பதில் மொழிந்தான் ரிக்ஷா வாலா.

"அப்படின்ஞ, தாயில்லாக் குழந்தையாக என் செல்வம் தவிக்கிறதுக்கும், மனைவியை இழந்த துரதிர்ஷ்டசாலியாக நான் ஏங்கிக்கிட்டிருக்கிறதுக்கும் யார் பொறுப்பின்னு உனக்குத் தோணுது ?"

"ஆண்டவனேதான் இந்தக் கொடுமைக்குப் பொறுப்பு !" என்று அழுத்தம் திருத்தமாகச் செப்பினன் அந்த ஏழை.

"ஆண்டவனை நல்லவன் என்று அல்லவா எல்லாரும் சொல்ருங்க ?"

"கஷ்டத்தை அனுபவித்துப் பழகாதவங்கதான் அப்படிச் சொல்வாங்க !" என்று மெய்யுணர்வைத் துல்லிதமாகக் கண்டு பிடித்த பாங்கில் பேசினான் ரிக்ஷாக்காரன்.

"அப்படின்னா ! ஊழ்வினை - விதி என்கிறதெல்லாம் பொய் தானே ?"

ரிக்ஷாக்காரன்' அவனையே விழித்து நோக்கினான். "அதெல்லாம் இந்த ஏழைக்குப் புரியாதுங்க, அண்ணாச்சி !.... நான் நிதமும் பகவானை மனசுலே நினைச்சுக் கும்பிட்டிட்டுத்தான் சூலம்பற சாயா சாப்பிடுவேன். அப்படியே போன தை மாசம் வரைக்கும் இருந்தேன். அப்போதான், என்னோட பெண்சாதி தெய்வானை ஒரு ஆம்பளைப் பிள்ளையைப் பெத்துப் போட்டுப் பிட்டு கண்ணை மூடிடுச்சுங்க !... அப்படின்னா, நான் கும்பிட்ட தெல்லாம் அர்த்தமில்லாமப் போச்சின்னுதானுங்களே அர்த்தம் அண்ணாச்சி !... உங்க கஷ்டம் கவலை, எல்லாத்தையும், என்னாலே அனுபவபூர்வமாய்ப் புரிஞ்சுக்கிட முடிஞ்சுதுங்க !" என்று குரல் கம்மச் சொன்னான்.

"ஐயையோ, பாவமே !" என்று அதிர்ச்சியடைந்தான் சிவஞானம். 'உசும்ப'த் தொடங்கிய குழவியை மெள்ளத் தட்டிக்கொடுத்தான்; மூக்குப்பற்றைப் பற்றுக்கொண்டு துடைத் தான். மதலை அழும்பு பண்ணி விடவில்லை.

குழந்தை திடுதிப்பென்று, "....ம்....மா!....அ....ம்...மா !" என்று குரல் முழங்கத் தொடங்கியது. நல்ல காலமாக அது அழுது வைக்கவில்லை !

"அட பாழும் கடவுளே !" என்று குறைப்பட்டான் ரிக்ஷாக்காரன், துடிதுடிப்புடன் ! குழந்தையைத் தட்டிக் கொடுத்து உறங்க வைத்தான் சிவஞானம். தொண்டையைக் கனைத்துக்கொண்டு பேசலானான் :

"நாம பட்ட கஷ்டத்திலே தெய்வத்தை நிந்தனை செய்யறோம். அது அவ்வளவு சரின்னு எனக்குப் படல்லே !.... என் சம்சாரம் மல்லிகா காய்ச்சல் கண்டு படுத்த படுக்கையாய்க் கிடந்த மூணு நாளிலே மூணு கோடி தடவை 'பகவானை தோத்திரம் செஞ்சிருப்பேன் !...கடைசியிலே எனக்கு லவிதம் இல்லை. அவள் கண்ணை மூடிப்பிட்டாள். ஆனா, தெய்வம் கண்ணை மூடிட்டதாய் நான் நினைக்கத் துணியலே !....அப்படி

நினைக்கத் தொடங்கினேன்னு, அப்புறம் தாயில்லாத என் குழந்தையை எப்படி என்னாலே வளர்க்க முடியும்? நான் எப்படி இந்தச் சிசுவை வளர்க்க இயலும்?.... 'அம்மா'ன்னு கூப்பிடுதே இது, நான் எங்கே போய்க் கூப்பிடுவேன் இதோட அம்மாவை? இப்ப, என்னமோ ஒரு ஞாபகத்திலே தூங்க ஆரம்பம் பண்ணிடுச்சு. ஊம், அதாலேதான் விதி இதோட தாயைக் காணுமல் அடிச்சிட்டுது அப்படின்னு சொன்னேன் நான்! நீ கூட முழிச்சே!... நாம ரெண்டுபேரும் ஒரே வகையான கிலேசத்தின் சந்நிதானத்திலே வகையற்று நின்னுக்கிட்டிருக்கோம்! நீ மனசைத் திடப்படுத்திக்கிட்டு இருப்பா!" என்று தேறுதல் சொன்னுன் சிவஞானம். விரக்தியைக் கடந்து பேசினுன். தனக்குத்தானே தலையை உலுக்கியபடி இருந்தான்!

"படிச்சவங்க நீங்க. உங்களுக்கு ஆறுதல் சொல்ல எனக்கு மார்க்கம் தெரியலேங்க!...ராஜாவை நல்லபடியாய்க் காப்பாத்திப்பிடுங்க!....நீங்க நம்பிக்கிட்டிருக்கிற—இன்னமும் நம்பிக்கை வச்சிருக்கிற அந்தப் பகவான் கட்டாயம் ராஜாவைக் காப்பாத்திக்கொடுப்பாருங்க!...ஜனதாவுக்குத்தானுங்களே நீங்க பட்டணத்துக்கு ரயிலேறப் போறீங்க?...." என்று விசாரித்தான் ரிக்ஷாக்காரன்.

"ஆமாப்பா!"

"அப்பாலே நானே வந்து உங்களை அழைச்சுக்கிட்டுப் போய் ரயில் ஏற்றி விடுறேனுங்க!....வாசலிலே ரிக்ஷா நிக்குது! புது ஆட்சியிலே போலீஸ் கெடுபிடி ஜாஸ்திங்க!"

"ரொம்ப நன்றியப்பா! ஒரு காப்பி மட்டும் சாப்பிட்டுப் போ!" என்றுன் சிவஞானம். ஒரு மின்விசையை அழுத்திஞன்.

அடுத்த ஐந்தாவது நிமிஷத்தில் வந்த பையன், இரு செட் காப்பி கொணர்ந்தான்.

ரிக்ஷாக்காரன் கையெடுத்துக் கும்பிட்டபடி பிரிந்தான். அந்த ஏழை மொழிந்து சென்ற வார்த்தைகளும், 'ராமையா' என்ற அவன் பெயரும் சிவஞானத்தின் நெஞ்சில் அலை பாய்ந்து, புதிய தெளிவை உண்டுபண்ணத் தொடங்கின!

# இரண்டாவது அம்மா !

**ரா**மையா அப்பொழுது சிவஞானத்தின் கண்களுக்கு ஒரு ரிக்ஷாக்காரனுகவே தோற்றமளிக்கக் காணேம் !— விவேகம் மிகுந்த - வாழ்வின் அனுபவம் கைவரப்பெற்ற—பரிபக்குவம் அடைந்த ஓர் அசல் மனிதனுகவே தோன்றினுன். சுயநலமும் கபடுசூதும் ஆசைப்பித்தும் கொண்ட மனிதப்பிண்டங்களின் நெரிசலுக்கு மத்தியில் பழகிவிட்ட அவனுக்கு, அந்த ஏழைக் கூலிக்காரன், அன்ருடக் கூலியில் வயிறு வளர்க்கும் ஒரு ரிக்ஷாக்காரனுகத் தோன்ருததில் வியப்பில்லைதான். அவன் சராசரி மனிதனுக்கும் கூடுதலான ஓர் அந்தஸ்துடன், அச்சமயம் சிவஞானத்தின் படித்துணர்ந்த மனத்தினிடம் மதிப்பெண் பெற்று விளங்கினுன்.

ராமையாவின் பழக்கம் தனக்கு ஏற்பட்ட நிலை தெய்வச் சித்தத்தின் ஏதோ ஒரு தூண்டுதல் போலவே அவனுடைய உள்ளுணர்வுக்குப் பட்டது. பட்ட மரம் துளிர்த்த பாங்கிலே, அவனுள் ஒரு புதிய தெளிவும் பிறந்திருந்ததை அவன் தீர்க்க மாக உணர்ந்திருந்தான். ராமையா எப்படி வாழ்க்கையை புதிய கோணத்தில் சித்திரித்துவிட்டான் !....

மல்லிகா சித்திரித்துக் காட்டியதை விடவா ? 'மல்லி !...'

முப்பது நாட்களுக்குப் பிறகு சிவஞானத்திற்கு அக்கணம் தான் சிரிக்க வேண்டும் போலிருந்தது. அழுது அழுது பழக்கப் பட்டு—பழக்கப்படுத்திக்கொண்டு காலத்தின் நாட்களை நழுவ விட்டவாறு இருந்த அவனுக்குத் தன்னுடைய இந்தப் புதிய மாற்றம் தவிர்க்க முடியாததொரு நிர்ப்பந்தம் போலவும் தோன்றிற்று. அவன் தன் செல்வத்தைப் பார்த்தபோது, அது அமுதப் புன்னகையைச் சிந்திக்கொண்டிருந்தது. அப்பா சிரிக்கப் போகிருரென்று அந்தத் தெய்வத்திற்குத் தெரியும் போலும் !....

மழலையின் சிரிப்பு அவன் சிரிப்பில் அகம் பார்த்துக் கொண்டது.

குழந்தை இதற்கு முன் சிரித்த தருணங்களிலெல்லாம் அவன் உயிர்ப் பதைப்புடன் விக்கி விசித்து அழுத நிலைமைகளை அவனால் மறந்துவிட முடியாதுதான்.

இப்பொழுது அவன் சிரித்தான் ; மனம் விட்டுச் சிரித்தான். அவன் சிரிப்புக்குக் குழந்தையின் அழகுப் புன்னகை மட்டும் காரணமல்ல ; அவனுடைய மல்லிகாவும்தான் காரணம் !....

"மல்லி, உன் சிரிப்பை நான் முச்சூடும் பார்த்துக்கிட்டே—கேட்டுக்கிட்டே இருக்கலாம் போலத் தோணுது எனக்கு. அப்புறம் எனக்குப் பசி எடுக்கவும் மாட்டாது ! ஆமாம் !" என்று சிவஞானம் உள்ளார்ந்த பெருமையின் பெருமிதத்துடன் தன்னைக் கொண்டவளைச் சிலாகித்துப் பேசிய பேச்சுக்களை அவன் எவ்விதம் மறப்பான் ?

காஞ்சீபுரப் பட்டின் ஜரிகை முந்தியாக நாணமூரல் இழைத்து விளங்கிய அக்கனவின் கனிவுப் பொழுதுகளை அவன் எப்படி மறப்பான் ?

மல்லிகா இப்போது எங்கே போய்விட்டாள் ?

ஏன் போய்விட்டாள் ?

பாவம் !...

பாவத்தையும் புண்ணியத்தையும் கூட்டுப்புள்ளி போட்டுக் கணக்கிடும் சாகஸத்தின் விதியை அவன் அறிய மாட்டானே, பாவம் !....

மஞ்சள் வெயில் அவனுக்கு முகத்தில் அடித்தது. எழுந்தான். ஜன்னல் கதவுகளை அடைத்துவிட வேண்டுமென்று நினைத்து எழும்பியவன், கொண்ட எண்ணத்தைச் செயற்படுத்தாமல் அப்படியே நின்றான்.

முதன் முதலாக மல்லிகாவை அழைத்துக்கொண்டு வந்து தஞ்சைப் பெரிய கோவிலையும் அரண்மனையையும் சரஸ்வதி மஹாலையும் காண்பித்துவிட்டு, இதே மாளிகையில், இதே அறையில் தங்கியிருந்த போது, இம்மாதிரியான மஞ்சள் வெய்யிலுக்குத் திரையிட முனைந்த அவன் செய்கைக்கு மறுப்

பளித்தாளே மல்லிகா ?—"அத்தான், அழகான இயற்கையின் அழகு உச்சத்தில் இருக்கும் நேரம், உதய காலமும் இம்மாதிரி யான அந்திப் பொழுதுந்தான் !.... இல்லீங்களா ?" என்றாள் மல்லிகா.

அதற்கு அவன் அர்த்தபுஷ்டியுடன் சிரித்தான். "உனக்கு இந்த வெளிச்சம் ஒத்துக்காதோன்னு நினைச்சுத் தான், நான் கதவை மூட நினைச்சேன். மற்றப்படி, எனக்கு இயற்கையென்றால் எவ்வளவு பிராணன் என்கிற ரகசியந்தான் உனக்கு இந்தக் கொஞ்சகாலத்துக்குள்ளே தெள்ளத் தெளியப் புரிஞ்சிருக்குமே !' என்று நடப்பைப் பிட்டு வைத்தான் அவன்.

அவள் அப்பொழுது எத்துணை கருவத்தோடு புன்னகை செய்தாள் ?

தன் மனப்போக்குக்கு அனுசரணையாகத் தன் துணைவன் பேசினால், துணைக்குரிய துணைக்கு மகிழ்வு பூக்காதா ?

ஆனால், இப்பொழுது அதே மாலை வெய்யில் அவனது பழைய நினைவினைத் தூண்டி, அந்நினைவை வேதனையாக்கித் துளைத்து, அந்தச் சங்கடத்தின் எரிச்சலை மிகைப்படுத்திக் காட்டிவிடவே, அவன் அவ்வாறு தன்னை மறந்த பதட்டத்தில் பலகணிக்கதவை அடைக்கத் துடித்தான். என்றாலும், மல்லிகா நினைவு—அமரநினைவு அவனைத் தடுத்தது : மல்லிகா !...'

நாற்காலியில் அமர்ந்திருந்தவன் சிசுவைப் பார்த்தான்.

அதன் இதழ்களின் செம்மையில் அழகிய உயிர்ப் புன்னகை நெளிந்து அடங்கியது. நல்ல தூக்கம். எழுந்தான் சிவஞானம் ; குழந்தையையே இமைக்காமல் ஒரு கணம் நோக்கினான். அவன் கண்கள் குளமாயின. 'மல்லிகா !...' என்று அவன் நெஞ்சம் விம்மியது. மல்லிகாவின் நினைவுச்சின்னத்திற்கென்றுதான் அதன் மூக்கும் கண்களும் மல்லிகாவினுடையதைப் போலவே அமைந்துவிட்டிருக்கின்றனவா ? படைப்பின் விளையாட்டு இவ்வளவு சித்திரவிசித்திரம் கொண்டதா ? கண்களைத் துடைத்துக்கொண்டான். சொட்டுக் கண்ணீர் அதன் பட்டு மேனியில் சிந்தினாலும், அது விழித்துவிடுமே ! கழுத்தில் இழைந்து கிடந்த பவுன் சங்கிலியின் பதக்கத்தைச் சமன் பார்த்து இழுத்துவிட்டான். நீட்டி நெளித்துக்கொண்டிருந்த

பாதங்களை மெதுவாகத் தடவிக் கொடுத்தான். பட்டுரோஜா வின் பனி இதழ்களை வருடிவிட்ட மாதிரியான ஓர் இன்ப சுகத்தை அவன் அடைந்தான்.

'குழந்தை வளர்ப்பு' நூல் வடிவில் கிடந்தது.

இன்பசுகம் உடலில் உறைந்தது.

அடைந்த அவ்வின்ப சுகம் சுட்ட உண்மையை அவன் மனச்சான்று அறிந்திருந்தது.

உண்மை சுடும் என்பார்களே !

உள்ளே செலுத்திய காப்பி நெஞ்சில் கரித்தது. மண்டையை உடைத்தது. கட்டை முனையில் வாகு பார்த்து தொங்கவிடப்பட்டிருந்த பர்மாப் பையில் கை விட்டுத் துழாவினான். அப்போது, அந்தப் பையை பர்மா பஜாரில் வாங்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி வெற்றி பெற்ற மல்லிகாவின் செயலை எண்ணிக்கொண்டான் அவன். கையை எடுத்து, சிகரெட்டுப் பெட்டி ஒன்றையும் எடுத் தான். ஆனால், பெட்டி காலியாக இருந்தது. அவனது உள் மனத்திற்குக் கிட்டிய நிதர்சனத் திருட்டாந்தமோ ?

காலியாகக் காணப்பட்ட கட்டிலை அடைந்த சிவஞானம் அதையே வெறிக்கப் பார்வையிட்டான். விரக்தியுடன் நெடுமூச்செறிந்தான். துணை இருந்தவள், துணையை விட்டு விட்டு, துணையின்றிச் சென்றுவிட்ட கதை, பரிதாபம் குழைத்து, அவனது மனிதாபிமானம் மலிந்த மனிதத் தன்மையின் மன இயக்கத்தை அணைத்தது. நின்றவன், பெருமூச்சை நிறக வொட்டாதவனாக, ஏறித் தாழ்ந்த நெஞ்சத்துடன் மெத்தையில் சாய்ந்தான். பஞ்சு மெத்தை நெருஞ்சி முள்ளெனக் குத்தியது. தலையணையை நகர்த்தித் தலைக்கு அணை கொடுத்தான். தலைவலியை அமர்த்தியடக்கக் கையாண்ட உபாயமாக அச் செயல் இருக்கக் கூடும்.

குழந்தையின் பக்கம் தாவித் தாவி மீண்டன அவனது கருவண்டுக் கண்கள்.

குழந்தை அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. அந்நிலை யிலும் அதன் பிஞ்சுக் கரங்கள் அதன் அருகிருந்த காலி இடத்தைத் தடவியவாறு இருந்தன. பாவம், அன்னையின்

பாலமுதத்தைப் பருகத்தான் அக்கரங்கள் அவ்வாறு தடவிக் கொண்டிருந்தன !

சிவஞானத்திற்குப் பொட்டில் அறை விழுந்த மாதிரி இருந்தது. 'தெய்வமே, நீ என்னைச் சோதித்ததோடு இந்தக் குழந்தைத் தெய்வத்தையும் அல்லவா சோதித்துவிட்டாய் ! ஐயையோ, தெய்வமே ! ஐயோ ராஜா ! ஐயோ மல்லிகா !' உந்திக்கமலத்தில் பிறந்த சலனம், அவனது அங்கங்கள் ஒவ்வொன்றையும் நிலை குலையச் செய்தது. வழிந்த சுடுநீரை வழித்துவிடக்கூடச் சிந்தையற்று, சிலை நிலையில் அமர்ந்திருந்தான். 'சடக்' என்று அவன் எழுந்து, பையிலிருந்த பாலூட்டும் சீசாவை எடுத்துச் சுத்தப்படுத்தினான். பால் சப்பும் ரப்பரைக் கழுவினான். பிளாஸ்கில் இருந்த பாலை எவர்சில்வர் டம்ளரிலும் டபராவிலும் ஊற்றினான் ; ஜீனி தூவினான்; ஆற்றினான் ; நுனி விரலில் துளி எடுத்து நாக்கின் நுனியில் வைத்துச் சுவை பார்த்தான். இன்னும் துளி ஜீனித்துகள்களைத் தெளித்தான் ; ஆற்றினான். வடி கட்டும் துணியைத் தேடி எடுத்தான். சொட்டுப்பாலை எடுத்துத் தரையில் வைத்துப் பார்த்தான். நீர் மூன்று பங்கும் பால் ஒரு பங்குமாகத்தான் ஆறு மாதச் சிசுவுக்குக் கொடுக்க வேண்டுமென்னும் டாக்டரின் கட்டளையை அவன் மறந்துவிட மாட்டான். நிம்மதியடைந்த மனத்துடன் வடி கட்டினான். சிராகவும் நிதானமாகவும் சீசாவில் ஊற்றி, ரப்பரைச் செருகினான். குழந்தைக்குப் புகட்டினான் பாலை. அது ஆவல் துள்ள பாலருந்தியது. பாதி முடிந்ததும் இருமியது. தொண்டைக் குழியில் தடவிக்கொடுத்தான். மறு பகுதியைக கொடுத்தான். செல்லவில்லை. சீசாவை வைத்தான். அதற்குள் சிறுநீர் பெருகியது. துணியை எடுத்து பழைய அசுத்தத்துணியுடன் சேர்த்தான். வேறு புதிய துணிக் கிழிசலைக் குழந்தையின் இடுப்புக்குப் போட்டான். அது அப்படியும் இப்படியும் புரண்டது. குஞ்சுத் தலைமயிரை நீவிக் கொடுத்தவண்ணம், வண்ணப் பொற்சிலையை உறக்கப்படுத்தினான். அவனுக்குக் கொட்டாவி வந்தது. மண்டை வலி வேறு சேர்ந்துகொண்டது. மல்லிகா நிழலாடிய நெஞ்சுடன் அவன் குழந்தையை ஊடுருவிப் பார்த்தான். அது தூங்கி

விட்டது! அவன் பெருமூச்சுடன் தன்னுடைய கட்டிலைச் சரணடைந்தான்.

அழைக்கும் மின் விசை மணிச் சத்தம் அழகு மாளிகையின் எடுபிடிப் பையனை இட்டுக் கொணர்ந்தது. பெயர்தான் பையன். வந்தவன் ஒரு பையனுக்குத் தந்தை.

"புண்யகோடி வந்திருக்கேன் ஸார்! என்ன வேணும்?" மேஜைமீது இருந்த காலி காப்பி 'செட்' இரண்டையும் கீழே ஒதுக்கமாக எடுத்து வைத்தபடி கேட்டான்.

"ஒரு பாக்கெட் வில்ஸ் வேணும். பாக்கித் துட்டைக் கொண்டாப்பா!" விளக்கத்திற்குச் செலாவணி அந்தஸ்து தர ஒற்றை ரூபாய்த் தாளொன்று பளிச்சிட்டது.

சிவஞானம் மீண்டும் ரிக்ஷாக்காரன் ராமையா உதிர்த்துச் சென்ற வாசகங்களை அசைபோடலானான்.

ராமையா தற்காலிகமாக விடை பெற்றுப் பிரிகையில் சொன்னான்: "அண்ணாச்சி, வாழ்க்கை என்கிறது ஒரு கடமை. இதிலே தியாகம் அது இதுன்னு கண்டபடி நம்மைக் குழப்பிடுறாங்க சில பேர்வழிங்க!.... வாழ்க்கையை வாழ்க்கை யாக வாழ்கிறதுக்குத்தான் கடவுள் நம்மை இந்தப் பூலோகத் திலே பிடிச்சுப் போட்டிருக்கான்!... ஆகையினாலே, வாழ்க்கையை வாழ்க்கையாக — அந்த வாழ்க்கைக்குரிய மனோதர்மம் குலையாமல் வாழ வேண்டியதுதான் கடமை! உங்கள் ராஜவை, நீங்க ஒண்டியுமாய் வளர்க்கவே முடியாது. வேறே ஆயாளாலேயும் காப்பாத்த முடியாது!...ஆனபடியாலே, அதுக்கு ஒரு 'இரண்டாவது அம்மா'வை நியமனம் செஞ்சிடுங்க. இதுதான் உங்களோட அதிமுக்கியமான கடமை!.... இது என் சின்ன மூளைக்குத் தெரிஞ்ச விஷயம்!... ஒன்றை இழக் கிறதாலேயும் தியாகம் வளரும்; எதையும் இழக்காமலேயும் தியாகம் உருக்காட்ட இயலுமுங்களே!... நீங்க உங்க சம்சாரத் தோட ஞாபகம் ஒண்ணே இனி மேல் சதம்னு நினைக்கலாம். அதிலே தான் உங்க தியாகம் இருக்கிறதாகவும் இந்தத் தமிழ்ச் சமுதாயம் நினைச்சு உங்களை வெறும் சொல்லாலே புகழலாம். ஆனா, உங்க ராஜாவை — உங்க மனைவியோட செல்லக் குழந்தை ராஜாவை மறந்திடாதீங்க!...உங்க பேச்சு, மனசு,

லட்சியம் எல்லாத்தையும் படிச்சறிஞ்சுக்கிட்டதிலேயிருந்து தான் நான் — இந்த ஏழை உங்ககிட்டே உரிமையோடு — மனிதாபிமானக் கடமையோடு—இப்படி வெட்ட வெளிச்சமாய்ச் சொல்லுறேன் !.... அப்படி நீங்க உங்க ராஜாவுக்கு ஒரு இரண்டாவது அம்மாவைக் கொடுத்தால்தான், நீங்க நம்பி யிருக்கிறபடி, உங்க தெய்வம் உங்க ராஜாவை வளர்க்க முடியும் !.... வளர்த்துக் காப்பாத்தவும் முடியுமுங்க, அண்ணுச்சி !....”

சிவஞானத்தின் விழி வரம்புகளில் கண்ணீர் வரம்பின்றிச் சிதறிக்கொண்டேயிருந்தது.

ராமையா உண்மையிலேயே ஒரு ரிக்ஷாக்காரன்தானு ?....

4

# புனித அக்கினி

எரிந்த சிகரெட்டுகள் எரியாமல் உமிழ்ந்துகொண்டிருந்த புகைத்திரள் அப்போது சற்றே விலகியிருந்தது.

வெறியாட்டம் போட்டுக்கொண்டேயிருந்த வேதனையின் புகைச்சல் அச்சமயம் ஓரளவு அடங்கிவிட்டிருந்ததாகவே உணரலானான் சிவஞானம். அவன் கண்களை மூடி மூடித் திறந்தான். இமை வரம்புகள் ஒட்டி ஒட்டி விலகி, முத்தார்த்திருந்த நீர் முத்துக்களை விலக்கிவிட்டன. நெஞ்சைப் பிடித்துக்கொண்டு இருமினான். நெஞ்சு வலித்தது. களைப்பு மேலோங்கியிருந்தது. முகத்தின் வேர்வையை இயற்கைக் காற்றும் செயற்கைக் காற்றும்கூட அகற்றக்கூடவில்லை. இதயத்தின் கொதிப்புத்தான் அவ்வாறு வேர்வையாக மாறிக் கொட்டிக்கொண்டிருந்தது போலும்!

மேஜைமீது படியாமல் கீழ் முனையில் தொங்கி, காற்றில் பறந்துகொண்டிருந்த செய்தித்தாள், மேஜையின் மையத்தில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியை அசைக்க முயன்றுகொண்டிருந்தது — வினையை அல்லது விதியை மனிதன் அசைக்கப் பாடுபடுவானே, அப்படி!

சிவஞானத்துக்கு உள்ளூர ஒரு கலவரம் ஊடாடியது. தாள் அக்கண்ணாடியை வீழ்த்திவிடுமே என்று பயந்தான். ஆகவே, எழுந்தமர்ந்துகொண்டிருந்த அவன், கட்டிலை விட்டுக் கீழே இறங்கினான். இறங்கின அவசரத்தில் மல் வேஷ்டி பின்னிக்கொண்டது. சரிப்படுத்தக் கீழே குனிந்தான். விழுந்தது பர்ஸ் எடுத்தான். வேஷ்டியை இழுத்துவிட்டுக் கொண்டு நிமிர்ந்தான். வட்டக்கண்ணாடி அவர் பார்வைக்கு இலக்கு ஆயிற்று. அவன் கைந்நொடிப் பொழுது அப்படியே அயர்ந்து போனான்.

முப்பது நாட்களாக க்ஷவரம் செய்யப்படாமலிருந்த தாடியும் மீசையும் அவனை எப்படி உருமாற்றிவிட்டன !.... களை இழந்து போய்விட்டிருந்த அந்த அழகு முகம் எப்படிக் கறுத்து விட்டது !.... அவனுக்கு நெஞ்சை என்னவோ செய்தது. கண்கள் துயரத்தின் வடிகாலாயின. தன்னையும் குழந்தையையும் மாறி மாறி — மாற்றி மாற்றிப் பார்த்துக்கொண்டான். வெய்துயிர்ப்பு சூடு பறக்க வெளிப்பட்டது. 'மல்லிகா !' — அவனது உதடுகள் முணுமுணுத்தன. தோல் உரிந்திருந்த இதழ்களை மெல்ல பற்களால் கடித்துக்கொண்டான். நாக்கின் நுனி உதடுகளைத் தொட்டுப் படர்ந்தது. மீண்டும் ஆடியில் அவன் உரு ஆடியது; விம்பினான். குழந்தையின் நினைவு அவனுக்குத் தேறுதல் ஆனது. அடக்கிக்கொண்டான். முகத்தை டவலினால் துடைத்துக்கொள்ள முனைந்தான்.

அப்போது பத்திரிகை அவன் பார்வையில் விழுந்தது.

விழுந்துவிடாமல் தொற்றிக்கொண்டிருந்த செய்தித்தாளை நிதானம் காத்து எடுத்தான் சிவஞானம். "மாலதி — மாதவன்" என்ற பெயரிணை இணையற்ற எழிலாக அவனுக்கு இப்பொழுதும் விளங்கியது. நாற்பது — நாற்பத்தைந்து நிமிஷங்களுக்கு முன்னர் கீழே சந்தித்த அந்தப் புதிய ஜோடியை அவன் நெஞ்சில் வாங்கிக்கொள்ளத் தவறவில்லை. இந்தப் பத்திரிகை ஒருவேளை அவர்களுடையதாகத்தான் இருக்குமோ ? தானும் மல்லிகாவும் மணமான புதிதில், ஜோடி சேர்ந்து வந்து, இதே மாளிகையில் இதே அறையில் ஒரு நாள் பொழுதைக் கழித்த இன்பப் பொழுதை அவன் மறந்துவிடவில்லை.

தலைப்புச் செய்தியில் சிவஞானம் கண் பதித்தான் : 'அமரர் நேரு மறைவு தினம் — நாடெங்கும் அஞ்சலி !....'

நெஞ்சில் ஓடிய வரிகளின், செய்தி அவனைக் கண்கலங்கச் செய்தது. இந்திய நாட்டின் — சுதந்திர பாரதத்தின் புதிய சகாப்தமாகத் திகழ்ந்த நேருஜிக்கு அஞ்சலி செலுத்திய தன்னுடைய முன்தின நிலையை அவன் கை தொழுதான். 'விதி என்ற ஒரு மாயப் பெரும் சக்தி எப்படி எப்படியெல்லாம் விளையாடுகிறது — விளையாட்டுக் காட்டுகிறது !.... எழுதிச்

செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற்செல்லுகிறதாமே? இது உண்மைதானே?...'

**'....உழவன் போல உழைத்துழைத்து**
**உண்மை கண்ட உத்தமன்!**
**எழுதி எழுதி இந்த நாட்டின்**
**விதியை எழுதி வைத்தவன்!...'**

கவிஞர் எஸ். டி. சுந்தரம் அவர்களின் 'நேரு அஞ்சலி' வரிகள் சிவஞானத்தின் இதயத்தைத் தொட்டன. மனம் நெகிழ்ந்தான். 'ஆஹா! எத்துணை அழகிய கற்பனை இது!... துயரத்தின் ஆழத்தை எவ்வளவு துலாம்பரமாக வடித்துக் காட்டிப் பாடிவிட்டார் கவிஞர்!... எழுதும் விதிக்கே ஒரு புது விதி செய்துவிட்டாரே அவர்! ... ஆஹா!...'

புரட்டினன் இதழை.

'...தஞ்சை மாவட்டத்தில் கூடுதலாக ஆறு லட்சம் ஏக்கர்களில் இரண்டு குறுகிய கால நெற்பயிர்களைச் சாகுபடி செய்யும் திட்டம் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து, முதலமைச்சர் திரு அண்ணாதுரை, நேற்று, உணவு கார்ப்பரேஷன் பிரதிநிதிகள், தமிழக உணவு, விவசாயத் துறை அதிகாரிகள், போர்டு நிறுவன ஆலோசகர் திரு என்ஸ்மிங்கர் ஆகியோருடன் விவாதித்தார்!...'

செய்தி மேலும் நீண்டது. அதைப் போலவே சிவஞானத்தின் பெருமூச்சும் நீண்டது. திரும்பிய மனம் குழந்தையை நாடியது. அது லேசாகப் புரண்டது; பிறகு, ஒருக்களித்தபடி உறக்கத்தைத் தொடர்ந்தது.

எழுந்தான்.

தஞ்சைப் பெரிய கோவிலின் கோபுரக் கலசம், நியூ டவர் டாக்கீஸின் உச்சிமீது பறந்த தேசியக் கொடி, நகராட்சி மன்றத்தின் பஸ் ஸ்டாண்ட், புதிய நூல் நிலையம், புதிய அரசின் பழைய துரிதப் பேருந்து நிலையம், ராஜா மிராசுதார் மருத்துவ மனை, இடிந்த கோட்டைகள் போன்ற காட்சிகள் அவன் கண்களின் முன்னே ஆலவட்டம் சுற்றின.

சுற்றும் தேர், நிலைக்கு வந்துதான் தீர வேண்டும்.

மனமும் அப்படித்தான்!

அந்தி மயங்கிவிட்டது.

கீழ்வானத்தில் வெண்ணிறக் கோளம் கோலம் காட்டி விநாடிகள் பல கடந்திருக்க வேண்டும்.

மின்விசைப் பொத்தான் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சியது.

சிவஞானம் நாற்காலியில் அமர்ந்தான். மணி ஆறை நெருங்கிக்கொண்டிருந்த உண்மையை அவனது கைக்கடிகாரம் சுட்டியது. 'இன்னும் இரண்டு மணி நேரம்தான் இங்கே வாசம்!...' என்று நினைத்தான். அந்நினைவு அவனைத் தஞ்சைச் சந்திப்பு நிலையத்திற்கும் எழும்பூர்ச் சந்திப்புக் கூடத்திற்குமாக அலையச் செய்தது. இனம் விளங்காததொரு பயமும் படபடப்பும் அவனுள் எழும்பிப் பேயாட்டம் போட்டன. 'நான் என் ராஜாவை எப்படி வளர்க்கப் போறேனோ, அந்தத் துப்பு அந்த ஆண்டவனுக்கேதான் வெளிச்சம்!... ஈசா!...' விழி விளிம்புகளில் நீர்ச்சரம் ஊசலாடியதைக் கண்ணாடியின் விழிகள் காட்டின.

மறுகணம், தன்னைப் பற்றிய சுயதரிசனத்தில் மனம் கட்டுண்டான் சிவஞானம். தன்னையும் மல்லிகாவையும் சந்திக்கச் செய்த அந்தப் புனித அக்கினியை நினைவுகூர்ந்தான். அதே அக்கினிதான் அவனுடைய ஆருயிர் மல்லிகாவையும் உண்டுவிட்டதா?... தன்னை எண்ணியவன், அக்கினியை எண்ணினான்; அக்கினியை நினைந்தவன், விதியை நினைத்தான்!—விதி என்ற ஒன்று இருக்கத்தானே செய்கிறது?—பின், அந்த ரிக்ஷாக்காரன் விதி பொய் என்றானே?... அப்படியானால், பொய்யாகிப்போன அவனது இனிய பாதியான மல்லிகாவின் மறைவுக்குக் காரணம் 'விதி' இல்லையா? ராமையா சொல்லியதொப்ப ஆண்டவன்தான் காரணமா? அவன் இதயம் அழுதுகொண்டிருப்பதற்கு, இதயமற்ற 'அவன்' செயல்தான் ஆதாரமா? ஆதார சுருதியாகி, எங்கோ ஒரு முடுக்கில் இருந்துகொண்டு சாட்டையில்லாப் பம்பரமாகச் சுழன்றுகொண்டு இருப்பதாகக் கதைக்கப் படுகிறதே அந்தத் தெய்வம், இப்படிப்பட்ட வேதனைகளை யெல்லாம் ஏன் பிறக்கச் செய்ய வேண்டும்? அதற்குரிய காரணம் என்ன? அதுதான் சிருஷ்டியின் புதிரா? இல்லை, அதுவேதான் சிருஷ்டியின் தத்துவமா?...

சிவஞானத்திற்கு மூளை குழம்பியது.

கோடைத் தென்றலுக்குச் சுகம் கூடுதல்.

சிகரெட்டின் கதகதப்பு உள்மனத்தின் சூட்டை ஆற்ற வில்லை. நெற்றிப் பொட்டின் இரு முனைகளிலும் வலது கரத்தின் கட்டை விரலையும் நடு விரலையும் அழுந்தப் பதித்தவாறு, கண்களை இறுக மூடிக்கொண்டான் அவன்.

புறக்கண்கள்தாம் மூடிக்கொண்டனவே தவிர, அகக் கண்கள் திறந்தேயிருந்தன. அவற்றின் மோனத் திரையில் ரிக்ஷாவாலா ராமையாவின் ஏழைமைக் கோலமும் அறிவுச்சுடர் தெறித்த கண்களும் நிழலாடின. 'எனக்கு வாய்த்த மகத்தான துயரம் போலவே அவனுக்கும் வாய்த்துவிட்டதே! பாவம், பரிதாபம்!...' ஆறுதல் பரிவர்த்தனை என்ற ஒரு மாயமந்திர நடப்பு மட்டும் இல்லையென்றால், உலகமே ஒரு புண்ணிய பூமியாக ஆகியிருக்க வேண்டியதுதானே? புவனமே ஒரு பைத்தியக்கார விடுதியாக உருமாறியிருக்கத்தான்வேண்டுமோ, என்னவோ?

சற்றுமுன் தன்னிடமிருந்து தற்காலிகமாக விடை பெற்றுச் சென்றபோது, தன்னுள் ஒரு தெளிவை—ஒரு புதிய தெளிவை உண்டுபண்ணிய ராமையாவின் பேச்சு, அடுத்த சில நிமிஷங் களுக்குள்ளாக எங்கோ ஓடி ஒளிந்துகொண்ட விந்தை அவனுக் குப் புரியாப் புதிராகச் சிரித்ததை அவன் மறக்க முயன்றாலும், அச்சிரிப்பு அவனை மறக்காமல் தொற்றிக்கொண்டு அவனோடு விளையாடிக் கொண்டிருந்ததே

பாவம், சிகரெட் என்ன செய்ய முடியும்?

அவன் அழுதான்.

சில கணப்பொழுதிற்கு முந்தி அவன் புன்னகை பூத்தானே—முப்பது நாள் சோகத்தைக் கடந்து புன்னகை பூத்தானே, அப்புன்னகைப்பூ ஏன் அதற்குள் வாடிவிட்டது?

'மல்லிகா!'—சிவஞானம் மண்டையில் அடித்துக்கொண்டு விம்மினான்.

மல்லிகா, வாடாத புன்னகைப் பூ ஏந்தி அவனது மனப் பந்தலில் தோன்றினாள்.

அவன் மேலும் விம்மினான்.

# 28

அவனுடைய விம்மல்தான் அவனது 'தெய்வத்தை' விழிப்பூட்டிவிட்டது !

"...ம்...மா !....அ...ம்....மா !..."

அவனுடைய மார்பைப் பிருண்டியது மதலை !

# 5

## 'மஹாலக்ஷ்மி !'...

கேவலம், ஐந்து நிமிஷங்கள் !—ஐந்தே ஐந்து நிமிஷங்கள் தாம் !...ஆனால், இதற்குள் பாவம், சிவஞானம் ஐயாயிரம் தரம் செத்துச் செத்துப் பிழைத்துவிட்டான் ! விடாப்பிடியாக அழுது 'லூட்டி' அடித்த பாலகன் ராஜாவை அவனால் சமாதானப்படுத்த முடியவில்லை. தவித்துத் துடித்தான். தலையிலடித்துக் கொண்டான். குழந்தையோ "...ம்...மா ! அ....ம்....மா !" என்று வீரிட்டலறியது. அவன் அதன் அம்மாவை எப்படிக் கொணர்வான் ? எங்கே போய்க் கொண்டுவருவான் ?

தெய்வமே !....

ராஜா, 'அ...ம்...மா !' என்று அலற, சிவஞானம் 'அ....ப்....பா !' என்று சொல்லிக் கொடுத்து அலறினான் உருக்கமாக !

குழந்தைக்கு ஏதும் புரியவில்லை போலும் ! தந்தையின் அழுகைக்கு ஏதும் புரியவில்லை.

குழவியின் அலறல் அடங்கவில்லை. கொடுக்கப்பட்ட பால் சீசாவை உதறிவிட்டது; குலுக்கிக் காட்டிய கிலுகிலுப்பையைத் தள்ளிவிட்டது. கைகால்களை உதறிக்கொண்டு வீரிட்டது. அழுகை தொடர்ந்தது ; தொண்டை கம்மியது ; புகைச்சல் இருமலும் நிற்கவில்லை. திக்கும் புரியவில்லை, திசையும் புலனாகவில்லை சிவஞானத்துக்கு. அவனது தந்தை உள்ளம் அனலிடை பூவாகக் கருகியது ; அனலிடை மெழுகாக உருகியது ; அனலிடை வெண்ணெயாய்க் கசிந்தது.

ஏதோ ஒரு வெறி மூள, குழந்தையைத் தோளினின்றும் பிரித்து எடுத்து, அதைக் கட்டிலில் பையக் கிடத்தினான் அவன். மறுகணம், குழந்தைத் தெய்வத்தின் திருச்சந்நிதானத்தில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தான் ; அழுதான் ; புரண்டான் ;

'தெய்வமே, என் தெய்வத்தைக் காப்பாற்று!" என்று புலம்பினான்.

ஏதோ ஒரு நம்பிக்கையுடன் எழுந்தான் அவன்.

அப்போது :

குழந்தை சிரித்துக்கொண்டிருந்தது.

சிருஷ்டியின் புதிர் போல் இருந்தது அச்செயல்.

'காண்பது கனவா, நனவா?' என்று மட்டுப்பட மறுத்தது அவனுக்கு. ஆதுரம் துள்ள, ஆவல் மேலோங்கக் குழந்தையை வாரி எடுத்து உச்சி மோந்தான். பீறிட்டடித்த மூத்திரம் தரையில் சிதறி, அவன் இதழ்களைத் தாண்டியது. ஆனந்தம் பீறிடச் சிரித்தான். 'அ...ப்...பா!' என்று மழலை பயின்றது செல்வம் ராஜா! 'மல்லிகா!' என்று மெய்ம்மறந்தான் சிவஞானம். மயிர்க்கூச்செறிந்தது அவனுக்கு.

இப்போது ராஜா, ராஜகளையுடன் திகழ்ந்தது, ராஜ கம்பீரத்துடன் மூரல் சிந்தியது. கொடுக்கப்பட்ட பால் சீசாவைத் தட்டிவிடாமல் காலி செய்தது; தட்டாமல் பாலைக் குடித்தது. குஞ்சுக் கால்களை அப்பாவின் வயிற்றில் முட்டிய வண்ணம், கருமமே கண்ணானது!

சிவஞானத்தின் வயிறு எப்படி நிறைந்துவிட்டது! 'ஐந்து நிமிஷத்துக்குள்ளாற எப்படிப்பட்ட பயங்கரச் சோதனையை நடத்திட்டான் என் மகன் ராஜா!... என் மல்லி பிடிசாம்பலாக ஆன அன்னைக்கு நடந்த கூத்தாட்டம் இப்பவும் நடந்திட்டுது!.... ஒரு நாள் பொழுது ஒரு யுகமாய்த் தோணுதே!... தெய்வமே, நான் எப்படி என் ராஜாவை வளர்க்கப்போறேன்?.... பகவானே, என் ராஜாவையும் என்கிட்டேயிருந்து தட்டிப்பறிச்சிக்கிணு போயிடமாட்டியே?.... இந்தத் தங்கம் மட்டும் இல்லாமலிருந் தால், நானும் என் மல்லியைத் தொடர்ந்திருப்பேனே ... ஈசனே!.... என் கண்மணியை நினைக்கிற இந்த மனசிலே எதிர்காலம் ஏன் இப்படிப் பயங்கரமாய்த் தோணுது?' மனம் மறுகியது.

சோழிகள் மாறி மாறி இடம் பெயரும் சொக்காட்டான் ஆட்டம் அவன் மனத்தில் நடந்தது.

குழந்தை கண்ணயர வேளை பார்த்துக்கொண்டிருந்தது. தரையில் படர்ந்திருந்த ஈரத்தைத் தாண்டியவாறு, கட்டில் மெத்தையில் குழந்தையைக் கிடத்தினான். பிசிறு தட்டியிருந்த தலைப்பக்கத் துணியை ஒழுங்கு செய்தான். இடுப்புத் துணியை முதுகுப்புறத்தை ஒட்டித் தள்ளினான். சப்பும் ரப்பரைக் குழந்தையின் செப்பு வாய்க்குள் பொருத்தினான். அதுரப் பரைச் சுவைத்தது, வளையத்தைப் பற்றியவாறு. ஒழுகிய சளியை டவல் கொண்டு ஒத்தினான். 'விக்ஸ்' டப்பாவைத் திறந்து, துளி எடுத்து, குழந்தையின் நாசித்துவாரங்களிலும் தொண்டைக் குழியிலும் நெஞ்சின் இருபுறங்களிலும் தடவினான். அது உறங்கியது ; சப்பும் ரப்பர் வளையம் நழுவியது.

சாந்துப் பொட்டுக்கென்று இப்படியொரு கவர்ச்சியா ?

தூக்கத்தில் சிரித்தது மதலை.

சிவஞானம் சொக்கிப் போனான்.

ஆஹா! படைப்பின் தெய்வம் அற்புதமான ரசிகன்தான் !.... ஆமாம், அட்டியில்லை !....

ஆனால், குழந்தை எங்கே அழத்தொடங்கிவிடுமோ என்று ஏக்கத்துடன் தவித்துக்கொண்டிருந்தான். பாத் ரூமுக்குப் போய், குழந்தை அசுத்தம் செய்த துணியை அலசி வர வேண்டுமென்று இராப்பொழுதிற்காகக் காத்திருந்தான். ஆனால் தூங்கும் குழந்தையைத் தனியே விட்டுவிட்டு எப்படிச் செல்வான் ? தான் கசக்கித் தருவதாக முன்வந்த ராமையாவின் ஈர நெஞ்சை மீண்டும் வாழ்த்தினான் அவன்.

மல்லிகாவின் 'அந்த வரத்தை' எப்படி மறப்பான் சிவஞானம்.

ராமையாவின் நினைவு சிவஞானத்தைப் புதிய உலகிற்கு அழைத்துச் சென்றது. அவன் பேசிய பேச்சு மீண்டும் சிவஞானத்தின் மனத்தில் எதிரொலி பரப்பியது. தன்னையும் தன் குழந்தையையும் வைத்து, எதிர்காலத்தைப் பார்த்த போது உண்டான பயமே ஒரு புதிய உலகமாகத் தோன்றத் தொடங்கியது ; அப்புதிய புவனத்தில் ராமையா—ரிக்ஷாக்காரன் ராமையா-ஒரு புதிய தெளிவை மீளவும் உண்டுபண்ணிக் கொண்டிருப்பதாக ஒரு பிரமை—ஒரு மயக்கம் ஏற்பட்டது

அவனுள்! சில நிமிஷங்களுக்கு முன்னம் இம்மாதிரி தன்னுள் ஒரு புதிய தெளிவு உண்டாக, ஆனால் அத்தெளிவு தோன்றத் தொடங்கிய அடுத்த சில கணங்களுக்குள்ளாகவே குழப்பமாக உருவெடுத்து—உருக்காட்டிய விசித்திரச் சோதனையையும் அவன் மறந்துவிடவில்லை. அப்போதைக்குப் பிறந்த தெளிவுக்கு அடித்தளமாக ஒலித்த—அடி நாதமாக இசைத்த ராமையாவின் சொற்களைக் கோவைப்படுத்திக்கொண்டான் சிவஞானம்.

'...அண்ணாச்சி, வாழ்க்கை என்கிறது ஒரு கடமை. இதிலே தியாகம் அது இதுன்னு கண்டபடி நம்மைக் குழப்பிடுறாங்க சில பேர்வழிங்க!.... வாழ்க்கையை வாழ்க்கையாக வாழ்கிறதுக்குத் தான் கடவுள் நம்மை இந்தப் பூலோகத்திலே பிடிச்சிப் போட்டிருக்கான்!.... ஆகையினாலே, வாழ்க்கையை வாழ்க்கையாக—அந்த வாழ்க்கைக்குரிய மனோதர்மம் குலையாமல் வாழ வேண்டியதுதான் கடமை! உங்க ராஜாவை நீங்க ஒண்டியுமாய் வளர்க்கவே முடியாது! வேறே ஆயாளாலேயும் காப்பாத்த முடியாது! ஆனபடியாலே, அதுக்கு ஒரு 'இரண்டாவது அம்மா'வை நியமனம் செஞ்சிடுங்க. இதுதான் உங்களோட அதிமுக்கியமான கடமை!..இதுதான் என் சின்ன மூளைக்குத் தெரிஞ்ச விஷயம்!.... ஒன்றை இழக்கிறதாலேயும் தியாகம் வளரலாம்; எதையும் இழக்காமலேயும் அதே தியாகம் உருக்காட்ட இயலுமுங்களே!.... நீங்க உங்க சம்சாரத்தோட ஞாபகம் ஒண்ணே இனிமேல் சதம்னு நினைக்கலாம். அதிலே தான் உங்க தியாகம் இருக்கிறதாகவும் இந்தத் தமிழ்ச் சமுதாயம் நினைச்சு உங்களை வெறும் சொல்லாலே புகழலாம்! ஆனா, உங்க ராஜாவை—உங்க மனைவியோட செல்லக் குழந்தை ராஜாவை மறந்திடாதிங்க!...உங்க பேச்சு, மனசு, லட்சியம் எல்லாத்தையும் படிச்சறிஞ்சுக்கிட்டதிலேருந்துதான் நான்—இந்த ஏழை உங்க கிட்டே உரிமையோடு—என் மனிதாபிமானக் கடமையோடு இப்படி வெட்டவெளிச்சமாய்ச் சொல்லுறேன்!.... அப்படி நீங்க உங்க ராஜாவுக்கு ஒரு இரண்டாவது அம்மாவைக் கொடுத்தால் தான், நீங்க நம்பியிருக்கிறபடி, உங்க தெய்வம் உங்க ராஜாவை வளர்க்க முடியும்!... வளர்த்துக் காப்பாத்தவும் முடியுமுங்க, அண்ணாச்சி!...'

சுக துக்கம், சுழல் சக்கரமென்பார்கள்.

உண்மைதான்.

சிவஞானத்துக்கும் இம்மூதுரை பொருந்தும்.

ஆனால், அவனது துயரம் அனுபவரீதியில் அளப்பரிய துயரமாகவே இருந்தது. இதை சுய அனுபவத்தின் மூலமாக உணர அவனுக்குத் துணையாக இன்னொர் ஆத்மாவும் இருந்தது. அந்தத் துணைதான் ரிக்ஷா ராமையா! துக்கத்திற்கு வாய்த்திட்ட சுகமா அவன்? அவன் பேச்சு இப்படிப்பட்ட துணிவுடன் — தூய்மையுடன்—நியாயத்துடன் எ ப் ப டி த் தா ன் வெளி வந்ததோ?

ராமையா தன்னிடம் பேசி முடித்த அக்கணத்திலும் அதை யடுத்த சில விநாடிகளிலும் தன்னுள் ஒரு புதிய தெளிவு ஏற்படத் தொடங்கியிருப்பதாக உணர்ந்தானே சிவஞானம், அந்தப்புதுத் தெளிவு எப்படி ஏற்பட்டது?.... குழந்தையோடு— ஆறு மாதச் சிசுவோடு அவன் இந்த முப்பது தினங்களிலே, அதாவது மல்லிகா—சிவஞானத்தின் மல்லிகா—விதி வழி ஏகிவிட்டபின் நிலவிய இந்த முப்பது தினங்களில் அவன் பட்ட தொல்லைகள்—தன்னால் அத்தொல்லைகளை இனிமேல் சாமான்ய மாகச் சமாளிக்க முடியாது என்கிற ஒரு நிர்ப்பந்தம் ஒரு பரிகாரம் கண்டு கொண்ட அமைதி காட்டிய புதிய தெளிவா அது?

ஆனால், தோன்றிய புதிய அத்தெளிவு—தோற்றுவிக்கப் பட்ட அப்புதுத் தெளிவு—பின்னர் எப்படி மறைந்தது? ஏன் மறைந்தது? அந்நிலையின் திரிபுக்கு அவனது மனம்தான் காரணமோ, அன்றி, அவனது உள்ளச் சான்றேதான் உடந்தையா ....?

காவடிப்பாரம், சுமப்பவனுக்குத் தெரியும்!

அப்படியென்றால், குழந்தை அப்பனுக்குச் சுமையாகத் தெரிந்ததா?

“ஐயையோ!... என் ரத்தத்தின் ரத்தம், சுமையா? இல்லை, இல்லவே இல்லை, கடவுளே!.... நான் வணங்கும் என் மனச் சாட்சியின் ஆணையாக அப்படி நான் நினைக்கவேயில்லை.... என் மனத்தை வேள்வித் தீயாக்கி, என் மன எண்ணங்களை அக்கினிப் பிரவேசம் செய்து பார்த்த போது, இப்படிப்பட்ட விசித்திரச்

சிந்தனைகள் என்னுள் அலை பாய்ந்து எழுந்துவிட்டன! நாணயத்தின் இரு புறங்களைப் போல, மனத்தின் இரு பக்கத்து நினைவுகள் என்னை இவ்வாறு ஏன் அலைக்கழிக்க வேண்டும்?... ஈசனே... என் ராஜா எனக்குச் சுமையே இல்லை!.... என் தெய்வத்தைக் காக்க வேண்டுமென்ற விரதம்தானே என்னை இந்நேரம் வரை உயிருடன் வைத்திருக்கிறது!... தெய்வமே! என்னைக் காப்பாற்று! மல்லி, உன் தெய்வத்தை—உன் ராஜாவைக் காப்பாற்றிக்கொடு!... தெய்வமாகி நிற்பவளல்லவா நீ!" என்று வாய்விட்டுப் புலம்பினான் சிவஞானம்.

நழுவி ஓடிய விநாடிகள் சிலவற்றிற்கு முன்னம் அவனுடைய மனப்பந்தலில் ஒயிலாடி, எழில் காட்டித் தோன்றிய மல்லிகா இப்போதும் தோன்றினாள். மனப்பந்தலில் தோன்றிய அவள், மணப்பந்தலில் காட்டிய கோலத்தை ஏந்தித் திகழ்ந்தாள். "என் உயிரையும் உள்ளத்தையும் உடலையும் உங்கள் வசம் ஒப்படைத்து இந்த அக்கினியைச் சாட்சி வைக்கிறேன், அத்தான்!" என்று சொல்லாமல் சொன்ன அந்தக் கோலம் அவனுள் தோன்றியது. அக்கினியின் தெய்வ சாட்சியமாக அமைத்த அந்த வாழ்விற்கு மற்றுமொரு சாட்சியாகத்தான் ராஜா அமைந்துவிட்டான்!

சிவஞானம் முகத்தைத் துடைத்துக்கொண்டு பக்க வாட்டில் பார்வையைத் திருப்பிப் பார்த்தான்.

குழந்தை உறக்கத்தின் பிடியில் கட்டுண்டிருந்தது.

அவனது உள்ளத்தின் உள்ளம் தன்னுடைய முதல் இரவுக் காட்சியில் போய் அமர்ந்துகொண்டது. "அத்தான், பேழையும் அதன் மூடியும் போல, நீங்களும் நானும் விதி வசத்தால் ஒன்று கூடியிருக்கோம்; உங்க மல்லியை என்றென்றும் நீங்க மறந்திட மாட்டீங்களே, அத்தான்?" என்று கேட்டாளே மல்லிகா? ஏன் அப்படிக் கேட்டாள்? விதியின் கேள்வியா அது? இல்லை, வினை விடுத்த வினாச்சரமா அது?

அவன் விம்மினான். "மல்லி, கதைகளிலேயும் சினிமாக்களிலேயும் காதல், அப்படி இப்படி என்று வரும். ஆனால், நீயும் நானும் முதன் முதலாகச் சந்திச்சு, அந்தச் சந்திப்பின் மூலமே நம் காதலைப் பிறப்பித்துக்கிட்டோம். அந்த வகையிலே இந்த

அறந்தாங்கி மண்ணுக்கு நாம் கடமைப்பட்டவங்க. என்னை நம்பு. நீ நம்புகிற அந்நம்பிக்கையைச் சாட்சி வைத்துச் சொல்லுகிறேன். என்றென்றுமே நீதான் எனக்கு உயிர், உலகம் எல்லாம்!... என் நெஞ்சிலே என் மல்லியைத் தவிர வேருெருத்தி என்றுமே புகுந்திட இயலாது, மல்லி!...” என்று கையடித்துக் கொடுத்தான் அவன்!

திடுதிப்பென்று அவன் மனத்தினுள் ராமையா புகுந்தான். அவன் அவனுள் புகுந்து விளையாட நேரம் ஏது, காலம் ஏது? அவன் உண்டுபண்ணிக் காட்டியதாகச் சிவஞானம் கருதிய அந்தப் புதிய தெளிவைப் பறித்துக்கொண்ட சாகஸம் மல்லிகாவுக்குச் சிவஞானம் கையடித்துக் கொடுத்த வாக்குறுதியைத்தான் சார்ந்ததா? அதன் விளைவாகத்தான் அவன் மனம் அல்லாடி, அவன் சிகரெட்டுப்பெட்டியைத் தஞ்சமடைந்தானே?

மல்லிகாவை மீண்டும் எண்ணினன் சிவஞானம். இப்போது அவள் மரணப்படுக்கையில் இருந்தவாறே காட்சி கொடுத்தாள். “அத்தான், என்னுடை இந்த மண்வாழ்க்கை இன்னம் கொஞ்சப் பொழுதுக்குத்தான்!...அதுக்குள்ளே உங்க கிட்டே ஒருவரம் வாங்கிக்கிட ஆசைப்படுகிறேனுங்க, அத்தான்! நீங்க என்னை எவ்வளவோ சந்தோஷமாய் வச்சுக் காப்பாத்தினீங்க. நாம் வாழ்ந்தது கொஞ்ச காலம்தான் என்ருலும், எனக்குப் பல நூறு வருஷம் உங்களோடே வாழ்ந்ததாவே ஒரு திருப்தி மனப்பூர்வமாய் உண்டாகுது. ஆனு, விதி நம்மளைத் திசை பிரிக்கச் சதி செஞ்சுக்கிட்டிருக்குது. நான் என் ராஜாவுக்கு—நம்ம ராஜாவுக்கு அம்மாவாய் இனியும் இருக்கக் கொடுத்து வைக்க முடியாதின்னு என் மனசுக்குத் திடமாய்த் தோணிடுச்சு. ஒரு வரம் தரவேணும் நீங்க!....என்றென்றைக்குமே நீங்க என்னை மறக்கமாட்டீங்க என்கிறதை நான் சத்தியமாய் மறக்கவே மாட்டேன். அதே வாக்கை நீங்க மனசொப்பிக் கட்டிக் காத்துக்கிடவும் செய்வீங்க. உங்க மனசு எனக்குத் தெரியும். உங்க மனுேதர்மத்தை-திடத்தை-வைராக்கியத்தைப் புரிஞ்சவ நான்! ஆனு, நம்ம ராஜாவுக்கு—என் ராஜாவுக்கு ஒரு அம்மா வேணுமே! அதுக்கு ஒரு இரண்டாவது தாயைக்

கொடுங்க. அவனுக்கு இரண்டாம் அம்மாவாக வரப்போற புண்ணியவதியைச் சோதிச்சுப் பார்த்து, அவளுக்கு அந்தப் புனிதப் பதவியை-பாசப் பொறுப்பைக் கொடுங்க! நீங்க என்னை எப்படி மறப்பீங்க? எனக்கு நீங்க திருப்பூட்டினவுடனேயே நான்தான் என் உயிரை உங்க உயிரோடே இரண்டறக் கலக்கச் செஞ்சிட்டேனே ?...' என்று அவள் தேம்பியவண்ணம், அவனிடம் முன் போலக் கையடித்து வாங்குவதற்காகத் தன்னுடைய நலிந்த கரங்களை நீட்ட முனைந்தபோது, விதி அந்தப் பொற்கரங்களிலே முத்திரையிட்டு இறுதித் தீர்ப்பு வழங்கிவிட்டது! "கண்ணே மல்லி, என் நெஞ்சைத் திறந்து கொட்டி அழக்கூட எனக்கு ஒரு பாக்கியத்தை நீ கொடுக்காமல், விஷ ஜுரம்னு பாயும் படுக்கையுமான சடுதியிலேயே நீ போயிட்டியே ?" என்று கதறி யழுதானே அவன் ?

அடுத்த தடவையாக ஒரு சிகரெட் எரிந்தது.

எரிந்த மனத்திற்கு அந்தச் சூடுதான் ஆறுதல் போலும் !

அடுத்த தடவையாகவும் ரிக்ஷா ராமையா சிவஞானத்துள் புகுந்துகொண்டான். அவன் பேச்சும் அவனுடன் புகுந்து கொண்டது !'...அப்படி நீங்க உங்க ராஜாவுக்கு ஒரு இரண்டாவது அம்மாவைக் கொடுத்தாத்தான், நீங்க நம்பியிருக்கிறபடி, உங்க தெய்வம் உங்க ராஜாவை வளர்க்க முடியும் ! வளர்த்துக் காப்பாத்தவும் முடியுமுங்க, அண்ணைச்சி !'

அவன் மனம்—மனத்தின் மனம் அதிர்ந்தது.

ராமையா பிரியும் கட்டத்தில் அவனிடம் தான் விடுத்த முடிவை நினைத்துக்கொள்ள வேண்டியவனுன் சிவஞானம் : "ராமையா, இந்தச் சிறு வயசிலே எனக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த மகத்தான சோகத்துக்கு நான் பதில் சொல்லித்தான் தீருவேன். என் அன்பு மனைவி மல்லிகாவின் ஞாபகம் ஒண்ணே என்னைக் காப்பாத்திப்பிடும்னும் நினைச்சிருக்கேன். என் தங்கம் ராஜாவைக் காப்பாத்துறது ஒண்ணுதான் இனி என் கடமை, லட்சியம், கனவு. இதுக்கு நான் அடிக்கடி சொன்னதாட்டம் அந்த ஆண்டவன்தான் கை கொடுக்க வேணும். பட்டணத்துக்குப் போனதும்அவனுக்கு ஒரு ஆயாவை நியமிச்சிட வேணும்

என்கிறதுதான் என் யோசனை. நானே அனுதை. இந்த நிலைமையிலே, என் சொந்தக்காரங்க யாரும் எனக்கு உதவ முன் வரவில்லே. அதனுலேதான் இத்தனைக் குழப்பம்!... ஆயாவாக வருகிறவள் நல்ல மனம் கொண்டவளாய் வந்திட்டால் என் லட்சியம் பூர்த்தியாகிவிடும். மற்றப்படி, இரண்டாம் தாரம் கல்யாணம் கட்டிக்கிடுறதாய் எனக்கு இதுவரை நினைப்பே ஓடல்லே! மல்லிகா மகாலக்ஷ்மியாக வாசம் செஞ்ச மனசு இது!... என்னைப் பார்த்தால் அதிசயமாயிருக்கும்!''

சிவஞானத்தின் இப்பேச்சுத்தான் ராமையாவைத் தீர்ப்பு வழங்கச் செய்ததோ!

அப்படியென்ருல், ராமையாவின் நிலை என்ன? அவன் தன் குழந்தைக்கு இரண்டாவது அம்மாவை நியமிக்கத்தான் போகிருனு?

சிவஞானத்தின் நெஞ்சம் மீண்டும் மீண்டும் தவித்துக் குழம்பியது.

குழந்தை 'அம்மா!' என்று அழைத்தது!

சிவஞானம் பதறினுன்!

நிலவின் மாயக் கவர்ச்சிக்குக் கேட்கவும் வேண்டுமா?

## வாழ்க்கை ஓர் ஆல்பம்!

வாழ்க்கை என்பது ஒரு புகைப்படத் தொகுப்புப் புத்தகம்.

வாழ்க்கைக்குச் சம்பவங்கள் சாட்சியாகின்றன; அந்தச் சம்பவங்களுக்குச் சாட்சி சொல்லுபவை புகைப்படங்கள்.

வாழ்க்கையில் சிரிப்பு வரவழைத்துக்கொள்ளப்படுகிறது. இதுவே பெரும்பகுதியானதொரு யதார்த்த நிலை.

படப்பிடிப்புக்கு ஆயத்தப்படும் போது, சிரிப்பு வரவழைத்துக்கொள்ளப்படுகிறது. இதுவே உண்மையான இயல்பு.

எடுக்கப்பட்ட படங்கள், நடந்த சம்பவங்களின் நடக்கின்ற நிரூபணமாகி 'ஆல்ப'த்தில் ஒட்டப்படுகின்றன. ஒருசில படங்கள் ஒட்டப்படுவதற்கென்றே வெறுமையாக விடப்பட்டிருக்கும். அவை எதிர்கால வாழ்க்கை நடப்பிற்கு எடுத்துக் காட்டு.

வருங்காலம் எப்படி, யாருடைய சூட்சுமப்புத்திக்கும் புலனாகாதோ — புலனாக முடியாதோ, அது போன்றே, 'ஆல்ப'த்தில் ஒட்டப்படவிருக்கும் படங்களின் தன்மைகளையும் யாரும் விண்டறியக்கூடுவதில்லை.

அதுதான் 'ஆல்ப'த்தின் புதிர் விளையாட்டு.

வாழ்க்கையின் புதிர் வேடிக்கைக் கூத்தும் அதுவேயன்றோ?...

சிவஞானம், பிள்ளைக்கு 'கிரைப் வாட்டர்' கொடுப்பதற்காகத் தோல் பெட்டியைத் திறந்த போது, அவன் கையோடு 'கிரைப் வாட்டர்' சீசா மட்டும் வரவில்லை; ஒரு நிழற்படமும் கூடவே வந்தது. அப்படத்தைப் புறம் பார்த்துத் திருப்பிய போது அவனது கைவிரல்கள் தீயைத் தீண்டின அமைப்பில்

துடித்தன. இரத்தக் கண்ணீரின் கறை நெடுகிலும் படிந்திருந்த அந்நிழற்படத்தை துடித்துத் துவண்ட நெஞ்சால் பார்த்தான்.

நிழலாகிப் போய்விட்ட மல்லிகாவின் நிழற்படம் அல்லவா அது !

மரணத்தை அணைத்தபின், அணைந்த விளக்காகிவிட்ட மல்லிகாவைப் படம் எடுக்கச்செய்தான் அவன். 'தெய்வமே!... மல்லிகா!' — தெய்வத்தையும் தெய்வமாகி விட்ட மானிடப் பெண் மல்லிகாவையும் அவன் அந்தரங்கம் கூவி அழைத்தது.

மல்லிகாவின் சிரிப்பு எங்கே போய்விட்டது ?

அவள் சிரிப்பு எங்கும் போய்விடவில்லை. ஆமாம், போய் விடவே இல்லை! அவன் தன் இதயத்தைத் துழாவினுன். அதோ, சிரித்துக்கொண்டிருக்கிருளே மல்லிகா! — என்றும் மணக்கும் மல்லிகைப் பூவான பூவை மல்லிகாவிடம் சிரிப்புக்கா பஞ்சம்? — மங்கல மங்கையாக, மங்கள சௌபாக்கியங்களுடன் 'போய்விட்ட' மல்லிகா, மணக்கக் கேட்க வேண்டியதில்லைதான். "அத்தான், பூவும் பொட்டுமாக நான் போய்விடக் கொடுத்துவிட்டால் போதும்," என்ருளே அவள்! — எதிர்காலத்தை உணர்ந்துதான் அப்படிப் பேசிஞளா? — ஒருநாள் ஆனந்த் தியேட்டருக்குச் சிவஞானமும் மல்லிகாவும் ராஜாவும் படம் பார்க்கப் போய்த் திரும்பிஞர்கள். எம். ஜி. எம். படம். இரண்டு பெண்டாட்டிக்காரன் கதை. கதைக்குப் பாசமே—பிள்ளைப் பாசமே—கரு. கதையை அவ்வப் போது விளக்கிஞன் அவன். அவளுக்கு ஒருசில வசனங்கள் புரியவில்லை. அவன் விளக்கம் உதவியது. படம் முடிந்து, சுவாமி நாயக்கன் தெரு வீட்டிற்குச் சைக்கிள் ரிக்ஷாவில் வந்திறங்கிச் சாப்பிட்டார்கள். படுக்கைக்கு ஆயத்தப்பட்ட போது அவள் அப்படித் தெரிவித்தாள். ஏன் அவ்வாறு இயம்பினுள் அவள்? விதிதான் அப்படிச் சொல்ல வைத்ததா அவளை?

விதி! .... விதியாவது மண்ணுங்கட்டியாவது! ...

தெய்வம்! ... தெய்வமாவது....... !

அவன் எண்ண முனைந்த சொல்லை — சொற்கோவையை முடிக்கவில்லையே. தன்போக்கில் விம்மினன் ; தனக்குத்தானே விம்மினன் ; தன்னுள்தானே அழுந்தியவனாக விம்மினன். சுடு நீர்த்திவலைகள் பனியனை முத்தமிட்டன.

சிவஞானம் சுயப்பிரக்ஞை எய்தினன். கையிலிருந்த மல்லிகாவின் இறுதிப்பயண நிலைப்படம் அவனைப் பார்த்தது ; அவன் அப்படத்தைப் பார்த்தான். பிறகு, ஆல்பத்தைப் புரட்டினன் ; காலியாகக் கிடந்த வெற்றுத்தாளில் ஒட்டுவதற் கென்று அடையாளமாக வைத்துவிட்டு, எழுந்தான். மண்டை வலித்தது ; அத்துடன் நெஞ்சும் வலித்தது. தீப்பெட்டியும் சிகரெட்டும் அவனை நாடின. புகை சூழ்ந்தது. இருமல் சூழ்ந்தது. 'இப்படியே இருமிக்கிட்டு இருந்தால், அப்பாலே என் கதி என்ன ஆகிறது ? அப்புறம் என் அருமைச் செல்வத்தின் கதி என்னவது ?' — அந்நினைவு அவனுக்குப் பரீட்சை வைக்கக் காத்திருந்த அவனது மனச்சாட்சியின் முன்னறிவிப்புச் சோதனையாக அமைந்தது போலும் ! நினைவின் வெம்மை மாறும் முன், உதட்டுக்கங்கில் பட்ட கங்கின் சூட்டை உதறியபடி, சிகரெட்டுத் துண்டை உதறி வீசினன். 'என் எதிர்காலம் என்ன வகையில் அமையப் போகிறது ? என் ராஜாவின் எதிர் காலத்திற்கு என்ன வழி சொல்லப் போகிறேன் ?....' அவனுள் வினக்கள் தொடர்ந்தன. தும்மினன். மூக்கை உறிஞ்சிக் கொண்டான். பட்டணத்திற்குப் போனதும், ஆயா ஒருத்தியை நன்கு பரீட்சை செய்து நியமிக்க வேண்டுமென்று கொண்டு வந்த முடிவு, அவனுள் விசுவரூபம் எடுத்த நேரத்தில், ரிக்ஷாக்காரன் ராமையா விசுபரூபம் கொண்டு, அவன் மனத் திரையில் புகுந்து சிரித்தான். அவன் தெரிவித்த 'இரண்டாவது அம்மா' பிரச்சினை, ஏன் சிவஞானத்தை அப்படிப் பாடாய்ப் படுத்தியது ?

இந்த முப்பது தினங்களாக—அல்ல—முப்பது யுகங்களாக அவன் கற்பனைகூட செய்து பார்த்திராத ஒரு சிக்கலைத் தோற்று விக்கத்தான் ராமையா தோன்றினனே ?....

ஏதோ சத்தம் கேட்டது.

அண்ணாந்து பார்த்தான் சிவஞானம்.

கூடு கட்டியிருந்த பறவைக்கூட்டிலே தாய்க்குருவி தன் குஞ்சுக்கு இரை கொடுத்துக்கொண்டிருந்தது. தாயும் குஞ்சும் அவன் பார்வையில் தட்டுமறித்துச் சுற்றின. அவன் பார்வையைத் தாழ்த்தி, கட்டிலை நோக்கினான்.

குழந்தை அயர்ந்த நித்திரை வசப்பட்டிருந்தது. துயரம் முழுவதையும் மறந்துவிட்ட பாவனையில் அதன் கண்கள் பாங்குடன் மூடிக்கிடந்தன. தனக்குப் பாலூட்ட அன்னை இல்லையே என்ற ஏக்கம், உள்வட்டமாக அந்தப் பிஞ்சு மனத்தில் சுழித்துக்கொண்டிருந்ததோ?

தாய்க்குருவியும் அதன் குஞ்சும் பாசப்பரிவர்த்தனைக்கு அடையாளமாகக் 'கிச்சிட்டுக்' கொண்டேயிருந்தன.

சிவஞானம் வெய்துயிர்ப்பைக் கொட்டினான்.

ஒரு சம்பவத்தை அவன் மனம் அசை போட விழைந்தது.

அமைந்தகரையில் அமைந்திருந்த விமல் அச்சகத்தில் அப்பொழுது அலுவல் பார்த்துக்கொண்டிருந்தான். அச்சகத்தின் பொறுப்புக்களை ஏற்றிருந்த நிர்வாகிக்கு அடுத்த படியாக அவன் இருந்தான். வரும் ஆர்டர்களைச் செயற் படுத்தும் பணி குறிப்பாக அவனுக்கு அமைந்தது. வழக்கம் போல, அவன் வேலை விட்டு, சிந்தாதிரிப்பேட்டைக்குச் சைக்கிளில் பறந்து வந்துகொண்டிருந்தான். அன்பு மனையாட்டி யின் இன்ப நினைவு அவனுடன் சைக்கிளை 'பெடல்' செய்திருக்க வேண்டும். மல்லிகாவின் முதற்சந்திப்பே அவனது முதல் அதிர்ஷ்டம் போல அமைந்திட்ட எண்ணக்கனவை நினைத்தான். முதற்காதல் அவன்வரை தோற்றாலும், முதற்சந்திப்பாவது காதலின் வடிவெடுத்து அவனுக்கு வாழ்வை அமைத்துக் கொடுத்த அந்தப் பொன்னான வாய்ப்பை நினைத்தான். மாமன் மகள் விஜயா அவளுக்கே உரிய அன்புடன் பழகினாலும், அவளது பணக்காரச் சுற்றுச்சார்பு அவளை எட்டாக்கொம்பில் தூக்கி வைத்துவிட்டதையும், அதன் விளைவாக அவனது முதற் காதல் வெறும் பொய்க்கனவாகிப் போன துயரத்தையும் எண்ணமிட்டான். தாய் தந்தை இழந்த அவனுக்குத் தன் மாமன் — விஜயாவின் தந்தை — தன்னுடைய பி. ஏ. படிப்புக்கு வழி வகுத்துக்கொடுத்த ஈகையை அதற்குரிய துல்லீதமான

நன்றியறிவுடன் நினைவுகூர்ந்தான். விஜயாவின் இடத்தில் உரிமைபற்றி, உறவுபற்றி, உள்ளம்பற்றி அன்பு மல்லிகாவின் துணை தனக்கு மகத்தான ஆறுதலாக அமைந்த தன்மையின் பொன்னான வாழ்வை — அவ்வாழ்வு கடத்திவிட்ட நூறு நாட்களைச் சிந்தித்தான்.

இப்படிப்பட்ட சிந்தனைகளினூடாக அவன் மனம் பின்னிக் கிடந்த நினைவுடனே தன் மனையை மிதித்தான். மிதித்ததும் அவனுக்கு வயிற்றைக் குமட்டியது. வீட்டினுள் பிரவேசித்தான்.

அங்கு மனையரசி மல்லிகா வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள்.

சிவஞானத்துக்கும் வாந்தி வந்து தொலைத்தது.

புருஷனும் மனைவியும் இத்தகைய அவதியில் சில நிமிஷங்களை மறந்திருந்தனர்.

சிவஞானம் வாயைக் கொப்புளித்துவிட்டு, முகத்தைக் கழுவிக்கொண்டு, மனைவியின் அருகே போய்க் கவலையுடன் நின்று, "காப்பி வேணுமா?... சாப்பிட்டதெல்லாம் வந்துவிட்டதே மல்லி!".... என்று ஆதரவு கனியக் கேட்டான். அவளது நெஞ்சையும் நெற்றியையும் தடவிக்கொடுத்தான். கழுத்தின் அடிப்புறத்தே துளிர்த்திருந்த வேர்வையை, குஞ்சு முடிகளை நீவித் துடைத்தான். மங்கலத்தாலி அழகுடன் ஒளிர்ந்தது.

மல்லிகா நாணம் பூத்து நின்றாள்.

அவள் வெட்கம் அவனுக்குப் புதிரானது.

"காப்பி வாங்கியாரட்டுமா, மல்லி?"

"ஊஹூம்!"

"எலுமிச்சம்பழம் வாங்கியாரேன். பாதியை நறுக்கிச் சப்பினால், வயிற்றுக் குமட்டல் நின்னிடுமே!"

"ஊஹூம்!"

"ஐயையோ, நீ ஏன் எடுத்ததுக்கெல்லாம் 'ஊஹூம்' பாட்டுப் பாடுறே? சரி, டாக்டரம்மாவையாச்சும் அழைச்சாரட்டுமா?"

"ஊஹூம்!"

"என்ன, ஊஹூம் ?..."

"ஆமா, ஊஹூம்தான் !"

சிவஞானம் கதிகலங்கிப் போய்விட்டான்.

அவனைப் பார்த்ததும் அவளுக்கே பரிதாபமாக இருந்தது. "அத்தான், என்னோட இந்த வயிற்றுக் குமட்டலுக்கு நீங்க பயப்படவேண்டிய தேவையில்லை. சந்தோஷப்படணுமாக்கும் !"

"என்ன பேசுறே நீ ?"

"தமிழ் பேசுறேனுங்க, அத்தான் !... தமிழ் பேசுறேன் !"

"தமிழ்ச் சினிமா டயலக் பேசுறே நீ !... எனக்கு ஒண்ணும் புரியலையே !.... ஓ....மை காட் !.... ஓ மைடியர் மல்லிகா !"

"இப்போ ஒண்ணும் புரியாது போனால், இன்னும் பத்து மாசம் கழிச்சு கட்டாயம் உங்களுக்குப் புரிஞ்சிடும் !.... எஸ்... உங்களுக்குப் புரமோஷன் கிடைக்கப் போகுது !.... நீங்க 'அப்பா' ஆகப் போறீங்க, அத்தான் !" என்று நாணம் கட்டி நின்றாள் அவள்.

"ஆ !... அப்படியா ?" என்று அவளைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு குதித்தான். உண்மையிலேயே அப்படிச் செய்தான். அவள் எடை அவனைக் காட்டிலும் பதினெட்டு பவுண்ட் குறைவேதான் ! பின் என்னவாம் ?...

சிவஞானம் சிலிர்த்துத் திரும்பினான்.

'ஆல்பம்' காற்றில் அலைந்தது.

ஒட்டப்பட்டிருந்த ஒரு படம் காற்றை மீறி நிலைத்தது ; பார்த்தான்.

அன்றொருநாள் இதே 'லாட்ஜில்', இதே அறையில், அவனும் மல்லிகாவும், அவன் மாமன் மகள் விஜயாவுக்கும் அவளுடைய பிராணநாதன் சபேசனுக்கும் விருந்து வைத்த சம்பவம் அவனுள் தோன்றியது. விருந்து முடிந்ததும், அவர்கள் நால்வரும் படம் எடுத்துக்கொண்டார்கள். தானே இயங்கும் அமைப்பை நிலைப் படுத்தி, அவர்கள் நால்வரையும் ஒருசேரப் படம் எடுக்க வைத்த நுட்பம் சபேசனைச் சார்ந்தது.

அழகு மாளிகைக்கு வந்த தொடக்கத்தில் தொடர்ந்த இந்நினைவினைத் துண்டித்த கட்டத்தையும் ஞாபகம் கொண்டான் சிவஞானம்.

படத்தை மீண்டும் உன்னிப்பாகப் பார்த்தான் அவன். அவன் கவனம் மல்லிகாவை விட்டு விலகவேயில்லை. கண்கள் பார்த்துக்கொண்டே இருந்தனவேயொழிய, அவன் மனம், மல்லிகாவுடன் வாழ்ந்த வாழ்வையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. மல்லிகாவின் மார்பகத்தில் மையமிட்டுப் பதிந்து சிரித்த அந்தத் தாலி — அவன் கட்டிய அந்தத் தாலி — அவன் உள்ளத்தை அறுத்தது. விதி அறுத்துக்கொண்டு அவனுடன் கண்ணாமூச்சி ஆடிவிட்டு ஓடிவிட்ட அந்தத் தாலி, அவனது பெட்டியின் அடியிலும், அவனது உள்ளத்தின் அடியிலும், மூலமும் நகலுமாக — நகலும் மூலமுமாக இருந்த உண்மையையும் அவன் மறக்கவில்லை.

கண்களின் வலி தாளவில்லை ; விழி வெள்ளத்தைச் சுண்டி விட்டு, மறுபடியும் அப்புகைப்படத்தை நோக்கினான் சிவஞானம்.

அவனுடைய மாமன் மகள் விஜயா இப்பொழுது அவன் திருஷ்டிக்கு விருந்து வைத்தாள். அவள் தன் கணவன் சபேசனுடன் மிகவும் நெருக்கமாக ஒட்டி உரசிக்கொண்டு அமர்ந்திருந்தாள். அவளது எழிலார் மார்பகத்தில் இழைந்து கொண்டிருந்த அந்தத் தாலி வெகு நயமாகச் சிரித்தது ; சிரித்துக்கொண்டேயிருந்தது !...

7.

## வரம் கேட்டாள்

க்ஷணப் பித்தம் — க்ஷணச் சித்தம் என்பார்களே, அந் நிலையின் மயக்கத்துக்கு விலக்கு விதி சொல்லாத மானிடப் பிறவியே இல்லை என்று கணிக்கப்படும் பொழுது, சராசரி மனிதனான சிவஞானம் மாத்திரம் விதி விலக்காமல் இருந்ததில் வியப்பு இல்லைதான் !

விஜயாவையும் அவளது அழகுத் தாலியையும் அவளருகில் கருவம் பொங்கக் காட்சியளித்த அவள் கணவன் சபேசனையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்த சிவஞானத்தின் மனம் அப்பொழுது தன்னுடைய பிரமசாரி கோலத்தில் போய் நின்றது. 'விஜயா !' — அவன் உதடுகள் முணு முணுத்தன. உதட்டின் எரிச்சல் அடங்கிவிட்டிருந்தது.

சிவஞானம் கூப்பிட்டான்.

கூப்பிட்ட குரலுக்கு 'ஏன் ?' என்று ஓடோடி வந்தாள் விஜயா. "அத்தான் !" என்று பதிலுக்குக் கூவிய வண்ணம் வந்தாள் அவள், அவனது மன அரங்கத்திலே !

அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை.

அவள் அன்புடன் தோன்றினாள். ஆட வந்த பொற்பாவை யாக அவனது உள்ளத்தில் ஆடினாள். அழகு ஆட, அன்பு ஆடாமல் திகழ்ந்தாள். பேசும் விழிகளும் பேசவைக்கும் கனவு களும், முல்லை நகையும், முறுவல் சிந்தும் மோனலயமும் சிந்து பாட விளங்கினாள்.

காலம் ஒரு செப்பிடுவித்தைக்காரன்.

முன்னே கழிந்த காலத்தை கழித்துவிடாமல் காட்டினான் அச்செப்பிடுவித்தையாடி.

பட்டுக்கோட்டை, சிவஞானத்தின் முன் தோன்றியது.

செட்டித் தெருவில் வெங்கடாசலத்தின் ஒரே மகள் விஜயா. அவள் பிறந்துதான் தந்தைக்கு ஜெயத்தை அள்ளிக்

கொடுத்தாள். இரண்டாவது உலக மகாயுத்தம், அவரது சாதாரணமான இரும்புக் கடையைப் பொற்குவைக் கூடமாக மாற்றியது.

அவரது சொந்தத் தமக்கையின் மைந்தன்தான் சிவஞானம். தாய் தந்தையரின் முகங்களைக் காணப் பேறு பெருத அவனுக்குத் தாய் மாமன் ஆதரவானுர். அவரது நிதியுதவிதான் அவனுக்குப் பட்டம் சூட்டியது. படிப்புக் காலத்தில் பெரும் பகுதி அவனுக்கு ஹாஸ்டல் வாசமே கிட்டியது. விடுமுறைகளில் மட்டுமே அவன் மாமன் வீட்டுக்கு வருவான். வரும் போதெல்லாம் அவனுடன் பாசத்தோடு பழகி வந்தாள் விஜயா. 'அத்தான், அத்தான்!' என்று முத்து உதிர்ந்த மாதிரி அழைத்தாள். அவன் வரை அவள் 'கடல்முத்'தாகவே பொலிந்தாள். அப்பொலிவுதான் அவள்பால் பின்னர் முதற் காதற் கொள்ளவும் தூண்டியது. அவளும் அவனை இதய பூர்வமாகவே நேசித்தாள்.

ஆனல், விதியின் தீர்ப்பு வெங்கடாசலத்தின் வாய்மொழியாக வந்து தீர்ந்தது. "சிவஞானம், உனக்கு அறந்தாங்கியில் பெண் பார்த்து என் செலவில் கல்யாணம் செஞ்சுவைக்கிறேன். விஜயாவுக்குத் திருச்சியில் மாப்பிள்ளை தயாராக இருக்காங்க. நகைக் கடை நல்லக்கண்ணு செட்டியாரின் மூன்றும் மகன்தான் விஜயாவுக்கு மாப்பிள்ளை. பெயர் சபேசன்! உனக்கு நான் யோசித்திருக்கும் பெண் மல்லிகா. அதுக்கும் தாய் தகப்பன் இல்லை. அவங்க பெரியம்மா வீட்டிலே இருந்துக்கிட்டு வருது. நம்ம விஜயா மாதிரியே அதுவும் எஸ். எஸ். எல். ஸி. படிச்சிருக்குது. கண்ணுக்கு லட்சணமான பெண் அது!" என்ருர்.

சிவஞானத்துக்குப் பேரிடியாக இருந்தது அப்பேச்சு. தன் முதற்காதல் எடுத்த எடுப்பிலேயே இவ்வாறு தோல்வி கண்டதில் அவன் மாளாத் துயர் எய்தி மறுகிக் குமைந்தான். அன்றைக்கே மாமன் வீட்டை விட்டுப் புறப்பட்டுப் போய்விட வேண்டுமென்று துடித்துத் தவித்தான். அதற்குத் தோதாக, சென்னை விமலா அச்சகமும் அவனுக்கு வேலை உத்தரவை அனுப்பி வைத்தது. விஜயா கண்ணீருடன் ரூபாய் நூறு

கொடுத்து அவனை வழியனுப்பி வைத்தாள். சதா சர்வகாலமும் சிரிப்பும் சிருங்காரமுமாக இருக்கும் விஜயா, அன்றுதான் முதன் முதலாகக் கண்கலங்கிப் பார்த்தான் அவன். "அத்தான், வாழ்க்கை என்கிறது சிரிக்கிறதுக்குத்தான் உண்டானது. உங்க அன்பும் பாசமும்தான் என்னைக்கூட இப்போ சிரிக்க வைக்க முடியாமல் தவிச்சுக்கிட்டு இருக்குது. நீங்க வாழ்க்கை பேரிலே நம்பிக்கை வையுங்க. அந்த வாழ்க்கை உங்க மேலேயும் நம்பிக்கை வைக்கும். மாமன் மகள் விஜயா உங்களை எப்பவும் மறக்க மாட்டாள்!... என்னுடை உதவி எப்ப உங்களுக்குத் தேவைப்பட்டாலும், கூசாமல் கேட்கலாம் நீங்க. அதுக்கு உரிமை உங்களுக்கு எப்பவும் உண்டு!..." என்று ஆறுதல் புகன்றாள் விஜயா.

காலம் ஓடியது.

சிவஞானம் சென்னைப்பட்டினமே சதம் என்று ஆனான். ஆனாலும், அவன் வசம் சேர்ந்திருந்த பணம் அவனுக்குத் திருமணம் செய்ய முன்வந்தது. ஒரு முறை தன் மாமன் சொன்ன அறந்தாங்கிப் பெண்ணைப் பற்றிய தகவலை ஞாபகப் படுத்திக்கொண்டான். உடனே, அப்பெண் விஷயமாக அவளது பெரியம்மா வீட்டுக்குக் கடிதம் போட்டான். போட்ட கடிதம் அவனுக்கு நல்ல பதில் கொணர்ந்தது. மல்லிகா அவனுக்குக் கிட்டிவிட்டாள்.

விஜயாவின் திருமண அழைப்பு வந்ததும், தம்பதி சமேதராக அவ்வதுவை விழாவுக்குச் செல்லவே திட்டமிட் டிருந்தான். கடைசியில், எப்படியோ தன் திட்டத்தை அவனே மாற்றியும் கொண்டான்.

அன்றைக்குத்தான் அவன் விஜயாவையும் அவள் கணவன் சபேசனையும் கண்டான். மகிழ்வு கொண்டான்.

"அத்தான்! நானும் உங்க கல்யாணத்துக்கு வரமுடியலே. அதே போல, நீங்களும் என் கல்யாணத்துக்கு வராமல் இருந்திட்டீங்க. காலம் நம்மளைத் திசைக்குத் திசையாய் மாற்றிப்பிடிச்சு. ஆனாலும், உங்களையும் உங்க சம்சாரத்தையும் சந்திச்சதிலே எனக்கு ரொம்பவும் நிம்மதி. மல்லிகா

தங்கமான பெண்ணுகவே இருக்காங்க. உங்களுக்கு ஏற்ற ஜோடிதான் !" என்ருள் விஜயா.

சிவாஞானம் நிறைவு காட்டிப் புன்னகை காட்டினுன். "உன் கணவரும் அழகான பணக்காரர் ; நல்ல மனம் கொண்டவர். உனக்குத் தகுந்த ஜோடிதான் மிஸ்டர் சபேசன் !" என்ருன்.

சுறுக்கென்று என்னவோ கடித்த உணர்வு வரவே அவன் 'ஆல்ப'த்தை மூடினுன். தரையைப் பார்த்தான். காலில் கட்டெறும்பு கடித்திருந்தது. விடுதலை பெற்ருன். 'நான் விஜயாவைக் கல்யாணம் செஞ்சிக்கிட்டிருந்தால், எனக்கு இம் மாதிரியான துயரச் சோதனை ஏற்பட்டிருக்காதே ?' — இக் கேள்வி அவனுள் எரிமலையாகக் கனன்றது.

"அத்தான் !" —

யார் அழைத்த அழைப்பு அது ?

விஜயாவா ?

அல்ல, மல்லிகா !...

கனன்று வெடித்த எரிமலையின் வாயில் அகப்பட்டுத் தவித்தான் சிவஞானம். "ஐயோ, நான் பாவி ! மகா சுயநலக் காரன் !... மல்லிகா, என்னை மன்னிச்சிடு. க்ஷணப் பித்தம் க்ஷணச் சித்தம்னு சொல்லுவாங்க. அந்தக் கதையாக எனக்குப் பித்தம் ஏறி, சித்தம் தடுமாறிட்டுது ! என்னை மன்னிச்சிடு. என் விதியை நான் அனுபவிக்கிறேன். நீ என்ன செய்வாய் ! நீ என்னுடைய தெய்வம் ! எனக்கு ஒரு ஆணையை இட்டுப்பிட்டு நீ போய்விட்டாய்! உன் குழந்தைக்கு ஒரு இரண்டாவது அம்மாவைச் சோதிச்சுப் பார்த்து நியமிக்க வேணும்னு எங்கிட்டே வரம் கேட்டிட்டுப் போய்விட்டாய் நீ !... ஆனு, என் மனச்சாட்சிதான் என் சோதனைக்கு — உன் சோதனைக்கு — ஒத்து வரல்லே !...' என்று புலம்பினுன் அவன்.

அந்நேரம் பார்த்து ரிக்ஷாக்காரன் ராமையாவும் அவனது பேச்சும் அவனுள் நுழைந்துவிடவே, அவன் திக்குமுக்காடினுன். கண்களைத் திறந்து திறந்து மூடினுன். கண்ணீர்தான் கட்டுடைத்துச் சிதறியது. வானத்தைப் பார்த்தான். அங்கு விண்மீன்கள்

தாம் கண் சிமிட்டிக்கொண்டிருந்தன. அவையும் அவனுக்கு ஒரு விடிவைச் சொல்லவில்லை !

கைக்கடிகாரத்தைப் பார்த்தான் சிவஞானம்.

மணி ஆறு, ஐம்பத்தேழு !

திரும்பினான்.

காலடியில் 'கிரைப் வாட்டர்' சீசா இருந்தது.

உடனே குழந்தையை நோக்கினான்.

அது அழகுகாட்டித் தூக்கம் பயின்றுகொண்டேயிருந்தது

"ஈஸ்வரா !" என்று தன்னையும் மீறிக் கூவினான் சிவஞானம்.

"இதோ, வந்திட்டேன் !" என்ற ஒருகுரல் 'அசரீரி' போலக் கேட்டது !

## ஈஸ்வரன்

ஈஸ்வரன் தோன்றிவிட்டார் !

சிவஞானம் நெஞ்சிடைச் சிலிர்த்தெழுந்த மனத்துடிப்பின் பல்வேறு உணர்வுக் கலவையுடன் தலையை நிமிர்த்துப் பார்த்தான்.

ஈஸ்வரனா அவன் ?

'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி'த் திகழும் அந்த ஈஸ்வரனா ?

அல்ல, அல்லவே அல்ல !

இந்த ஈஸ்வரன் ஸில்க் ஜிப்பாவும் கிருதா மீசையுமாக ஆஜானுபாகுவாக விளங்கினர். வலது கையில் இருந்த காப்பிக்கொட்டைச் சங்கிலி கட்டாயம் ஐந்து பவுன் இருக்கக் கூடும். பெரும் புள்ளிதான் — உடலில் மட்டுமல்ல, பணத்திலும்தான் ! "கூப்பிட்டீங்களே, என்ன வேணும் ?" என்று கேட்டுக்கொண்டே கட்டிலில் அமர்ந்தபடி, குழந்தையையும் பார்வையிட்டார் அவர் — ஈஸ்வரன் — 'டூப்ளிகேட்' ஈஸ்வரன் !

சிவஞானம் விரக்தியுடன் அம்மனிதரை ஊடுருவிப் பார்த்தான். "நான் ஒரிஜினல் ஈஸ்வரனை அழைச்சேன் !" என்று வேதனை அலை பாயத் தெரிவித்தான்.

"அப்படியா ?"... இப்போது அவரும் அவனை ஊடுருவி நோக்கினர். "தெய்வம் இப்போதெல்லாம் மனித ரூபத்திலே தான் வருகிறதாகச் சொல்லுறாங்க நாலும் தெரிஞ்சவுங்க !... ம்...சரி ! குழந்தைகளும் நீங்களும்தானே இருக்கீங்க ?... எங்கே குழந்தையோட அம்மா ?" என்று கேள்வி விடுத்தார் ஈஸ்வரன்.

விட்டில் பூச்சிகள் ஒளி விளக்கைச் சுற்றிக்கொண்டிருந்தன. விளக்கைப் பழம் என்று நம்பின இனம் அவை !

"குழந்தையைக் கேளுங்க, ஐயா !" என்று வேதனையின் தாபம் சுழிக்கச் செப்பினான் சிவஞானம்.

குழந்தையை நோக்கினார் ஈஸ்வரன்.

குழந்தையோ அரைச்சிரிப்புச் சிரித்துவிட்டு உறங்கத் தொடங்கியது.

பிளாஸ்கை எடுத்துத் தரையில் பத்திரமாக வைத்தான் சிவஞானம். அறந்தாங்கியில் காய்ச்சிக் கொண்டுவந்த ஆவின் பால் அவனுக்குக் கை கொடுத்தது ; குழந்தைக்குப் பால் கொடுத்தது. 'மல்லிகா !' — உயிரின் துணையாக நின்றவளை அழைத்தபோது, ஏனோ அவனது உள்மனம் அவனைச் சுட்டது. குற்றம் புரிந்தவனைத்தான் மனம் சுடுமென்பார்கள் !... பெற்ற தாயிடம் பாலமுதம் சுவைக்கும் நேரத்தில் சூப்பிய விரல்களை எடுத்துவிட்டு, ஆவல்துள்ளப் பாய்ந்து தாய்முலைப்பால் அருந்தும் குழந்தையின் நினைவு அவனுள் ஏடு விரித்தது. கைகால்களை உதறி முட்டிக்கொண்டு அது பாலுண்ணும் காட்சியே தனி !....

இப்போது...?

அது தாயில்லாப் பிள்ளையாக விதியை மறந்து, தனக்கு நேர்ந்த துயரினை மறந்து தூங்கிக்கொண்டிருந்தது.

"மிஸ்டர்... ! சொல்லுங்க. குழந்தைக்குப் பேசத் தெரியாது. நீங்க சொல்லுங்க. எங்கே உங்க பெண்சாதி ?" என்று பயம் கவ்வக் கேட்கலானார் ஈஸ்வரன்.

"செத்துப்போயிட்டாள் ! முப்பது நாள் இண்ணையோடு ஆகிவிட்டது !" என்று தேம்பினான் சிவஞானம்.

"ஆ !" — ஈஸ்வரனும் தேம்பினார். "அட பாவமே ! உங்களையும் ஈஸ்வரன் சோதிச்சிட்டானா ?..." என்று தழு தழுக்கக் கேட்டார்.

அவர் கேள்வியில் 'தொக்கி நின்ற' ஏதோ ஒன்று அவனை மனம் நெகிழச் செய்துவிட்டது. 'அப்படியென்றால்.... இவரையும்... ?' — 'ஆப்டெக் ட்ராப்ஸ்' சிசாவையும் குளுகோஸ் டப்பாவையும் பாலாடையையும் எடுத்து வைத்தான் சிவஞானம்.

பாலூட்டும் சிசாவையே வெறிக்கப் பார்த்தார் ஈஸ்வரன். "குழந்தையோட சம்ரட்சணையை — சரவரட்சணையை நீங்களே கவனிச்சுக்கிடுறீங்களா ?" என்று வினவினார் அவர்.

"வேறே நாதி ? —" கேட்டவரையே கேட்டான் அவன்.

"ரொம்ப ஜாக்கிரதையாய் இதுகளைக் கொடுக்கணும். கொஞ்சம் தடுமாறினல் குழந்தைக்குத் தட்டேறிப்பிடுமே !..." என்ருர் அவர்.

அவரை சஞ்சலம் மிஞ்சப் பார்த்தான் அவன்.

"அப்படின்ன உங்க எதிர்காலத் திட்டம் என்ன ? உங்க குழந்தையை எப்படி வளர்க்கப் போறீங்க, மிஸ்டர்... ?"

சிவஞானம் தன் பெயரை அவரிடம் தெரிவித்துவிட்டு, ஓர் அரைக்கணம் அவரை ஆழ்ந்து நோக்கினன். "ஐயா, என் மனைவியோட இன்ப நினைவிலே காலத்தைக் கழிக்கிறதுதான் என் எதிர்காலத்திட்டம் !... குழந்தையை வளர்க்கிறதுக்கு ஒரு ஆயாவைத் தேர்ந்தெடுத்து நியமிக்கப் போறேன் !... நான் நாதியற்றவன் ஐயா !" என்ருன் சிவஞானம். தன்னை வியப்புக் குறியுடன் அவர் ஜாடையாகப் பார்த்ததைக் கவனிக்கத் தவறிவிடவில்லை அவன்.

"சிவஞானம் !..." என்று அழைத்தார் ஈஸ்வரன். பிறகு, சற்று நேரம் சூன்யத்தில் தம் பார்வையை நிலைக்குத்தினர், தொண்டையைக் கனைத்துக்கொண்டார். அவரது கண்கள் ஏன் அப்படிக் கண்ணீர் பெருக்குகின்றன ? — "ராமசாமி, நாகம்மை, காமராஜ், ஜீவா !..." என்று கூப்பிட்டார் அவர்.

மறு விநாடி அவர் முன் குழந்தைப்படை ஒன்று 'ஆஜர்' கொடுத்தது. "சிவஞானம், இத்தனை குழந்தைகளையும் விட்டுட்டு என் மனைவி செத்திட்டா !..." என்று தேம்பினர் ஈஸ்வரன்.

குழந்தைகள் ஒன்றுக்கொன்று விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தன !

"ஐயையோ" என்று அலறினன் சிவஞானம். அவர் சற்று முன் பேசிய பேச்சில் தொக்கி நின்ற உட்பொருள் இப்போது அவனுக்குப் புரியத் தொடங்கிற்று. "இவங்களோட கதி ?" என்று கவலை மூள வினவினன் அவன்.

"இவங்களுக்கு ஒரு இரண்டாவது அம்மாவை நியமிச்சேன் !... எனக்கு ஐம்பது வயசு ஆயிட்டுது. வேறே சிற்றின்ப நோக்கம் எதுவும் எனக்கு இல்லே ! இந்தக் குழந்தைகளோட எதிர்காலத்துக் கோசரம்தான் இம்முடிவுக்கு

நான் வர நேர்ந்திச்சு. இவங்களை வளர்க்கிறதுக்கு பட்டணத்திலே எத்தனையோ ஆயாக்களை நியமிச்சுப் பார்த்துத் தோல்வி அடைஞ்சப்பறம்தான் நான் இப்படித் திரும்பினேன். வந்த ஆயாக்கள் ஒவ்வொருத்தியும் பணத்தையும் சாமான் பண்டத்தையும் சுருட்டுறதிலேதான் கண் வச்சாளுங்க!... இதுகளைப் பத்தி லவலேசமும் கருத்துக் கொள்ளலே!... இவங்களுக்கு இரண்டாவது அம்மாவாக இருக்க ஒரு புண்ணியவதி மனசொப்பி முன் வந்தாள். வந்தவள் எனக்கு இரண்டாம் தாரமாகவும் வந்தாள். அவள் ஒரு விதவை!...'' என்று விளக்கினார் ஈஸ்வரன். பிறகு, "என் முதல் மனைவியை என் ஏழேழு பிறப்புக்கும் நிறைஞ்ச மனசோடு நினைக்கக் கடமைப்பட்டவன். அவள் நினைவு ஒண்ணிலேதான் நானும் என் எதிர்காலத்தைக் கழிக்க முடிவு கட்டியிருந்தேன். ஆனா, அப்படி நினைச்சுக்கிட்டிருந்தால், என் செல்வங்களோட கதி என்னாகிறது? — அவங்களுக்கு மனசறிஞ்சு துரோகம் செய்கிறதாக என் மனச்சாட்சி என்னோட முடிவை வச்சு என்னை நடைப் பிணமாக்கிடுச்சு. அப்புறம்தான் என் புத்தி தெளிஞ்சு இம்முடிவுக்குத் துணிஞ்சேன்!... மனம் வெளுக்க மார்க்கத்தைக் காட்டும்படி பாரதி வேண்டினான் முத்துமாரியிடம்! எனக்கும் மனம் வெளுக்க வழி புலப்பட்டுச்சு!... வந்தவள் புண்ணியவதி. வாஸ்தவமாகவே புண்ணியவதி. குழந்தைகளுக்கு இரண்டாம் அம்மாவாக அமையாமல், முதல் அம்மாவாகவே அமைஞ்சிட்டாள்!... நானும் புண்ணியம் செஞ்சிருக்கிறேன். அதுதான் இவ்வளவுக்காவது எனக்குத் தேறுதல் கிட்டியிருக்கு!...'' நிறுத்தினார் பேச்சை. "கலா....!'' என்று விளித்தார்.

பூவும் பொட்டுமாக, ஷீபான் பட்டும், பட்டுச் சோளியுமாக வந்து நின்றாள், இருபத்தைந்து இருபத்தாறு வயது கொண்ட கலாவதி. வணங்கினாள்.

சிவஞானம் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

விஜயாவின் சிரிப்புச் சாயல் அப்படியே கலாவதியிடம் இருக்கக் கண்டான் சிவஞானம். அவன் மேனி அல்லாடியது. தெய்வத்தைக் கும்பிடுவது போல் சென்னியில் கரம் பதித்துக்

கும்பிட்டான் அவனை. "நீங்க நிஜமாகவே ஒரு தெய்வம்தான், அம்மா !" என்றான். பேச்சைத் தொடரமுடியவில்லை அவனால்.

"என்னலான கடமையை என் பிறவிக் கடன் தீரச் செய்யத் துணிஞ்சேன்," என்று அடக்கமாகச் சொன்னாள் கலாவதி. தாலி புனர்ஜன்மம் எடுத்துப் புன்னகை காட்டியது. கழுத்துக் கொள்ளாத ஆபரணங்கள் ! — அவளது வலது கை காமராஜின் இளமுடியைக் கோதிக்கொண்டிருந்தது.

"ஒரு பெருங்குடும்பத்தைக் காப்பாத்தின புண்ணியம் உங்களையே சேரும் !... உங்களுக்கு ஈஸ்வரனோடு இந்தத் தமிழ்ச் சமுதாயமும் ரொம்ப ரொம்பக் கடன்பட்டிருக்குதுங்க அம்மா !" என்றான் சிவஞானம்.

"ஊம்," என்று பெருமூச்செறிந்தாள் கலாவதி. "இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்கு வாய்தான் இருக்குது ; இதயம் இல்லீங்களே ?... இதயம் இருந்திருந்தால், இம்மாதிரியான குடும்பங்கள் எத்தனை எத்தனையோ தலை தூக்கியிருக்க லாமே !...." என்றாள் வேதனையுடன்.

அவள் பேச்சு சிவஞானத்தைச் சிந்தனை வசப்படச் செய்தது.

அப்போது குழந்தையின் அழுகுரல் கேட்கவே, தன் குழவியை நோக்கினான் சிவஞானம்.

ராஜா நிம்மதியாகத் தூங்கிக்கொண்டுதான் இருந்தான்.

திரும்பினான் அவன். கலாவதியின் இடதுகை அணைப்பில் இருந்த 'பச்சை மண்'தான் அழுகுரல் கொடுத்துக் கொண்டிருந்தது.

கலாவதி குழந்தைகளுடன் புறப்பட்டாள். அழும் குழந்தைக்குப் பதில் சொல்ல வேண்டும் அவள்.

பாவம், சிவஞானத்தின் கதை அந்தப் பெண்ணுக்குத் தெரியாது !....

"கலா கொடுத்த தங்கம்தான் கைக்குழந்தை. பெயர் அண்ணாத்துரை. அண்ணா மந்திரி சபை அமைச்ச அண்ணைக்கு அவதரிச்சுது அது. நான் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவன். ஆனாலும், உண்மையான தமிழ்த்தலைவர்களை நாளும் தொழுது பழகிவருகிறவன் நான் !" என்றார் ஈஸ்வரன்.

# 55

தெய்வம் மனிதர்கள் உருவில் நடமாடுவது நடப்புச் செயல்தானு ?

ஈஸ்வரன் எழுந்தார். ராஜாவின் கன்னங்களை பையத் தடவிக் கொடுத்து முத்தம் கொடுத்தார். "ராஜாவைக் காப்பாத்திடுங்க. அதுக்கு இன்னெரு அன்புத் தாயைக் கொடுங்க !.... இது ரொம்ப முக்கியம் !... உங்களை நீங்க மறந்திடலாம் ; ஆனுல், நீங்க உங்க குழந்தையை — உங்க அருமைச் சம்சாரத்தின் நினைவுப் பரிசை மறந்திடாதீங்க !... அப்பாலே உங்க இஷ்டம்... ! நாங்க மதுரைக்குப் புறப்படுகிறோம். முடி இருக்குது !..." என்று சொல்லி விடை பெற்றுர் அந்தப் பெரிய மனிதர் !

பேயாட்டம் போட்ட வெறியுடன் சிகரெட்டுப் பெட்டியைத் தாவி எடுத்தான் சிவஞானம்.

9

## ஒரு நரகம்

'மித்திரன்' காற்றில் ஊசலாடியது.

சிவஞானத்தின் மனத்திர்ப்புக்காக எத்துணை நேரமாகத் தவம் இருக்கின்ருள் அவனது மல்லிகா !

ஊசலாடிய மனத்தை அழுந்தப் பற்றிக்கொண்டு, பற்றுக் கடந்த துறவி போல வாயைச் சுட்டுவிட்ட சிகரெட்டின் துணுக்கை துணுக்குற்ற துடிப்புடன் வீசி எறிந்தான். எரிந்த துண்டு புகைந்தது. உன் மனப்புகை அவ்வாறு புகைந்த தாகவே அவன் உணர்ந்தான். உதட்டின் உட்புறத்தில் ஒட்டியிருந்த சிகரெட்டுப் புகைத்துகளைத் துப்பினுன், சிவஞானம்.

ஈஸ்வரன் அவன் நெஞ்சத்தில் தோன்றினுர். வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகப் பேசிய அவரது சொற்கள் அவன் மனத்தில் எதிரொலிக்கத் துவங்கின. "ராஜாவைக் காப்பாத்திடுங்க. அதுக்கு இன்னெரு அன்புத்தாயைக் கொடுங்க !.... இது ரொம்ப முக்கியம் ! உங்களை நீங்க மறந்திடலாம் ; ஆனுல், நீங்க உங்க குழந்தையை — உங்க அருமைச் சம்சாரத்தின் நினைவுப் பரிசை மறந்திடாதீங்க !... அப்பாலே உங்க இஷ்டம் ! ... '

அவர் பேச்சு அவன் உள்ளத்தை — உள்ளத்தின் உள்ளத்தைத் தூண்டில் புழுவாகத் துடிக்கச் செய்தது. அதே தருணத்தில், ரிக்ஷாக்காரன் ராமையாவும் அவனுள் வழக்கம் போல ஆலவட்டம் சுற்றத் தொடங்கினுன். "உங்க ராஜாவை நீங்க ஒண்டியுமாய் வளர்க்கவே முடியாதுங்க. வேறே ஆயாளாலேயும் காப்பாத்த முடியாது. ஆனபடியாலே, அதுக்கு ஒரு இரண்டாவது |அம்மாவை நியமனம் செஞ்சிடுங்க. இது தான் உங்களோட அதிமுக்கியமான கடமை !...." என்று

அறிவுறுத்திய ராமையாவின் பேச்சும் அவனுள் சுழித்தது. திரும்பத் திரும்ப மல்லிகாவின் இறுதி வேண்டுகோள் அவன் மூளையில் மோதியது!...

சிலையாக மலைத்து நின்றான்; தன்னை மறந்து வெறும் சிலையாக மலைத்து நின்றான் சிவஞானம்!— மீண்டும் குழந்தையை வெறிக்கப் பார்த்தான். அவனுள் அவனது அலுவலகக் கடமைகள் பூதாகாரமாகத் தோன்றின 'ஆயாவைக் கொண்டு என் ராஜாவை — என் மல்லிகாவின் ராஜாவை வளர்த்துப்பிடலாம்னு கோட்டை கட்டிக்கிட்டிருந்தேன். கடைசியிலே, அந்த ஆசையிலேயும் கோட்டை மண் விழுந்திடுச்சே! ... ஆபீஸ் உத்தியோகத்துக்கு நான் முதலிலே வழி சொல்லியாகணும். அத்தோடு, குழந்தையை நான் ஒண்டியாக எப்படி வளர்ப்பேன்? ... மல்லியின் பெரியம்மா காலமாகாது இருந்திருந்தால், எவ்வளவோ சிலாக்கியமாக இருந்திருக்குமே!...' விளையாட்டுப் போல ஒரு நாள் மல்லிகா அவனுக்குப் பால் சீசாவைப் புகட்டவும் மருந்து கொடுக்கவும் பழகிக் கொடுத்தாள். தன் முடிவினை அவன் முன் கூட்டியே முடிவிட்டுக்கொண்டுதான் அவள் அவனுக்கு இந்தப் பாடத்தைச் சொல்லிக் கொடுத்தாளோ, என்னவோ?

அவன் கண்களை இறுக மூடிக்கொண்டு சற்று நேரம் அப்படியே நின்றான்.

வானம் மின்னி முழங்கியது.

அவனது இதயவானத்தைப் பிரதிபலித்ததா இயற்கை?

புதிய சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான் சிவஞானம். புதிய மனத்தில் புதிய முடிவு உருக்கொண்ட பாவனை அவனுள் முகிழ்த்திருந்தது. கோடை மழை பெய்ததும், புதிய வானத்தையும் புதிய பூமியையும் தரிசித்தன அவன் நேத்திரங்கள். தன் நேத்திரமான குழந்தையைப் பார்த்தான். மெல்ல அசைந்து புரண்டது குழவி.

பூரண நிலவை நோக்கினான் அவன். 'இந்த முழு நிலவு இன்னும் சில நாள் போனதும் தேய்ந்துவிடுமே! ...'— இன்பமும் துன்பமும் கலந்ததே வாழ்க்கை என்ற உண்மை அனுபவ பூர்வமாக அவனுள் புலனாயிற்றுப் போலும்! புலன் காட்டியது போலும்!...

மல்லிகா எவ்வளவு நாழியாகத் தன் கணவனின் தீர்ப்புக்காகக் காத்திருப்பாள், பாவம் !

சிகரெட்டை வெறியுடன் ஊதினான் சிவஞானம். 'எஸ்.... ஆமாம், நான் இப்பொழுது ஒரு முடிவைச் செய்தாக வேண்டும். என் ராஜாவுக்கு ஒரு இரண்டாவது அம்மாவைத் தேர்ந்தெடுக்க வேண்டும் !... இது என் கடமை !.... '— சிகரெட்டின் புகை நெஞ்சிற்குள் புகுந்தது. இருமல் வந்தது. இருமினான்.

'அத்தான் ! '

குரலுக்குடையவள் மல்லிகா அல்லவா ?

'மல்லிகா ! உன் கட்டளைப்படி நம்ம ராஜாவுக்கு ஒரு இரண்டாவது அம்மாவைத் தேர்ந்தெடுத்து நியமிச்சிடுறேன்!...' ஏதோ ஒரு முடிவின் நெருக்கமாகச் சிந்தனைக் குமைச்சலுடன் குழந்தையையே அவன் வெறிக்கப் பார்த்தான். அவன் கண்கள் வழிந்தன. 'தெய்வமே !' — அவன் உள்ளத்தில் அவனது மல்லிகா மங்கள சொரூபியாகத் தோன்றி மறைந்தாள். அவன் நிறைவுடன் சிரித்த ஆனந்தச் சிரிப்பின் மெல்லலைகள் அவன் மேனியைப் புல்லரிக்கப் பண்ணின.

'நான் இப்போது என் ராஜாவுக்கு ஒரு நல்ல இரண்டாவது அம்மாவை நியமிச்சாகணும் ! சரி ; அந்த இரண்டாவது அம்மாவை நான் எங்கே கண்டு தேடுவேனும் ?' தொடுக்கப்பட்ட கேள்வியில் தவிப்பு மேலோங்கியிருந்தது. எதை எதையோ எண்ணினான். ஏதேதோ நினைவுகள் பேயாட்டம் கூட்டிச் சிரித்தன.

'அத்தான்.'

யார் அழைத்த குரல் அது ?

யார், விஜயாவா ? அவன் மாமன் மகள் விஜயா அல்லவா ?

'விஜயா !' — அவன் மனம் ஏன் அப்படித் திடுதிப்பென்று நடுங்கித் தொலைத்தது ?

விஜயா புன்னகையும் புது நிலவுமாகப் பூவும் பொட்டும் சூழச் சிரித்துக்கொண்டேயிருந்தாள். சிரிப்பதற்காகத்தான் வாழ்க்கை என்று செப்பியவள் சிரிக்கக் கேட்க வேண்டியது இல்லைதான் !

விஜயா தோன்றிய நெஞ்சில் மல்லிகா தோன்றிச் சிரித்தாள் !

'மல்லி !....'

குழந்தை படுத்திருந்த இடத்தில் ஈரம் இருந்தது. ஈரம் பட்டு நாழிகை கூடுதலாக ஆகியிருக்குமோ என்று மனம் புழுங்கினான் சிவஞானம். அவசரமாகப் பையைப் பிரித்துத் துணிக் கிழிசலை எடுத்து, குழந்தையின் இடுப்பில் செருகினான். தயாரக வைத்திருந்த பால் சீசாவை, ரப்பரை, துடைத்துவிட்டு, ராஜாவின் வாயருகில் கொண்டுபோனான். பிறகு, மறுமுறையும் ரப்பரைத் துடைத்துவிட்டு, விரல் பதமாகச் சூடு இருப்பதை அறிந்த நிம்மதியுடன் சீசாவை குழவியின் இதழ்களிடைப் பொருத்தினான். ஆவலுடன் குடிக்கத் தொடங்கியது குழந்தை. 'கிரைப் வாட்டர்' புகட்ட வேண்டும். அப்புறம், புதுப்பால் வாங்கிக் காய்ச்சித் தரச் சொல்லி, பிளாஸ்கில் அடைத்துக் கொள்ள வேண்டும். ரயிலுக்குப் புறப்படு முன் ஒரு முறை சொட்டு மருந்து கொடுத்தால் போதும் ! — பட்டியலின் கடமை நீண்டது. நீண்டு கிடக்கும் கடமைப் பட்டியல் அவனை அச்ச மூட்டியது. ராஜாவுக்கு இரண்டாவது அன்னை நியமிக்கப்படும் வரை இடையிலுள்ள நாட்களை அவன் எங்ஙனம் கழிப்பான் ? ஒவ்வொரு விநாடியும் அவனுக்கு ஒவ்வொரு யுகம் ஆயிற்றே ?

'மல்லிகா, நீ ஏன் எங்களை விட்டுப் பிரிந்தாய் ?' எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறதே ?....'

அவன் விம்மினான்.

சிரிப்பதற்குத்தான் வாழ்க்கை என்று விஜயா போதித்தாள்.

இவனோ விம்முகிறான் !....

வாழ்க்கை சிரிப்பதற்குத்தானா ?

வாழ்க்கையில் அழுகைக்கும் பங்கு இல்லையா ? — பங்கு வேண்டாமா ?

வெறும் சிரிப்பு மட்டுமே வாழ்க்கையின் நிலைக்களனாக அமைந்துவிட முடியுமா ? — இல்லை, துயரத்திலும் சிரிக்கப் பழக வேண்டுமென்கிறார்களே, அப்படித்தானா ?

எது பொய் ?

## 60

எது உண்மை ?

வாழ்க்கை என்றால் என்ன ?

'வாழ்க்கை என்கிறது ஒரு நரகம் !... போதும் இந்த மானுட ஜென்மம் !... சே ! ....'

பத்திரிகை தரையைத் தஞ்சமடைந்தது.

சிவஞானத்தின் இதழ்கள் புகைந்துகொண்டேயிருந்தன !....

# 10

## ராஜாத்தெய்வம் !

"அத்தான் ! என்னோட! இந்த மண்ண வாழ்க்கை இன்னம் கொஞ்சப் பொழுதுக்குத்தான் !... அதுக்குள்ளே உங்ககிட்டே ஒரு வரம் வாங்கிக்கிட ஆசைப்படுறேனுங்க, அத்தான் ! நீங்க என்னை எவ்வளவோ சந்தோஷமாய் வச்சுக் காப்பாத்தினீங்க. நாம் வாழ்ந்தது கொஞ்ச காலம்தான் என்றாலும், எனக்குப் பல நூறு வருஷம் உங்களோடே வாழ்ந்ததாகவே ஒரு திருப்தி மனப்பூர்வமாய் உண்டாகுது. ஆனா, விதி நம்மளைத் திசை பிரிக்கச் சதி செஞ்சுக்கிட்டிருக்குது. நான் என் ராஜாவுக்கு — நம்ம ராஜாவுக்கு அம்மாவாக இனியும் இருக்க முடியாதின்னு என் மனசுக்குத் திடமாய்த் தோணிடுச்சு. ஒரு வரம் தரவேணும் நீங்க !... என்றைக்குமே நீங்க என்னை மறக்க மாட்டீங்க என்கிறதை நான் சத்தியமாய் மறக்கவே மாட்டேன். அதே வாக்கை நீங்க மனசொப்பிக் கட்டிக் காத்துக்கிடவும் செய்வீங்க. உங்க மனசு எனக்குத் தெரியும். உங்க மனோ தர்மத்தை — திடத்தை — வைராக்கியத்தைப் புரிஞ்சவ நான் ! — ஆனா, நம்ம ராஜாவுக்கு — என் ராஜாவுக்கு ஒரு அம்மா வேணுமே !... அதுக்கு ஒரு இரண்டாவது தாயைக் கொடுங்க ! ... அவனுக்கு இரண்டாம் அம்மாவாக வரப்போற புண்ணிய வதியைச் சோதிச்சுப் பார்த்து, அவளுக்கு அந்தப் புனிதப் பதவியை — பாசப் பொறுப்பைக் கொடுங்க ! நீங்க என்னை எப்படி மறப்பீங்க ?— எனக்கு நீங்க திருப்பூட்டினவுடனேயே நான்தான் என் உயிரை உங்க உயிரோடே இரண்டறக் கலக்கச் செஞ்சிட்டேனே ?..."

மரணப் படுக்கையில் ஊசலாடிய தன் இன்னுயிர் மனையாட்டி மல்லிகா, தன்னிடம் வரம் கோரிய சம்பவம்

அப்பொழுது ஆயிரத்தெட்டாவது தடவையாகச் சிவஞானத்தின் நெஞ்சத்திலே எதிரொலி கிளப்பித் தீர்த்தது.

சிவாஞானம் விழி நீரைத் துடைத்துவிடவில்லை. 'மல்லி, அண்ணைக்கு நீ என்கிட்டே கையடிச்சு வாங்கறதுக்குள்ளே காலன் உன்னைப் பறிச்சிட்டுப் போயிட்டான் என்கிட்டே யிருந்து! .. என்னைப் புரிஞ்ச புண்ணியவதி நீ! என் மனசு உனக்குத் தெரியும். நம்ம ராஜாவுக்குக் கட்டாயமாக— சீக்கிரமாக ஒரு இரண்டாவது அம்மாவைக் கொடுத்துப் பிடுறேன் !... உன் பேரிலே ஆணை இது !....' என்று வாய் விட்டுப் புலம்பினன் அவன். மல்லிகா எவ்வளவு நிம்மதியாகச் சிரிக்கிருள் !....

யார் யாரோ மாடியில் வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருந்தார்கள்.

ரேடியோவில் நடந்துகொண்டிருந்த இசைத்தட்டு நிகழ்ச்சி அவன் சித்தத்தை விழிக்கச் செய்தது.

மணி எட்டு, ஐந்து !

ஜனதாவுக்குப் புறப்பட வேண்டும் அவன் !— அவனும் அவன் குழந்தையும் !

செய்தித்தாள் அவன் நோக்கை நோக்கியது. — கோயமுத்தூர், மே, 27, பொதுப்பணித்துறை அமைச்சர் உறுதி : "படி அரிசி ! — முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டோம் !..."

ராதா வழக்குக்கு மனக்கோழி தாவியது.

முகட்டை அண்ணாந்து சிவஞானம் பார்த்தான்.

தாய்ப்பறவையைக் காணுமல் ஏங்கியவாறு கிறீச்சிட்டது குஞ்சு.

அடுத்தகணத்தில், தாய்ப்பறவை பறந்து வந்ததும், குஞ்சு மட்டற்ற மகிழ்வுடன் சிறகுகளை அடித்துக்கொண்டது.

செல்வ மகனைப் பார்த்தான் சிவஞானம்.

கைகளை ஆட்டியும் விரல்களை அழகு பார்த்தும் கண் விழித்துக் கிடந்தான் ராஜா. அக்குழந்தையின் முகத்தில் மூடு பனி போன்று ஒரு சோகம் இழையோடியிருப்பதாக அப்போது அவனது தந்தை மனம் ஊகம் செய்தது. "ராஜா,

இனி நீ தாயில்லாப்பிள்ளை இல்லையடா, என் கண்ணே, என் தெய்வமே !" என்று மகிழ்வின் துடிப்புடன் தன்னுள் சொல்லிக் கொண்டான்.

வீதி வளைவில் 'சித்தி' விளம்பர வண்டி சென்றது !

அப்போது ராமையா அங்கு வந்தான்.

அவனை எதிர்பார்த்த துப்பு அவனுக்கு மானசீகமாக அஞ்சல் செய்யப்பட்டிருக்கக் கூடும்.

"அண்ணாச்சி, என்னோட புதுப் பெண்சாதியை டாக்டரம்மா கிட்டே கொண்டாந்து காண்பிச்சிட்டு இப்பத்தான் வந்தேன் ! அது தாயாகப் போகுதாம் !... என்னோட பையன் அதன் சின்னம்மாவைக் கொஞ்ச நேரம் காணுமல் அலறித் தீர்த்திட்டிருக்கான் ! ... அவன் அம்மா செத்த கெடுவிலே எலும்பாய் இருந்தான் ; இப்போ அவன் சின்னம்மா வந்ததும், தெளிஞ்சிட்டான் ! இதெல்லாம் கடவுள் விளையாட்டுங்க போலே !.... அதாலேதான் வாழ்க்கையையே ஒரு விளையாட்டுன்னு எழுதுறாங்க போலிருக்குதுங்க !.... உங்க கிட்டே ரொம்பப் பேசணும் ! இருங்க, ஏதாச்சும் சவாரி சிக்குதான்னு ஒரு ரவுண்ட் சுத்திட்டு ஒரு கால் மணியிலே வந்திடுறேன்., நான் வந்து உங்களையும் ராஜாவையும் அழைச்சிட்டுப் போய் ரயில் ஏற்றிவிடுறேனுங்க !..." என்று சொல்லி, ராஜாவை நெருங்கிப் பார்த்தான் ராமையா. பிறகு, "அண்ணாச்சி, உங்க ராஜாவுக்கு ஒரு அன்பு முத்தம் கொடுக்கவேணும்னு அப்பவிலேயிருந்து துடிச்சுக்கிட்டிருக்கேன். உத்தரவு கிடைக்குங்களா ?" என்று பரிதாபமாகக் கேட்டான் ரிக்ஷாவாலா.

அவன் அன்பைக் கேட்டதும் சிவஞானத்தின் மனம் நெகிழ்ந்து உருகியது.

"ராமையா ! நீ என் தம்பி. இதுக்குக்கூட என்னைக் கேட்கணுமா ?" என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்தான்.

ராமையாவின் முத்தம் ராஜாவை 'கடகட'வென்று சிரிக்க வைத்தது.

அவன் ஓடிவிட்டான் !

சிவஞானம் ஓடாமல் நிலைத்து நின்றான்; நெடுமரமாக நிலைத்து நின்றான்.

'ராமையாவும் சராசரி மனிதன்தான்!... சுயநல நோய்க்கு அவனும் விதி விலக்காகிவிடவில்லைதான். அவன் ஊரைப் போல, உலகத்தைப் போல சாதாரண ராமையாதான்!....'— சிவஞானத்தின் இதயத்தில் ராமையாவைப்பற்றி எழுந்து புகைந்துகொண்டிருந்த வினவுக்கு விடை கிடைத்துவிட்டது.

அவனுக்கு மண்டை வலித்தது. 'விக்ஸ்' டப்பாவிலிருந்து, நகக்கண் கொண்டு, துளி வழித்து நெற்றிப்பொட்டுக்களிலே தடவிக்கொண்டான். இந்தப் பணியைச் செய்வதில் மல்லிகா மகா கெட்டிக்காரி!.... 'மல்லிகா! .... மை டியர் மல்லிகா!...' குழந்தை ராஜாவை வாரி எடுத்தான்.

அவன் களையுடன் முறுவலித்தான்.

அம்மா இரண்டாம் தடவையாகக் கிடைக்கப் போகிறாள்— ராஜாவுக்கு! சிரிக்கட்டும், சிரிக்கட்டும்! தீர்க்காயுளோடு சிரிக்கட்டும்!

குழந்தையை மார்புடன் அணைத்தவனாக, எச்சரிக்கையுடன் தரையில் குந்தினான் சிவஞானம். குழந்தையின் கழுத்தில் நிமிண்டினான்.

குழந்தை பலமாகச் சிரித்தது. அதன் பஞ்சுப்பாதங்களின் உட்புறங்களை மெள்ளச் சுரண்டினான்.

மீண்டும் பொக்கை வாயைப் பிளந்துகொண்டு சிரித்தது. கன்னக்கதுப்புக்கள் குழிந்தன.

சிவஞானம் 'கிரைப் வாட்டர்' சீசாவை எட்டி எடுத்தான். பாலடையை நகர்த்திக்கொண்டான். மயிர் மண்டியிருந்த முகத்தைத் தடவியபடி, குழந்தையை இடது கைப்பிடியில் தாங்கி அணைத்துக்கொண்டான். வலது கையால் பாலடையை நகர்த்தி, அதில் 'கிரைப் வாட்டர்' மருந்தை ஊற்றிப் பாலடை முனையை ராஜாவின் இதழ்களில் செலுத்தினான். சிரித்துக் கொண்டிருந்த பாலகன் குபீரென்று வீரிடத் தொடங்கினான். முக்கி அழுத காரணத்தினால் மலம் கழிந்தது. அவன் வேட்டி நாறிவிட்டது. அதைப்பற்றி அவனுக்குக் கவலை இல்லை. அவன் கவலையெல்லாம் பிள்ளைக்கு ஒழுங்காக மருந்து

வயிற்றில் போய்ச் சேர வேண்டுமே என்பதுதான். மிகவும் ஜாக்கிரதையாகப் பாலடையைப் பற்றியபடி, மருந்தைச் செலுத்த முயன்றான். திடீரென்று அவனுக்கு இருமல் வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டான். குழந்தை 'களகள'வென்று மருந்தை உள்ளே இறக்காமல் இருமத் தொடங்கியது. ஒளி வெள்ளத்தில் நன்கு தெரிந்த பாலடையிலேயே அவன் கவனம் பூராவும் நிலைத்திருந்தது.

ஆனால், மறுகணம் குழந்தை பலமானதொரு அலறல் சத்தத்தைக் கிளப்பியது, கைகால்களை உதறியபடி. மருந்து நாசிக்கு ஏறிவிட்டது. அடுத்த விநாடி, பாலடை தரையில் நழுவியது.

பதட்டத்துடன் குழந்தையைப் பார்த்தான் சிவஞானம்.

குழந்தை, பேச்சு மூச்சில்லாமல் கட்டை போலக் காணப் பட்டது.

உடல் ரத்தம் முழுதும் மண்டையுச்சிக்குத் தாவ, "ஐயோ! மல்லிகா!.... ஐயோ ராஜா!" என்று கூக்குரல் எழுப்பினான் சிவஞானம். குழந்தை ராஜாவை மடியில் கிடத்திக்கொண்டு அலறினான். கண்ணீர் மாலை நீண்டது.

கூடி வந்த கும்பலைப் பிளந்துகொண்டு, "அண்ணாச்சி!" என்று ஓடோடி வந்தான் ரிக்ஷாக்காரன் ராமையா.

"தம்பி, நான் என் குழந்தையைச் சாகடிச்சிட்டேனே? ஐயையோ, தெய்வமே! .... நான் என்ன பாவம் செய்தேனோ?... ஐயோ, ராஜா!... உன் அம்மாவுக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்? எப்படிப் பதில் சொல்லுவேன்?" என்று கூக்குரலிட்டான்.

ராஜா இன்னமும் பிணம் போலவே காட்சியளித்தான்!....

அப்போது:

"அத்தான்!" என்று அழைத்தவாறு விஜயா வந்து நின்றாள். குழந்தை இருந்த நிலையைப் பார்த்ததும், அதற்குத் 'தட்டேறி'விட்டது என்பதைப் புரிந்துகொண்டாள். குழந்தையைச் சிவஞானத்தின் மடியிலிருந்து வாங்கிக்கொண்டு தரையில் அமர்ந்து தன் மடியில் கிடத்தினாள். தொண்டைக்

குழியிலும் நெஞ்சிலும் முதுகுத் தண்டிலும் தடவிக் கொடுத்தாள். பிறகு, அதன் நாசித் துவாரங்களில் உதடுகளைப் பொருத்தி உறிஞ்சினாள்; துப்பினாள்!

சிவஞானம் தலையில் அடித்துக்கொண்டு தரையில் புரண்டான். கையெடுத்துச் சூன்யத்தில் நின்றபடி கும்பிட்டான். "ஆண்டவனே, என் குழந்தையைக் காப்பாற்று!.... மல்லிகா! உன் குழந்தையைக் காப்பாற்றிக் கொடுக்க மாட்டாயா?" என்று ஓலம் பரப்பினான். பிறகு, விஜயாவின் பக்கம் திரும்பி, "விஜயா, தெய்வம்தான் உன்னை எதிர்பாராமல் கொண்டுவந்து சேர்த்திருக்குது. என் ராஜா பிழைச்சிடுவானா? டாக்டரை வரவழைக்கட்டுமா?", என்று நடுங்கிய வண்ணம் கேட்டான்.

"அத்தான் பதறாதீங்க. தெய்வம் உங்க ராஜாவைச் சோதிச்சிட மாட்டாது!.... கொஞ்சம் தண்ணி கொடுங்க!" சட்டை தெப்பமாக நனைந்திருந்தது; கழற்றி வீசினாள்.

விஜயா தண்ணீரை ராஜாவின் முகத்தில் தெளித்தாள். 'விக்ஸ் வேபோரப்' டப்பா இருந்தது. அதில் கொஞ்சம் எடுத்து குழந்தையின் நாசித் துவாரங்களில் தடவினாள். வாடை படர்ந்தது.

கூர்த்த மதி பதித்துக் குழந்தையையே ஆழ்ந்து நோக்கிக் கொண்டிருந்தாள் விஜயா. முத்துக்கள் உருண்டன. உருட்டி விட்டாள். அவளது அந்தம் செறிந்த இதழ்கள் சன்னம் சன்னமாக மலரத் தொடங்கின! "அத்தான்!..." என்று அழைத்தாள்!

அவள் காலடியில் அந்தக் 'க்ரூப் போட்டோ' பிரிந்திருந்தது.

விஜயாவின் மங்கல நாண் எத்துணை அழகுடன் பொலிந்து கொண்டிருக்கிறது!...

ஆஹா!

# 11.

## "ம்...மா !..."

தெய்வங்களுக்குச் சோதனைகள்தாம் விளையாட்டு என்றால், அப்பால், அந்த விளையாட்டுக்கு மகிமை ஏது ?

விஜயா அலட்டியதும், 'என்னவோ ஏதோ'வென்று பதட்டத்துடன், பயத்துடன், வேதனையுடன் தலையைக் குனிந்து பார்வையிட்டான் சிவஞானம்.

குழந்தை ராஜாவின் முகத்தில் சலனம் எதுவும் இன்னமும் ஏற்படவில்லையே !

'மல்லிகா ! என் அன்புத் தெய்வமே ! நம்ம ராஜாவுக்கு புத்துயிர் கொடு, மல்லி !....'

அவன் மனம் உருகி வழிந்தது.

மறு இமைப்பிற்குள், குழந்தை தும்மியது !....

உடனே, குழந்தையின் முகத்தைத் தன் சேலைத் தலைப்பால் துடைத்தாள் விஜயா. காற்றை விடும்படி எல்லோரையும் கெஞ்சினாள். காற்று நன்றாக வீசியது, ராஜாவின் பால் முகத்தில். பால் முகம் சலனம் காட்டத் தொடங்கியது. அல்லிப் பூ விழிகள் அலர்ந்தன. இதழ்கள் விரிந்தன. சுற்றிச் சூழப் பார்த்ததும், குழந்தை அலறியது. "அத்தான் ! இனி பயமில்லை !...." என்று சொல்லி, ராஜாவைத் தாலாட்டினாள் விஜயா. கிலுகிலுப்பையைக் குலுக்கினாள்.

குழந்தையின் அழுகை அடங்கியது. அதற்கு முத்தங்கள் ஈந்தாள் விஜயா. அவளையே வெறிக்க வெறிக்கப் பார்த்தது குழந்தை. பிறகு, அவளைப் பார்த்து, பழக்கப்பட்ட பாங்கிலே புன்முறுவல் செய்தது. "ஒரு நொடிக்குள்ளே எங்களையெல்லாம் சாகடிக்கப் பார்த்தியேடா, ராஜா ?" என்று தேம்பினாள்.

சிவஞானம் மெய்ம்மறந்து கண்ணீரும் கம்பலையுமாக நின்றான். அவன் கரங்கள் கூப்பியவை கூப்பியபடியே இருந்தன.

ராமையா டாக்டருடன் வந்தான்.

"ராமையா, உன் அன்புக்கு நன்றி. நம்ம ராஜா மறு பிறப்பு எடுத்திட்டான். டாக்டர் ஐயாவைக் கொண்டுபோய் விட்டிட்டு வந்திடு," என்று சொல்லி, ஐந்து ரூபாய்த்தாளைக் கொடுத்தான் சிவஞானம்.

டாக்டரை அனுப்பிவிட்டு, ராமையா மீண்டதும், சிவஞானத்தின் வேஷ்டி பூராவும் மலம் நிரம்பியிருந்ததை நினைவூட்டவே, சிவஞானம் வெளிப்புறம் சென்று, வேறு வேஷ்டி மாற்றிக்கொண்டு திரும்பினான்.

"அத்தான், மல்லிகா எங்கே?" என்று விசாரித்தாள் விஜயா.

சிவஞானம் குனிந்த தலையை நிமிர்த்தாமல, "அவள் செத்துப் போயிட்டா, விஜயா!" என்று உணர்ச்சிப் பெருக்குடன் உடல் துடிக்கத் தெரிவித்தான்.

"ஐயோ!" என்று அலறினாள் விஜயா.

அப்போதுதான் சிவஞானம் தலையை உயர்த்தி விஜயாவைப் பார்த்தான். குரல் நடுங்க, "விஜயா!" என்று வீரிட்டான்.

பூவிழந்து, பொட்டிழந்து, வெண்ணிற ஆடை திகழக் காணப்பட்டாள் விஜயா. "அத்தான், எனக்குப் பகவான் அளித்த முடிவு இதுதான் அத்தான்!..." என்று விம்மினாள் விஜயா. "என் கணவரைக் காலரா நோய் கொண்டு போயிட்டுதுங்க அத்தான்!..." என்று விம்மலைத் தொடர் சேர்த்தாள்.

சிரிப்புக்கென்றுதான் வாழ்க்கை அமைந்தது என்று சொன்ன விஜயா விம்மி அழுதாள்!...

வேடிக்கையான வாழ்வு!...

"அட கடவுளே!" என்று தலையில் கையை வைத்து உட்கார்ந்தபடி தேம்பிச் செருமினான் சிவஞானம்.

"ங்....கா!" என்றது குழந்தை. பேபி ராஜாவுக்குப் பேசத் தெரியுமே!

விஜயா தன் நிலையை மறந்துவிட்டு, குழந்தையை நினைத்தாள். பாலூட்டும் சீசாவைப் பற்றியெடுத்தாள்.

மிகுந்திருந்த பாலைப் புகட்டினாள் விஜயா ! பிறகு, ஏதோ நினைவு வந்தவளாக, "வசந்தி...வசந்தி !" என்று அழைப்புக் கொடுத்தாள் அவள்.

கூட்டம் கலைந்தது

ராமையா மட்டும் மிச்சம் !

'கன்னி இளம் மானைக' வசந்தி வந்து நின்றாள்.

"உட்கார் வசந்தி."

வசந்தி தரையில் ஒதுங்கி உட்காரலானாள்.

"அத்தான், குழந்தையைக் காப்பாற்றுகிற விஷயமாக இனி உங்க திட்டம் என்ன ?" என்று பரபரப்புடன் கேட்டாள் விஜயா.

"நீண்ட நேரப் போராட்டத்தின் பேரிலே என் ராஜாவுக்கு ஒரு இரண்டாவது அம்மாவை நியமனம் செய்யப் போறேன். இதுவே என் மல்லிகா என்னிடம் வேண்டின வரமும்கூட ! இது சம்பந்தமாய், பட்டணத்துக்குப் போய், பேப்பரிலே ஒரு விளம்பரம் செய்யப் போறேன், விஜயா !" நா தழுதழுக்கச் சொன்னான் சிவஞானம்.

"அப்படியா ?"

"ம் !"

"சரி, ராஜாவைக் கொஞ்சம் வாங்கிக்கங்க. வசந்தி, கொஞ்சம் வர்றீயா ?" என்றாள் விஜயா.

பாப்பா தன் தந்தையிடம் வந்ததும், அழத் தொடங்கியது. அழுகையை அடக்கியாள முனைந்த உபாயங்கள் சரிந்தன. "ஆராரோ...ஆரிரரோ !" என்று திரும்பத் திரும்பப் பாடினான் சிவஞானம்.

குழந்தை அழுகையை நிறுத்தினபாடில்லை.

அவன் பாட்டு அதற்குப் பிடிக்கவில்லையோ, என்னவோ ?....

அவன் — சிவஞானம் தவித்தான் ! — அந்தத் தவிப்பினூடே, மல்லிகா அழகு காட்டிக்கொண்டிருந்தாள் அவனுள்ளக் கிழியில். அப்புறம், ராமையா, ஈஸ்வரன், கலாவதி, விஜயா, வசந்தி முதலானோரும் தோன்றினார்கள். பின்னர், மல்லிகா மீண்டும் தனிப்படச் சிரித்தாள். அப்பால், விஜயாவும் தனியே நின்று புன்னகை புரிந்தாள் ! அப்புறம், கலாவதி சற்றுமுன்

சொன்ன சொற்கள் அவனுள் எதிரொலித்தன. ஈஸ்வரனின் பெருங்குடும்பத்தை தர்மத்தின் பெயரால் தலை தூக்கச் செய்யத் தன்னையே தியாகம் செய்யத் துணிந்த அந்த விதவையின் முடிவையும் ஏனோ அப்பொழுது எண்ணிக்கொண்டான் !...

அதோ விஜயா திரும்பிவிட்டாள் ! வசந்தியுடன் உடன் தொடர்ந்து வந்தாள் !

"அத்தான், என் தோழி குமாரி வசந்தி ஒரு சமூக சேவகி. அனாதை. அவளை உங்ககிட்டே அடைக்கலம் வைக்க ஆசைப படுகிறேன் !...." என்று நேரிடையாகப் பேசினாள் விஜயா.

சிவஞானம் மேனி புல்லரிக்கத் தலையை நிமிர்த்தினான்.

குழந்தை 'கம்'மென்றிருந்தது !...

"விஜயா ! வாழ்க்கை சிரிக்கிறதுக்காகத்தான்னு நீ ஒரு தடவை என்கிட்டே சொன்னாய். நானும் நம்பினேன். ஆனா, நம்ம இரண்டு பேர் வாழ்க்கையும் அழுகிறதுக்கின்னு ஆயிட்டுது !... விஜயா !... கரைமணலும் காகித ஓடமும் பார்க்கிறதுக்குத்தான் ரம்மியமாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கும். கடல் அலை வந்திடுச்சின்னா கரைமணலோட அழகு சீர்குலைஞ்சிடும் ; காகித ஓடம் கடல் அலையிலே அடிபட்டுச் சின்னபின்னமாகிடும் !... காகித ஓடத்தையும் கரைமணலையும் கடல் அலை வர்றதுக்குள்ளே பார்த்து ஆனந்தப்பட்டு மனசு நிறையிறதுதான் விவேகம். அது போலத்தான் இந்தப் பூலோக வாழ்க்கை !... அந்த இடைவேளையிலே நாம் சிரிச்ச வரை மிச்ச லாபம் ! இப்போ நம்மை விதி என்கிற கடல் அலை கதிகலங்கச் செஞ்சிட்டுது !.... கரை மணலின் நளினமும் காகித ஓடத்தின் கம்பீரமும் நம்ம வரை கனாப் போல ஆயிடுச்சு. நீ கணவனை இழந்து நிற்கிறே ! நான் மனைவியைப் பறி கொடுத்து நிற்கிறேன் !... இப்படிப்பட்ட பயங்கரக் கட்டத்திலே நாம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கோம். இந்த நிலைமையிலே உன் கவலையை மறந்து, நீ எனக்கு ஒரு உபகாரம் செய்ய முன் வந்திருக்கே !... உனக்கு ஏற்கெனவே கடன்பட்டவன் நான் !... இப்போது நீ காட்டுற பரிவுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கேன் !...

"விஜயா ! என்னைப் பெரிய மனசு பண்ணி தயவு செஞ்சு மன்னிச்சுப்பிடு நீ !.... அம்மா வசந்தி, உன் பெருந்தன்மையை என் ஆயுள் மறக்கவே மறக்காது !.... விஜயா !... நான் என்னோட முடிவை உன்கிட்டே சொன்னேனே, அதைச் சரிவர காதிலே வாங்கிக்கலையா ? **என் ராஜாவுக்கு ஒரு இரண்டாவது அம்மா வேணும் !** — அவ்வளவுதான் பிரச்னை !... " என்று விநயமான விரக்திச் சிரிப்புடன் மொழிந்தான் சிவஞானம். நடுங்கிக்கொண்டிருந்த அவன் கரங்கள் அவன் 'இலட்சிய'த்தை வருடிக் களித்துக்கொண்டிருந்தன ! புதுச் சொக்காய் வெகு நேர்த்தி !...

விஜயா அவனை ஊடுருவிப் பார்த்தாள். அவள் பார்வையில் புதிய துடிப்பு முடிவிட்டிருந்தது, இப்போது. அள்ளிச் செருகப்பட்டிருந்த முடியின் இழைகளை ஒதுக்கினாள்.

சிவஞானம் பொறிதட்டித் தவித்தான்.

"அத்தான் !"

"விஜயா !..."

"உங்க ராஜாவுக்கு இரண்டாவது அம்மாவாக இருக்க நான் தயாருங்க !... என்ன சொல்றீங்க நீங்க ?..."

"விஜயா !..."

**"ஆமாங்க, அண்ணா !..."**

"விஜயா !..."

விஜயாவின் தெய்வமணிக் கரங்களை — வெறிச்சோடிக் கிடந்த அந்தப் பூங்கரங்களைப் பாசத்துடன் பற்றிக் கண்களில் ஒற்றிக்கொண்டு தேம்பினான் சிவஞானம். "என் தெய்வம் மல்லிகாவின் வரம் பூர்த்தியாயிடுச்சு !.... என் ராஜா கொடுத்து வச்சவன் !... அவனுக்கு தெய்வமே வந்து இரண்டாவது அம்மாவாக அமைஞ்சிடுச்சு !... ஆஹா !... ஆண்டவனே, உன் கருணையே கருணை !..." என்று மெய்ம்மறந்து கூறினான் சிவஞானம்.

ராஜா "ம்....மா !...அ...ம்...மா !" என்று கூப்பிட்டபடி, தன் தந்தையின் மடியிலிருந்து விஜயாவின் மடிக்குத் தாவினான்! தாவியதும் விஜயாவின் மார்பகத்தைத் துழாவ முனைந்தான் ! விஜயா கெட்டிக்காரி. பரிவுடன், கண் கலங்க, பாலூட்டும்

சீசாவை குழந்தையின் கனி இதழ்களில் செருகிப் பொருத்தி விட்டாள் ! குழந்தை பாலமுதம் உண்டது !

இவ்வளவு களைமிக்க அற்புதச் சிரிப்பையெல்லாம் ராஜா இந்த முப்பது நாட்கள் எங்கேதான் ஒளித்து வைத்துக் கொண்டிருந்தானோ ?....

சிவஞானம் புதிய தெளிவுடன் தலை நிமிர்ந்து நின்றான். முகத்தைத் துடைத்துக்கொண்டான். முடி இழைகள் குத்திட்டு நின்றன. புதிய புன்னகை அவனது வெளுத்துக்கிடந்த உதடுகளில் புதிய தெளிவுடன் விளையாடத் தொடங்கியது : "மல்லி... ! ....மை டியர் மல்லிகா ! கண்ணே மல்லி !.... இனி வழக்கம் போல நீதான் என் உலகம் !... எஸ்....இன்டீட், மல்லிகா !"

கதைப் புத்தகங்கள் குவிந்தன ! சிகரெட்டுகள் விரிந்தன !

ராமையா சராசரி மனிதனாக மலைத்துப் போய் நின்று விட்டான் !... அதிசயப் பொருளைப் பார்ப்பது போல சிவஞானத்தை அவன் பார்த்தான் !....

அன்றிரவு 'போட் மெயி'லில், முதல் வகுப்புப் பெட்டியின் ஒரு முனையிலே, சிவஞானம் அமைதியுடன் நித்திரை வசப் பட்டிருந்தான் !

எதிர்முனையில், விஜயாவின் பாசம் செறிந்த இன்ப அரவணைப்பிலே குழந்தை ராஜா நிம்மதியுடன் கண்வளர்ந்து கொண்டிருந்தான் !.... 'கோயா' பவுடர் அற்புதமாக மணம் பரப்பிக்கொண்டிருந்தது. பாலூட்டும் சீசா தயாராகக் காத்துக் கொண்டேயிருந்தது !...

சொக்க வெள்ளிப் பாற்குடம் விண்ணிடைத் தவழ்ந்து உருண்ட அழகை உணர்ந்து, அமைதி பெறவேண்டி, கண் விழித்துக் கொண்டிருந்தது ஒரேயொரு ஜீவன் மட்டுந்தான் !— ஆமாம், அவள் ஒருத்திதான் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தாள் !

அவள் யார் தெரியுமல்லவா ?

அவள்தான் விஜயா !....

# வசந்தம் திரும்பி வரும்!

## 1

## ஞானபண்டிதன்

அசோக மரங்களின் பசுந்தளிர்களிலே செஞ்சுடர்ச் செல்வனின் இளம் பொற்கிரணங்கள் பிரதிபலித்துக்கொண் டிருந்தன.

இரு பக்கங்களிலும் காவலாகவும் துணையாகவும் நின்று கொண்டிருந்த அம்மரங்களுக்கு நடுவே அமைக்கப்பட்டிருந்த அந்தப் பங்களா, இளங்காலைப் பொழுதில் கம்பீரமான அழகுடன் விளங்கிக்கொண்டிருந்தது. கட்டடத்தின் அடிப்பகுதியில் கிளிப்பச்சை நிறமும் அதற்கு மேலே மெல்லிய ஊதா நிறமும் பொலிந்தன ; மாறுபட்ட அவ்விரு வண்ணங்களின் கூட்டுறவில் அந்தப் பங்களா, ஆரோக்கியமான ஓர் எழிலும், அமைதியான ஓர் ஆனந்தமும் பூண்டு திகழ்ந்தது என்றே சொல்ல வேண்டும்.

அந்தப் பங்களாவின் மாடியிலிருந்த ஹாலின் கீழ் மூலை வட்டத்தில், காண்பவர்களது மனங்களைக் கவரும் 'செஸ்ட்னர்' கடிகாரம் நிதானமாக ஏழுமுறை ஒலித்தது ; ஓய்ந்தது.

அந்த ஓர் ஓசையின் நுணுக்கமான ஒலியலைகளின் அமைதிக்குப் பிறகு, மெத்தையை விட்டு எழுந்தார் சோமசேகர். எழுந்ததும், கைகள் இரண்டையும் ஒன்றோடு ஒன்றாக இணைத்துத் தேய்த்து உள்ளங்கைகளைப் பார்த்தார்.

'பகவானே !' என்று அவரது உதடுகள் முணுமுணுத்துக் கொண்டன. போர்வையை உதறிவிட்டு எழுந்தார். மாடியின் ஆளோடித் தாழ்வாரக் கைப்பிடியைப் பிடித்தவராக, தூரத்துப் பார்வையைச் செலுத்தினர். திட்டுத்திட்டான மலைப்பகுதிகளும் பசும் புல்வெளித் திடல்களும் மரக்காடுகளின் கூட்டங்களும் அவரது பார்வையை 'நிரந்து' கொண்டிருக்க வேண்டும். இயற்கையின் சுவைப்பில் அவர் மனம் மதலை ஆனது.

பல்லாவரத்தை ஒதுக்கிவிட்டு, மின்சார ரெயில் ஓடிக் கொண்டிருந்த சத்தம், தொலை தூரத்திலிருந்து மிதந்து வரும் வீணையின் சுநாதமாக ஒலித்தது.

சோமசேகர் ஓர் அரைக்கணம் தம் கண்களை இறுக்கமாக மூடிக்கொண்டார். ஏதோ ஒன்றை — அல்லது ஒரு நிகழ்வை எண்ணி—அழுத்தமுடன் எண்ணி அமைதி காத்தவராக அவர் போக்கும் பாவனையும் தோன்றின. இணைந்திருந்த விழி இணைகள் இன்னமும் மோனநிலையினை விலக்கவில்லை ; விலக்க முடியவில்லை. சிறு பொழுது கழிந்தது. அவர் தம்முடைய கண்களை மெள்ளத் திறந்தார். நினைத்த ஒன்றை எப்போதுமே நினைவிற்கொள்ளக் கடமை கொண்டவர் மாதிரி அவர் முகபாவம், இருந்தது ; விழிகளை மூடி மூடித் திறந்தார். இமை வரம்புகளில் நீர் முத்துக்கள் வரம்பு கட்டி நின்றன.

'ஞானபண்டிதன் !....'

ஒரு முறை இந்தப் பெயரை அவர் தமக்குத்தாமே உச்சரித்துக் கொண்டார். அவருடைய உதடுகளின் ஓரங்கள் புன்னகையைக் கூட்டலாயின. அவர் 'விசுக்'கென்று திரும்பினர். ஸ்டூலில் இருந்த காப்பிக்கோப்பையை எடுத்தார். அதைச் சுமந்தபடி, பேஸினை அடைந்து, குழாயைத் திருகி, வாயைக் கொப்பளித்து முடித்து, காப்பியையும் குடித்து முடித்தார் ; பிறகு, கைக்கடிகாரத்தைப் பார்த்தவாறே சிகரெட்டைக் கொளுத்தினர். புகையை உறிஞ்சி உறிஞ்சி உமிழ்ந்தார்.

அப்போது ரேடியோவில் செய்திகள் வாசிக்கப்பட்டன ! பாகிஸ்தானின் துராசைக்கு நல்ல பாடம் கற்பித்துக்கொடுத்த நம் வீரர்களின் திறனையும் நாட்டுப்பற்றையும் பாராட்டி

அவர்கள் அனைவருக்கும் வாழ்த்தும் நன்றியும் தெரிவித்துப் பேசிய பாரதப் பிரதமரின் பேச்சுக்கள் நினைவூட்டப்பட்டிருந்தன !...

சோமசேகர் மாடிப்படிகளைக் கடக்க முனைந்தார். 'எஸ்.... எட்டு மணிக்கு பிளேன் வந்திடும்....ஞானபண்டிதனை—என் ஞானபண்டிதனை — இன்னும் அரை மணிக்குள் சந்தித்துவிட முடியும். அப்பப்பா !... எத்தனை பெரிய இடைவெளி !...ஐந்து நீண்ட பெரும் ஆண்டுகளல்லவா ஓடிவிட்டன, அவன் அமெரிக்காவுக்குத் தொழில் நுட்பப்படிப்புப் படிக்கப் போய் !... ஊம் !' என்று அவர் உள்ளூற நினைத்தார் ; மகிழ்ந்தார்.

சோமசேகர் குளித்தார் ; புது உடைகள் அணிந்தார். வெளிறிய லெனின் தாடியையும் நரை மீசையையும் வருடி விட்டவண்ணம், நிலைக்கண்ணாடியின் முன்பாக வந்து நின்றார். சிப்பை எடுத்துத் தலைமுடியை வாரிக்கொண்டார். விபூதிமடலை அண்டி, ஒரு துளி எடுத்து நெற்றியில் அணிந்தார். ஒரே சந்திப்பாகக் கூடியிருந்த தெய்வங்களுக்கு ஒருசேர வந்தனை செலுத்தினார்.

அப்புறம், அவர் மேற்புறச் சுவர்ப்பக்கமாக விசையுடன் நகர்ந்தார்.

அண்ணல் காந்தியின் பெரிய ஓவியம் மாட்டப்பட்டிருந்த இடத்திற்கு சோமசேகர் நெருங்கிய போது, மாடிப்படிகளைக் கடந்து வந்த காலடி ஓசையை அவர் கவனிக்கத் தவறவில்லை.

திரும்பினார்.

"ஐயாவுக்கு டிபன் இருக்குதுங்க !" என்றான் வேலப்பன். இருபது ஆண்டின் அனுபவப் பாசம் நன்றியாய்க் கனிந்ததே !...

"இருக்கட்டும், வேலப்பா ! நீ போ !... நான் கீழே வரும் போது காப்பி சாப்பிட்டுக்கொள்கிறேன் !" என்றார் பெரியவர் சோமசேகர்.

வேலப்பன் போய்விட்டான்.

பணியாளின் தலை மறைந்ததும், மீண்டும் காந்திஜியின் படத்தை நெருங்கினார் சோமசேகர். படத்தின் உள் வசமாக இருந்த பொத்தான் ஒன்றை அழுத்தினார். கதவு திறந்தது.

கீழ்த்தட்டில் அவர் கையை நுழைத்தார்.

புகைப்படத் தொகுப்பு அட்டை வந்தது.

புரட்டினார்.

ஓரிடத்தில் அவர் பார்வை நிலைத்தது.

'அன்னபாக்கியம் !...குழலி!....' என்ற பெயர்களை உச்சரித்தார் அவர். குரல் நைந்தது. விழிநீர் வடிந்தது. நெடுமூச்சுப் பிரிந்தது. 'அன்னபாக்கியம்! குழலி !'—எதிரொலி கிளம்பிற்று.

மறுவினாடி, விசை இயங்க, கதவு மூடப்பட்டது.

திரும்பினார் அவர். 'அண்ணலே !...' என்று பரிதாபமாக விளித்தவராக, கண்ணீரை ஒற்றினார் அவர்.

கைக்கடிகாரம் அவரைத் தூண்டிவிட்டது போலும் !

பலகாரத்தைச் சாப்பிட்டார் ; காப்பி அருந்தினார். கீழ்த் தளத்தில் நேர் வசமாக அமைக்கப்பட்டிருந்த ஞானபண்டிதனின் போட்டோவை ஒரு முறை பார்த்துப் பரவசம் உற்றவராக, அங்கிருந்து நகர்ந்தார்.

"வேலப்பா !.... தம்பி இன்னும் கொஞ்சம் நாழியிலே வந்திடும் !.... எல்லாம் ரெடியாயிருங்க !...'

"ஆகட்டுமுங்க, பெரிய ஐயா !" என்று பணிவுடன் சொன்னான் வேலப்பன். "சின்ன ஐயா பெரும் படிப்பு படிச்சு மேலைச் சீமையிலேருந்து திரும்பி வார இந்தக் கண் கொள்ளாக் காட்சியைக் காணுறத்துக்கு அம்மாதான் இல்லீங்க !... அவங்க மட்டும் இருந்திருந்தாக்க, அவங்களோட பெற்ற வயிறு நெறைஞ்சு போயிடுமே !" என்று முடித்தான் தீனக்குரலில்.

சோமசேகர் சமாளித்துக்கொண்டார்.

தொலை பேசி அழைத்தது.

சோமசேகர் பேசினார். தொழிற்சாலையின் நிர்வாகி பேசினார். நிர்வாகி சச்சிதானந்தமும் விமானக்கூடத்துக்கு வந்து விடுவார். இது பெரியவர் ஆணை.

'ஸ்டாண்டர்ட்' பறந்தது.

## மொட்டைத்தலை + முறுக்குமீசை !

பறந்து வந்த விமானம் பாங்குடன் தளத்தில் இறங்கியது.

மீனம்பாக்கம் விழாக்கோலம் பூண்டிருந்தது.

சோமசேகர் இமை வலிக்க, விமானத்தையே நோக்கியவாறு நின்றார். அவர் மனம் இனம் விளங்காத மகிழ்வுடனும் இனம்புரிந்த நிம்மதியுடனும் எம்பி எம்பித் தணிந்தது.

அதோ, ஞானபண்டிதன் !

படர்ந்து வந்த கோலம் நிறை காலைக் கதிரவனின் பொன்னொளியில் குளித்த வண்ணம், ஞானபண்டிதன் படிகளைக் கடந்து இறங்கி வந்தான். 'ஷார்க்ஸ்கின்' அங்கி பளபளக்க, பூட்ஸ் ஒலி சரசரக்க, அவன் அழகே உருவமாக, உருவமே ஓர் அழகாக நடந்துவந்தான். அவன் பார்வை எதிர்வசமாக லயித்திருந்தது. மறுகணம், "அப்பா !..." என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூவி அழைத்தான்.

"தம்பி !" என்று பாசத்தின் நெருக்கத்துடன் ஞானபண்டிதனை வாரி எடுத்து அணைத்துகொண்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார் சோமசேகர்.

நிர்வாகி சச்சிதானந்தம் கை கூப்பி, பெரிய மலர்மாலையை ஞானபண்டிதனுக்கு அணிவித்தார். பூச்செண்டையும் கொடுத்தார்.

"வா, தம்பி, போகலாம் !" என்று அழைத்தார் சோமசேகர்.

'ம்' கொட்டிக்கொண்டே அடியெடுத்து வைத்த ஞானபண்டிதன், பின்புறம் திரும்பினான்.

அப்போது, அவனை நெருங்கி வந்தாள் மேலைநாட்டு யுவதி ஒருத்தி. 'டீக்'காக உடுத்தியிருந்தாள் அவள். ரோஜா இதழ்களை அவள் மேனியில் இடம் விடாமல் விரித்த மாதிரி

அவ்வளவு அழகான நிறத்துடன் ரோஜப்பூவின் உருவம் பூண்டு திகழ்ந்தாள் அப்பெண்மணி.

அவள் பெயர் : ஸ்டெல்லா ஜான்ஸன் !

அவள் ஞானபண்டிதனை நெருங்கி, ஆதரவுடன் அவன் கரங்களைப் பற்றினுள். "தென்....ஷல் ஐ டேக் லீவ் ஆப்.: யூ, மிஸ்டர் ஞானபண்டித் ?..." என்ருள். அவளது முறுவலுக் கென்று அப்படி ஒரு காந்தியா ?...அமெரிக்க அழகு என்ருல், சாதாரணமா, என்ன ?

தன்னுடன் தன் பங்களாவுக்கு வந்து, சாயா அருந்திச் செல்லும்படி அன்புடன் வேண்டுகோள் விடுத்தான் அவன்.

அவள் அந்த அன்பின் அழைப்பினை மனபூர்வமாக ஏற்ருள்.

அவள் காட்டிய இணக்கம் ஞானபண்டிதனுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. "ஐ ஆம் ஸின்ஸியர்லி இன்டெட்டட் டு யூ, மிஸ் ஸ்டெல்லா ஜான்ஸன் !" என்று நன்றி பாராட்டினுன் அவன்.

இரு ஜோடிக் கண்களும் ஒருமனத்துடன் சந்தித்தன ; பிரிந்தன.

இப்படிப்பட்ட காட்சியைக் கண்ட சோமசேகர் முகம் ஏனே கலவரம் காட்டியது. அவர் ஒரு சம்பவத்தை பசுமை திகழ நினைவுகூர்ந்தார்.

அந்த ஒரு சம்பவம் :

அன்று ஞானபண்டிதன் அமெரிக்காவுக்கு அரசாங்கத்தின் ஆதரவுடன் பயணப்பட்டான். அப்போது, ஞானபண்டிதனைத் தனியே அழைத்து, "தம்பி ! காதலுக்கும் கற்புக்கும் நம் நாட்டிலே இருக்கிற மதிப்புப் போல—மரியாதையைப் போல—மேலை நாடுகளிலே இருப்பதில்லை. ஆனதாலே, நீ அயல் நாட்டுப் பெண்களின் விஷயத்திலே ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமப்பா !..." என்று நாசூக்காக எச்சரித்தார்.

அவனும் அவரது இதயத்தைப் புரிந்துகொண்டு, "உங்க மகன் உங்களைப் போலவே நல்ல பெயர் சம்பாதிப்பான் அப்பா ! துளியும் கவலைப்படாதீங்க, அப்பா !.... தந்தைக்குத் தந்தையாவும், தாயாகவும் இருந்து என்னை வளர்த்து ஆளாக்கிவருகிற உங்க மனசுப்படியே நான் நடப்பேன் அப்பா !" என்று உறுதி மொழிந்தான் அவன்.

அவன் சொற்கள் அவருக்குப் பாலை வார்த்தன.

ஆனால், இப்போது ஏன் அவர் நெஞ்சம் அப்படித் தவிக்கிறது ?

ஞானபண்டிதன் தன் தந்தையை நோக்கினான் ; ஸ்டெல்லா ஜான்ஸனையும் நோக்கினான்.

"அப்பா, இவள் பெயர் ஸ்டெல்லா ஜான்ஸன் ! வாஷிங்க்டன் படிப்பில் எனக்குக் கிடைத்த தோழி. தங்கமான பெண். இவள் தகப்பனார் வாஷிங்க்டன் நாட்டில் ஒரு பெரிய தொழிலதிபர். படிப்பிலும் என்னைப் போலக் கெட்டிக்காரி. என் படிப்பின் உயர்வு கண்டு என் பேரில் ஒரு பிரியம் வைத்திருக்கிறாள். அவ்வளவுதான் !... இவளை நம் வீட்டுக்கு டீக்கு அழைத்திருக்கிறேன் !" என்று விளக்கமாகச் சொன்னான்.

மகன் முகத்தையே பார்த்திருந்த அவருக்கு, ஏதோ ஒரு வகையான அமைதி கனியத் தொடங்கியது. "அப்படியா ? ரொம்பவும் சந்தோஷம், தம்பி !" என்று மகிழ்ந்தார். மகனை அன்புடன் 'தம்பி' என்று அழைத்து ஆனந்தப்பட்டு வரும் அதே பான்மையின் மாற்று, ரவையும் மாறாமல் அழைத்தார். பிறகு, விருந்தாளியை டீக்கு வரும்படி தம் பங்கிலும் அழைத்தார். நாகரிகமான போக்கின் விதியும் அதுவேதானே ?

அவளும் 'ஓ, கே' சொன்னாள்.

கார் விரைந்தது.

தொடர்ந்து வந்த ஏதோ ஒரு காரின் சத்தம் கேட்டுத் தற்செயலாகத் திரும்பினார் சோமசேகர்.

அவர் முகம் ஏன் அப்படி பேயறை பட்டது போல அப்படி வெளிறிவிட்டது ?

மொட்டைத்தலையும் முறுக்குமீசையும் திகழ விளங்கிய அந்தப் பயங்கர மனிதன், விஷமப் புன்னகை சொரிந்த வண்ணம், காரை ஓட்டிக்கொண்டே வந்தான். அவன் பார்வை முன்னே லயித்து விட்டிருந்தது. அடுத்த நிமிஷத்தில், அவன் என்ன எண்ணமிட்டானோ, ஏதோ ஒரு தீர்மானத்தை உருவாக்கிக் கொண்டவனைப் போலக் கண்களை உருட்டி விழித்தான். பிறகு, முன்னால் சென்ற 'ஸ்டாண்டர்ட்' காரை 'ஓவர்டேக்' செய்யத் தொடங்கிவிட்டான் !

# 3

## ''டீ, ரெடி !''

'செந்தில் விலாசம்' என்ற எழுத்துக்கள் துலாம்பரமாக மின்னின.

ஞானபண்டிதன் காரிலிருந்து இறங்கினதும், பங்களாவின் அவ்வெழுத்துக்களைத்தான் முதலில் பார்த்தான்.

சோமசேகர் முதலில் செல்ல, அவரைத் தொடர்ந்து ஞானபண்டிதன் செல்ல, அவனைப் பின்பற்றித் தொடர வேண்டியவள் ஆனாள் வாஷிங்க்டனின் அழகுக் கன்னி ஸ்டெல்லா.

''இதுதான் நம் பங்களா !'' என்றார் பெரியவர்.

''இதுதான் எங்களது புதிய பங்களா !'' என்றான் ஞானபண்டிதன், ஸ்டெல்லா ஜான்ஸனிடம்.

வாஷ்ங்க்டனை அடைந்த மூன்றாம் மாதத்தில் — அதாவது, கிறிஸ்துமஸ் விழா கழிந்த மூன்றாவது நாளில்—சோமசேகரிட மிருந்து வந்திருந்த கடிதத்தில், தாம் புது பங்களா கட்டி அங்கு குடி வந்துவிட்ட விவரத்தைக் கோடிட்டுக் காட்டியிருந்தார்.

தோட்டம், பங்களா, லான், ஓய்வு மனை என்று பிரிந்திருந்த பகுதிகளைச் சுற்றிக் காட்டினார் நிர்வாகி.

ஞானபண்டிதனுக்குப் பங்களா ரொம்பவும் பிடித்து விட்டது. அவனது இனிய நற்கனவுக்களை எதிர்காலச் சங்கிலி யுடன் பிணைத்து வளர்த்திவிட உதவுவதாகவே அப்பெருமனை அவனுக்குத் தோன்றியது. அவ்வுணர்வு அவனுள் புதிய தெம்பை ஊட்டவும் செய்தது.

பங்களா மிகவும் நூதனமான கவர்ச்சியுடன் பொலிவதாகப் பாராட்டுத் தெரிவித்தாள் ஸ்டெல்லா.

நன்றி நவின்றான் அவன்.

கீழ்த்தளத்தின் தலைப்பில் தொங்கிய தன்னுடைய பெரிய புகைப்படத்தைப் பார்த்த போது, அவனையும் அறியாமல் ஒரு வகைப்பட்ட பெருமிதம் ஊறியது. 'என்பால் என் தந்தை கொண்டுள்ள பாசத்துக்கு ஏது அளவு ?' என்று சிந்தித்தான் அவன்.

டீ பரிமாறுவதற்கான திட்டங்களைச் செப்பினார் அவர்.

ஹாலில் அலங்காரமாகப் போடப்பட்டிருந்தன ஆசனங்கள். அவற்றின்மீது பட்டு விரிப்புக்கள் போர்த்தி விரிக்கப் பட்டிருந்தன.

அவற்றை மேற்பார்வையிட்டவண்ணம் ஏதோ சிந்தனை செய்தபடி நின்றார் சோமசேகர். அன்றிரவில் அவர் சரியாகத் தூங்கவில்லை. ஆகையால், கண் வளையங்களில் லேசான வலி மிதந்தது. 'இராத்திரி எத்தனை பயங்கரமான கனவு வந்து விட்டது! சே!' என்ற அச்சம் அவரைப் பிடர் பிடித்துக் குலுக்கிவிட்டது.

சுற்றி வந்தான் ஞானபண்டிதன்.

தயங்கித் தயங்கி வந்தான் வேலைக்கார வேலப்பன்.

அவனை ஒரு முறை ஆழமாகப் பார்த்தார் ஞானபண்டிதன். "யார், நீங்க வேலப்பன்தானே ஐயா ?" என்று பவ்யமாகவும் மரியாதைத் தொனியுடனும் விசாரித்தான் அவன்.

வேலப்பனுக்கு உச்சி குளிர்ந்தது. நன்றிக் கண்ணீர் சுரந்தது. "ஆமாங்க, சின்ன எஜமான் !... உங்களைத் தோளிலே போட்டு வளர்த்த அதே ஏழைதானுங்க! எங்கே என்னை மறந்துப்புட்டீங்களோன்னுதான் நான் மறுகித் துவண்டு கிட்டிருந்தேன், இம்புட்டு நேரமாய் ! இந்த ஏழைக்குப் போன உசிரு திரும்பியிருச்சுதுங்க தம்பி !" என்றான் அவன்.

"முதலிலே பார்த்ததும் எனக்குச் சரியாய் மட்டுப்படலே. அவ்வளவுதான். உங்களை மறக்கிறதும், நன்றியை மறக்கிறதும் ஒண்ணுதான். !... நீங்க தெம்பாயிருங்க !" என்று சொல்லி அவரது வசதிகள் பற்றிப் பரிவுடன் விசாரித்தான்.

"பெரியவுக இருக்கிறப்ப, எனக்கு என்னுங்க குறை? நானும் ஒண்டிக்கட்டை! எனக்கு இங்கே தந்திருக்கிற வசதிகளே எதேஷ்டம்! ஆமாங்க, தம்பி !" என்றான் வேலப்பன்.

அவனுக்கு அப்பேச்சு இதம் ஈந்தது.

சற்றுப் பொழுது ஓய்வு கொண்டிருந்தாள் ஸ்டெல்லா.

அவளை இப்போது பார்த்தான் ஞானபண்டிதன். டீக்கு அழைத்தான்.

ஸ்டெல்லா தன் டம்பப்பையைத் திறந்து முகம் பார்த்தாள்; உதட்டுச்சாயத்தை மறுபடியும் அப்பிக்கொண்டாள். பஞ்சில் பவுடரைப் பூசிக்கொண்டாள். அவனுடன் புறப்பட்டாள் அவள்.

இரண்டாங்கட்டில் 'ரேடியோக்ராம்' இருந்தது.

அழகு கொஞ்சும் மழலையைக் கண்டவுடன் தன்னாலேயே இதழ்களில் மென்முறுவல் இழையுமே, அது போன்று, அவள் ஆனந்தப் புன்னகை செய்தாள். ரோடியோகிராமை நெருங்கினாள். பொத்தான்கள் இயங்கின.

'ஜாஸ்' சங்கீதம் துலாம்பரமான சுவையுடன் புறப்பட்டது.

"தம்பி, டீ ரெடி!" என்று குரல் கொடுத்தார் பெரியவர்.

ஸ்டெல்லாவும் ஞானபண்டிதனும் ஹாலை அடைந்தனர். சாயா பரிமாறப்பட்டிருந்தது.

"நீங்கள் அருந்துங்கள், மிஸ்டர் ஞான்பண்டித்!" என்று ஆங்கிலத்தில் உபசரித்தாள் ஸ்டெல்லா.

"நான் உங்களை முதலில் உபசரிக்க வேண்டும். அதற்குள் நீங்கள் முந்திக்கொண்டுவிட்டீர்களே!" என்றான் ஞானபண்டிதன், ஆங்கிலத்தில்.

"இது பெண்களின் பொதுவான பழக்கம்; பாரம்பரியத் தொடர்புள்ள பண்பாடும்கூட!" என்று விமரிசனம் செய்தார் சோமசேகர்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டபின், சோமசேகரரைப் பார்த்தனர்.

டீ முடிந்தது.

பெரியவருக்கு நன்றி நவின்றாள் ஸ்டெல்லா.

பிறகு, ஸ்டெல்லா இளம்புன்னகை பூத்தபடி, ஞானபண்டிதனை சுவாதீனமாக நெருங்கினாள். "மிஸ்டர்! உங்களுடைய சில கொள்கைகள் எனக்கு நிரம்பவும் பிடிக்கின்றன. குறிப்பாக, நியூயார்க்கில் அயல் நாட்டார் கலைக்

குழு சார்பில் உங்கட்கு அளிக்கப் பெற்ற விருந்து உபசரிப்பில் நீங்கள் உங்களது இலட்சியங்கள் குறித்துப் பேசியதை என்னல் மறக்கவே முடியாது. அபலைப் பெண்களின் நல் வாழ்வுக்குப் பாடுபடுவதும், ஏழைகளின் வாழ்வு உயர உழைப்பதுவும் உங்களது நிரந்தரப் பணிகளானல், அவையே உங்களை உச்சத்தில் கொண்டு வைத்துவிடும். என் பாராட்டுகள் எப்போதும் உங்களுக்கென ரிசர்வ் செய்யப்பட்டிருக்கும்” என்று சொன்னள். அடுத்த வசந்தத்தில் நடக்கவிருக்கும் தன் திருமணத்துக்கு விஜயம் செய்யும்படியும் கோரினள் அவள்.

அவன் அவசியம் வருவதாகக் கூறிவிட்டு, அவள் புது டில்லி விஜயத்தை முடித்துக்கொண்டதும் தகவல் தந்தால், அவன் அவளைப் புது தில்லியில் சந்திக்க முடியுமென்றும் தெரிவித்தான்.

“அது புது டில்லியிலுள்ள என் உறவினரின் சௌகரியத்தைப் பொறுத்தது. எது எப்படி ஆனலும், நம் நட்பு காலத்தாலோ, தூரத்தாலோ பாதிக்கப்படாததாகும்!” என்றள் ஸ்டெல்லா.

அவள் பேச்சை ஆமோதித்துச் சிரித்தான் அவன்.

எல்லோரிடமும் ‘விடை’ பெற்றுப் புறப்பட்டாள் ஸ்டெல்லா ஜான்ஸன். போகும் தருணம் அவளது செவ்வரி படர்ந்த இமை வட்டங்களில் ஈரம் கரை-கட்டித் திகழ்ந்தது. கார் புறப்பட்டது. அவனும் அவளுடன் புறப்படவே எண்ணியிருந்தான். ஏனே சோமசேகர், அவன் அவளுடன் புறப்பட்டு வழியனுப்புவதை விரும்பவில்லை. ஆகவே, அவள் மட்டுமே புறப்பட்டாள்!

இப்போது சோமசேகரும் ஞானபண்டிதனும் மாடியை அடைந்தனர். இருவரும் எதிரும் புதிருமாக அமர்ந்து உரையாடினர்கள். வாஷிங்க்டனிலுள்ள ‘ரிச்சர்ட்ஸன் அண்ட் ரிச்சர்ட்ஸன்’ கம்பெனியின் ஒத்துழைப்புடன் இங்கே டயர் செய்யும் தொழிலை ஆரம்பிப்பதற்கான தன் திட்டம் பற்றியும், அதற்கான வகையில் தன்னுடைய மேலை நாட்டுப் படிப்பு பூரணமாகக் கை கொடுக்கும் விதத்தையும் அவன் விஸ்தாரமாக விளக்கிக்கொண்டிருந்தான்.

அப்போது, ரேடியோவில் சிறு சலசலப்பு நிகழ்ந்தது, அதற்குப் பின் இமைப் பொழுதின் மௌனத்துக்குப் பிறபாடு, "'ரேடியோ சிலோன்...வர்த்தக ஒலிபரப்பு !'' என்ற அறிவிப்பு கேட்டதுதான் தாமதம், விரைந்தெழுந்த சோமசேகர் பதட்டத்துடன் ரேடியோவை 'சடக்'கென்று நிறுத்தினர். வேர்வை வழிந்தது !

அவருடைய இந்தப் பதட்டமான பரபரப்புச் செய்கையை கண்டு, ஒன்றும் புரியாமல் அப்படியே சிலையாக வீற்றிருந்தான், ஞானபண்டிதன் ! பிறகு, அவன் பார்வை அவர் பேரில் நிலைத்தது.

அவரோ, குனிந்த தலையை நிமிர்த்தவேயில்லையே !...

# 4

## அந்தி வந்தது

தண்டையார்ப்பேட்டையில் சேணி அம்மன் கோயில் பகுதியின் சார்பில்தான் சோமசேகரின் கண்ணுடித் தொழிற் சாலை இருந்தது.

ஐந்து வருஷங்களுக்கு முன்னம் சாதாரணமான தொழில் சாலையாக ஆரம்பமான அது இப்போது எவ்வளவு வளர்ந்து விட்டது!—எங்கும் சுற்றிப் பார்த்த ஞானபண்டிதனுக்கு வியப்பு விரிந்தது. ஆனாலும், மேலை நாடுகளின் தொழிற் வளர்ச்சியை ஒப்பிட்டுப் பார்க்கக்கூட அவனுக்கு மனமில்லை. அவ்வாறு ஒப்பிட்டுப் பார்த்தபோதோ அவனுக்கு ஏமாற்றமும் மனக்குறைவுமே மிஞ்சலாயின. 'நம் பாரத நாட்டிலும்கூட இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் எல்லாம் பூர்த்தி பெற்று விட்டால், தொழில் வளம் ஓரளவுக்குச் செழித்துத் தழைத்து விட ஏது உண்டு' என்பதாகவே அவன் கருத முற்பட்டான்.

அவனது அயல் நாட்டுப் பயணம் அவனுள் உருவாக்கி யிருந்த புது டயர்கள் உற்பத்தித் தொழிலுக்கான கட்டடம் நிர்ணயமானது. கிண்டியில்தான் தொழில் ஆரம்பமாகப் போகிறது. அரசாங்க உதவியும் கிடைக்கும்.

ஞானபண்டிதன் எப்போதுமே சுறுசுறுப்பு மிக்கவன்.

அதிலும் இளரத்தம்.

பின் கேட்பானேன்!

நல்ல உள்ளம். நல்ல குறிக்கோள்களை ஊட்டி வளர்த்தன.

ஒரு மணி நேரத்தில் புதுத் தொழிலுக்கான முன்னேற் பாடுகளை பூர்வாங்க முறையில் தொடங்கிவிட்டான் அவன்.

சோமசேகருக்கு அவன் துடிப்பு மிகவும் பிடித்துவிட்டது.

அந்தி வந்தது.

அழகும் வந்தது.

அங்கிருந்து ஞானபண்டிதன் புறப்பட்டான்.

கார் மிகவும் எச்சரிக்கையுடன் ஓடியது.

ராயபுரம் பாலத்தின் கீழ்ப்பகுதியில் அவனுக்கு நண்பன் ஒருவன் இருந்தான்.

பெயர் : காளமேகம்.

அவன் எழுத்தாளன்.

அவன் ஞானபண்டிதனுக்குத் தொலைபேசி மூலம் அழைப்பு அனுப்பியிருந்தான். தன் இல்லத்தில் இரவுச் சாப்பாடு உண்ண வேண்டுமென்பது அவன் இஷ்டம். இவனும் சம்மதித்தான். பள்ளிப் படிப்பின் சிநேகம்!

காளமேகம் வீட்டின் வாசலிலேயே நின்றுகொண்டிருந்தான், ஞானபண்டிதனை எதிர்பார்த்து.

இருவரும் அன்பால் ஆரத் தழுவிக்கொண்டார்கள்; அளவளாவினர்கள். தன் கதைகளையெல்லாம் தன் நண்பனிடம் காண்பித்தான் காளமேகம். "நான் பி. அண்ட் ஸி—யில் வேலைபார்க்கிறேன்—டையிங் செக்ஷனில். எழுதுவது உபதொழில். வருமானத்தை உத்தேசித்து இப்படிச் சொன்னாலும், எழுதுவது என்பது என் வரை ஓர் ஆர்வத்தின் கிளர்ச்சியாகவே தோன்றியது. இங்கே எழுத்தை நம்பிப் பிழைப்பதென்பது துர்லபம். ஏதோ ஒன்றிரண்டு பேர்களால்தான் முடிகிறது. அதற்கும்கூட அவரவர்களுக்கென்று சில சலுகைகளும் பல செல்வாக்குகளும் துணையிருக்கின்றன. ஒருசிலர் அப்பட்டமாகத் திருடித் திருடி எழுதிப் பேர் சம்பாதித்துப் பணமும் சம்பாதித்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சிலரது முகமூடிகளைக் காலமும் பொது மக்களும்தான் கிழித்தெறிய வேண்டும்," என்று ஆத்திரத்துடன் பேசினான் அவன்.

இலக்கியத் திருட்டைப்பற்றிக் கேட்டதும், ஞானபண்டிதன் வெகுண்டான். புதுமைப்பித்தனின் பிரபலமான வாசகத்தை நினைவூட்டி, மேற்படி ஈனப்பிழைப்பை வெகுவாகச் சாடினான். "அந்நிய நாடுகளில் இப்படிப்பட்ட தகராறுகளே எழுவதில்லையாம். எழுத்தாளர்கள் என்றால் அங்கெல்லாம் ஒரு தனி அந்தஸ்தும் செல்வாக்கும் பொதுவாகவே உண்டு. வசதியான சம்மானமும் கிடைக்கிறதாம். ஒழுக்க உணர்வு உள்ளத்திலும் உடலிலும் ஊறிப் பண்பட்டுவிட்டால், எல்லாமே தன்னைப் போலச் சரியாகிவிடும்!" என்றான்.

"எஸ். யூ ஆர் ரைட் !" என்று அங்கீகரித்தான் காளமேகம்.

இருவரும் சாப்பிட்டார்கள். வரால் மீன் வறுவல் நாவுக்கு உணக்கையாக இருந்தது. இயற்கையான ருசியுடன் இருந்தது. அந்நிய தேசங்களில் எல்லாமே செயற்கைப் பாடம் தானே ?...

காளமேகத்தின் தாய் ரொம்பவும் அன்புடன் உபசாரம் செய்தாள்.

ஒரு கொத்துச் சோறு கூடுதலாக உண்டான், ஞானபண்டிதன். அந்த அம்மணியைப் பார்த்த போது, அவனுக்குத் தன் அன்னையின் ஞாபகம் எழுந்தது. தான் பிறந்த சில மாதத்திலேயே தன்னை ஈன்ற தாய் விதி வழி ஏகிவிட்ட விதியின் விளையாட்டை அவன் எப்படி மறப்பான் ?... 'அப்பா எவ்வளவோ நல்லவங்க. தியாகி. எனக்காகத்தான் அவர் மறுமணம் செய்துகொள்ளவில்லை !... என்னை வளர்த்து ஆளாக்குவதிலேயே மன அமைதியும் தன்னிறைவும் பெற்று வந்திருக்கிறுரே !'...

காளமேகத்தின் அன்னையின் நெற்றிப்பொட்டு ஞானபண்டிதனை வழியனுப்பி வைத்தது. காளமேகம் 'டாடா' சொல்லி விடை கொடுத்தான்.

கார் புறப்பட்ட சற்றைக்கெல்லாம் மழை பிடித்துக் கொண்டது. தம்புச் செட்டித் தெருவின் வழியாக கார் வந்தது. வழியில் நடைபாதை வாசிகள் தெரு விளக்குகளின் ஒளியில் குடிசைகளின் உள்ளே முடங்கியிருந்துவிட்டு, மழை விட்டதும் நடைபாதைக்கு வந்து சாப்பாட்டுத் தட்டுக்களை மறுபடியும் பரப்பிக்கொண்டு சாப்பிடத் தொடங்கின நேரம் அது. காரை வேகமாகச் செலுத்திஞன் அவன்.

மறுகணம், சடக்கென்று சேறு வாரி இறைக்கப்பட்ட சத்தம் கேட்கவே, பதட்டத்துடன் காரை நிறுத்திஞன் ஞானபண்டிதன்.

அவனுக்குத் 'திக்'கென்றது.

நடைபாதை வாசிகளின் சோற்றுத் தட்டுக்களிலே சேற்றுத் துளிகள் சிதறிவிட்டிருந்தன.

ஞானபண்டிதனின் விழிகள் நிரம்பிவிட்டன. இறங்கிஞன். "ஐயா, என்னை மன்னிச்சிடுங்க !...நான் மன்னிப்புக் கேட்கிற

திலுலே உங்களுக்கு நல்ல சோறு வந்திடாது. ஆனா, எனக்கு உங்க கஷ்ட நஷ்டத்திலே பங்கு கொள்ள வேணுமிங்கிற மனம் இருக்குது. இதை நம்பினால், அதுவே எனக்கு நிம்மதி,'' என்று சொல்லி, காரை அங்கேயே நிறுத்துவிட்டு, மண்ணடிக் கடைத் தெருவுக்கு விரைந்து மீண்ட அவனிடம் சில பிரியாணிப் பொட்டலங்கள் இருந்தன. ஆளுக்கு ஒவ்வொன்றாகக் கொடுத்தான். அன்பின் பரிசாக ஆளுக்குப் பத்து ரூபாய்மேனி பணமும் கொடுத்தான். உழைப்பதற்கு லாயக்கற்றவர்களாகக் கணித்துப் பரிசில்களைப் பங்கிட்டுக்கொடுத்தான் அவன். உழைக்க முடிந்தவர்களிடம் உழைப்பின் தத்துவத்தைப் புரியும் விதத்தில் விளக்கினான் அவன்.

உதவிய உள்ளத்தின் பெயரைக்கூட அறியும் நினைவின்றி, அப்படியே நின்றார்கள் நடைபாதை மக்கள்.

ஞானபண்டிதன் பல்லாவரத்தை நோக்கிக் காரைச் செலுத்த எண்ணி ஒரு சந்தில் மடங்கினான்.

அப்போது, இருட்டைத் துளைத்துக்கொண்டு பெண்ணின் தீனக்குரல் ஒன்று ஒலித்தது. அவன் காரை நிறுத்திவிட்டு, ஓலம் வந்த திசைக்கு நடந்தான்.

அது ஒரு பாழடைந்த மனை. மாடியிலிருந்துதான் பெண் அழுதுகொண்டிருந்தாள்.

பின்கட்டுப் பகுதியில் நின்ற ஒரு கம்பத்தின் வழியே ஏறினான் ஞானபண்டிதன். சுவரில் இருந்த ஓர் ஓட்டை வழியே பார்த்தான்.

ஓர் இளம்பெண் கண்ணீரும் கம்பலையுமாக நின்றாள்.

அருகே, மொட்டை மண்டையும் பயங்கரமான முறுக்கு மீசையும் திகழ ஒரு முரடன் நின்றான்.

பக்கத்திலே, ஒரு பணக்காரத் தடியன் நின்றான்.

''இந்தாப் பாரு பூவழகி, நான் சொல்லுறதைக் கேட்டுக் கொள். நாளை ராத்திரி இதே நேரம் வரை உனக்கு யோசிக்க டயம் கொடுத்திருக்கேன். கெட்டிக்காரப் பொண்ணாக நடந்துக் கிட்டியானா, உனக்கும் நல்லது; எனக்கும் நல்லது; இல்லாப் போனால், எப்படியும் இந்தப் பணக்கார ஐயாவோட சொத்தாக அன்னை ஆக்கிப்பிட்டுத்தான் மறு ஜோலி பார்ப்பேன் நான்!...

ஆமா, சொல்லிப்பிட்டேன் "!.... என்று முழங்கினன் அந்த முரடன்.

"அதெல்லாம் பகற்கனவு !" என்று காறி உமிழ்ந்தாள் அந்தப் பெண்— பூவழகி !

"இந்தச் செங்கோடன் கிட்ட சம்பிராயம் போட்டு யாருமே இது பரியந்தம் கெலிச்சது இல்லே ! நீ கன்னிப்பொண்ணு என்றதுக்காக நான் பொறுமையாய் இருக்கேன். சரி, நீ இங்கேயே கிட !' என்று சொல்லிவிட்டு, அந்த அறையின் கதவைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டான் செங்கோடன். தொடர்ந்தான் பணக்காரன்.

ஞானபண்டிதன் அவர்கள் பார்வையில் விழவில்லை.

ஆனல், கம்பத்திலிருந்து நழுவி விழுந்துவிட்டான். இருந்தாலும், மறுபடியும் கம்பத்தைச் சார்ந்து, மேலே ஏறினன். சுவரின் துவாரம் வழியாக, அக்கன்னிமலரை நன்ருகப் பார்த்தான். துணிவும் துடிப்பும் தூய்மையும் மிளிர அவள் நின்ருள். அருகில் சாப்பாடு இருந்தது. அதை எட்டி உதைத்தாள் அவள்.

பூவழகியைக் காப்பாற்ற வேண்டும் என்ற முடிவுடன் அவன் சிறு பொழுது சிந்தனை வசப்பட்டான். அவன் மறுபடியும் சுயஞாபகம் கொண்டு விழித்த போது, சிவப்புத் தொப்பிகள் சில தென்பட்டன. உடனே, கெட்டிக்காரத்தனமாக இறங்கிவிட்டான் ஞானபண்டிதன்.

அப்போதைக்குக் கால்ை எடுத்துக்கொண்டு புறப்படுவதைத் தவிர வேறு உபாயம் எதுவும் அவனுக்குத் தோன்றினல்தானே ?....

# செந்தில் விலாசம்

ஞானபண்டிதன் பங்களாவை அடைந்தான். 'செந்தில் விலாசம்' என்ற பெயர் அமைப்பில், அந்தம் கூட்டி எரிந்த நீலப் பாதரசக் குழல் விளக்கு அவனுக்கு நிரம்பவும் பிடித்திருந்தது. அதைப் போலவேதான், அந்தச் 'செந்தில் விலாசம்' என்ற பெயரும் அவனுக்கு அமைதி காட்டியது. ஆனல், 'செந்தில் விலாசம்' என்ற அப்பெயர், எந்த அடிப்படையில் சூட்டப் பட்டிருக்குமென்பது அவனுக்குப் புரியாத புதிராகவே தோன்றியது. 'இதைப்பற்றி இப்போதென்ன வந்தது?' என்ற நினைவு அவன் பிரச்னையை ஒதுக்கியது. அவன் காரை 'போர்டிகோ'வில் ஒதுக்கிவிட்டு உள்ளே பாய்ந்தான்.

நடுக்கூடத்தில் அவன் அடியெடுத்து வைத்தான்.

அங்கே அவன் தந்தை குஷன் சோபாவில் சாய்ந்திருந்தார். அவரது முகவிலாசம் சோம்பிச் சுருங்கிப் போயிருந்தது.

அவருக்குப் பக்கத்தில் யாரோ ஒரு நபர் மரியாதையுடன் கைகட்டி நின்றார்.

"அப்பா, உங்களுக்கு உடம்புக்குச் சரியில்லையா, என்ன?" என்று தடுமாற்றத்தோடு வினவினன் அவன்.

"ஒன்றுமில்லை தம்பி. நெஞ்சு வலிச்சது. இப்போது சரியாகிவிட்டது. டாக்டர் நாகபூஷணம் வந்துவிட்டு இப்போது தான் போனர்!"

அவர் பதில் அவனுக்குச் சாந்தி நல்கியது.

"இந்த ஆள் பர்மா அகதியாம். பெயர், சித்தரஞ்சனம். பெரிய குடும்பமாம்!" என்று முன்னுரை சொன்னர் சோமசேகர்.

அவன் அனுதாபப்பட்டான்.

"பர்மாவிலே எந்தப் பகுதியிலே வேலை பார்த்தீங்க?"

"மாண்டலேயிலே!"

"அங்கே வேலை ?"

"செட்டிய வீடு ஒன்றிலே சமையல் வேலைங்க !"

"ஒஹோ, அப்படியா ? சரி, இப்போது எங்க கண்ணாடித் தொழிற்சாலையிலே உங்களுக்கு என்ன வேலை தெரியும் ?"

"இப்போதைக்கு அது சம்பந்தப்பட்ட வேலை தெரிய மாட்டாதுங்க. ஆனா, நாலேஞ்சு தினத்திலே கற்றுக்கிடு வேணுங்க.!"

"ஒஹோ!" என்று சிரித்தான் ஞானபண்டிதன். பிறகு, நல்ல 'மனத்துடன் தன் தந்தையை நோக்கினான். மகனின் முகபாவனை நல்ல பதில் காட்டவே, பெரியவர் சொன்னார் : "நாளைக்கு எங்க பாக்டரிக்கு காலையிலே பதினொரு மணிக்கு சரியாக வந்திடுங்க. பார்த்து ஏதாவது வேலை போட்டுத் தரலாம் !"

அகதியாக வந்த தமிழ்மகன், தமிழ் மண்ணுக்கே உரித்தான நன்றியறிவு துலங்கி மின்னலிட, கை கூப்பிப் பிரிந்தான்.

"பெரியவர் எழுந்தார். ஞானபண்டிதனைச் சாப்பாட்டுக்கு அழைத்தார். அவனுக்காகவே சாப்பிடாமல் இருப்பதாகவும் சொன்னார்.

அப்பேச்சு அவனுக்குத் திகிலை வளர்த்தது. தான் நண்பன் வீட்டில் சாப்பிடப் போவது குறித்து முன்கூட்டியே டெலிபோன் மூலம் தெரிவித்திருக்கலாமே என்று இப்போது வருந்தினான். தந்தையுடன் சாப்பிட மீண்டும் சாப்பிட எழுந்தான்.

வேலப்பன் பறிமாறினான்.

பெரியவர் அனுபவித்துச் சாப்பிட்டார்.

ஞானபண்டிதனோ மென்று விழுங்கிக்கொண்டிருந்தான்.

"என்ன தம்பி, வயிறு மப்புப் போட்டிருக்குதா ?" என்று என்று கேட்டார் சோமசேகர்.

கடைசியில், பொய் சொல்லக்கூடாது என்ற விரதம் கொண்ட ஞானபண்டிதன் உண்மையைச் செப்பினான்.

தன் பேரில் ஞானபண்டிதன் வைத்திருக்கும் உயர்ந்த மதிப்பை எண்ணி இறும்பூதெய்தினார் அவர்.

எழுந்து கை கழுவி டவலில் கை துடைத்தார். 'சிகார் பைப்' புகையத் தொடங்கியது. சிணுங்கல் இருமலும் புகைந்தது.

"தம்பி, எனக்கு வரவர உடம்பு ரொம்ப க்ஷீணதசைக்கு வர ஆரம்பிச்சிட்டுது !...."

"ஆமாங்க ; நீங்க முதலில் உங்க உடம்பைப் பார்த்துக் கணும் !"

"அது சரி. இனி எல்லாம் சரியாகிப்பிடும். எனக்கென்று—என் மனசாட்சிக்கென்று—சில இலட்சியங்கள்—சில கனவுகள் — சில கடமைகள் உள்ளன. அவை பூர்த்தி ஆக வேண்டிய காலம் நெருங்கி வருது. நீ என் பக்கம் இருக்கையிலே, எனக்கென்ன தம்பி கவலே ? எல்லாம் தன்னலே சரியாகிப்பிடும் ! எல்லாம் அப்பன் செந்தில் வேலன் கிருபை !" என்று மெய்யுணர்ந்து பேசினர். இமை ஓரத்தே ஈரக்கசிவு இருந்தது.

ஞானபண்டிதன் வாய் மூடி மௌனியாக வீற்றிருந்தான். தந்தையின் உள்மனத்தின் பேச்சைப் பொதுப்படையாகவே எடுத்துக்கொண்டான் அவன். ஆனல் அவர் இறுதியில் கூறிய 'எல்லாம் அப்பன் செந்தில் வேலன் கிருபை !' என்ற வாசகம் அதனுள் வேலே செய்தது. பங்களாவுக்கும் 'செந்தில் விலாசம்' என்ற பெயர் சூட்டியிருப்பதற்கான முகாந்தரம் அவனுக்கு இப்போது பிடிபட்டுவிட்டது. 'அப்பாவுக்குத்தான் முருகக் கடவுள் பேரில் எவ்வளவு ஈடுபாடு !'

"தம்பி !"

"அப்பா !"

"டயர் பாக்டரி ஆரம்பிப்பதற்கு முன்னடி நீ எனக்கு ஒரு காரியம் செஞ்சாக வேணும் தம்பி !"

"சொல்லுங்கப்பா !"

"உன்னே நான் மாலேயும் கழுத்துமாப் பார்க்க வேணும் !" என்று சொல்லி, அவன் கண்களே ஆழ்ந்து நோக்கினர் சோமசேகரர்.

இத்துணே பெரும் பொறுப்பை இவ்வளவு சீக்கிரமாகத் தன்னிடம் சுமத்திவிடுவார் என்று அவன் துளியும் எதிர்பார்க்கவில்லேயே !—அப்போதைய அவர் மனநிலேயில் தான்

மறுதளிப்பது கொஞ்சமும் நல்லதல்ல என்றும் அவன் ஊகித்து உணர்ந்திருந்தான். "உங்க இஷ்டப்படியே ஆகட்டும்!" என்று கண்களை மூடிக்கொண்டு சொல்லிவிட்டான்.

அவர் படுக்கைக்குத் தமது தனி அறையை நாடினர்.

ஞானபண்டிதன் எழுந்து, தன்னுடைய அறைக்குச் செல்ல மாடிக்கு ஏகினன். சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி அவன் அமர்ந்தான். அப்போதுதான், அவன் தலையில் ஏதோ பாரம்—சுமை — ஏறியிருப்பதை உணரத் தலைப்பட்டான். அதுவரை இருந்த அமைதி பறிக்கப்பட்டதைப் போலவும் ஓர் ஏக்கம் அவனை அலைக்கழிக்க எத்தனம் செய்தது. 'அப்பா இப்படிப் பட்ட குண்டை இவ்வளவு சீக்கிரம் போடுவார் என்று நான் ட்ரீம்கூட பண்ணலையே!.... எனக்கென்று நானே எழுப்பிக் கொண்டுள்ள லட்சியங்கள், கடமைகள், கனவுகள் எல்லாம் என்னுவதாம்?...டைலமாடிக் பொஸிஷனிலே நான் அகப்பட்டுக் கிட்டேனே!' — நெடுமூச்சு விட்டான் அவன்.

அப்போது, வரும் வழியில் சந்தித்துப் பிரிந்த — அல்ல, தான் மட்டிலும் பார்த்துப் பிரிந்த அந்தப் புதிய அழகுப் பதுமையின் நினைவு அவனுள் புறப்பட்டது. அப்போதே அவளுக்குத் தான் உதவ முடியாமல் சந்தர்ப்பம் குறுக்கிட்டதற்கு கழிவிரக்கம் காட்டி வருத்தப்பட்டான். எப்படியும் நாளை இரவு எட்டரை மணிக்கு அவன் அந்த இடத்திற்குப் போய்விட வேண்டுமென்ற திட சங்கற்பம் எடுத்துக்கொண்டு, மெத்தையைச் சரண் அடைந்தான். 'ரிபெக்கா' நாவல் பிரிந்தது.

அப்பொழுது:

டெலிபோன் மணி அழைத்தது.

நெருங்கினன்.

தன் தந்தையை யாரோ அழைத்தார்கள்.

"அவர் தூங்கிவிட்டார்!...நீங்கள் யார்? உங்க பேர் என்ன? என்ன விஷயம்?" என்று கேள்விகளை அடுக்கினன் அவன்.

"எல்லாம் அவருடன்தான் பேசவேண்டும். ரொம்பவும் ரகசிய சமாசாரம்!" என்றும் அழுத்தலாகவும் கேலியாகவும் ஓங்கிய பாவனையில் பேசிவிட்டு வைத்துவிட்டான் எதிர்த் தரப்பு நபர்.

'யார் அந்த ஆள்? இதே குரலை நான் எப்போதோ, எங்கேயோ கேட்டது போல் இருக்கிறதே?....'

ஞானபண்டிதன் சிலையானான்!

# 6

## சுரங்க வழி

பொழுது புலர்ந்தது.

ஞானபண்டிதன் துயில் கலைந்து எழுந்ததுமே, தனக்கு அன்றைக்கு உள்ள முக்கியமான கடமையைப்பற்றிய நினைப்பு அவனை ஆட்கொண்டது. காத்திருக்கும் கடனுணர்வு அவனது இதழ்க் கரைகளிலே பூச்சிரிப்பை விளையாடச் செய்தது. அவன் எழுந்தான். காலைக் கடன்களை முடித்துக்கொண்டான் ; குளியல், காலைப் பலகாரம் — எல்லாம் முடிந்தன.

தந்தையிடம் சென்று அன்றைய தினம் தான் சந்திக்க வேண்டிய அலுவல்களைப் பற்றிப் பேச விழைந்தான். ஆகவே, அவன் மாடிக்கு விரைந்தான்.

"அப்பா !...." என்று குரல் கொடுத்துக்கொண்டே உள்ளே அவரது அறையில் அடி பிரித்து வைத்தான்.

பெரியவரைக் காணவில்லை.

படுக்கை காலியாக இருந்தது.

மீண்டும் அழைத்தான் அவன்.

நாலு பக்கங்களிலும் சுற்றிச் சுற்றிப் பார்த்தான்.

கடைசியில், ஏதோ கதவு திறக்கப்படுவது போல ஒரு மெல்லிய சத்தம் கேட்டது.

அவன் திரும்பினான்.

பூமியின் அடியிலிருந்து சுரங்க வழிமூலம் மேலே ஏறி வந்து நின்றார் சோமசேகர். அவர் பொத்தானை அழுத்தி, அவ் வழியை மூடினார்.

"தம்பி, ரொம்ப நேரமாச்சா நீ வந்து ?" என்று கலவரம் துளியும் தெரியாமல் அவனைப் பார்த்துக் கேட்டார்.

"இல்லேங்க, இப்பதான் வந்தேன். உங்களைக் காணாமல் பதைச்சுப் போயிட்டேன் அப்பா !" என்றான் அவன்.

அவர் சிரித்துக்கொண்டார்.

"இப்படி வா," என்று அவனை அழைத்தார். "இது ரகசியச் சுரங்கத்துக்குப் போகிற பாதை!" என்றார். சொல்லி விட்டு, அந்தப் பொத்தான் அமைக்கப்பட்டிருந்த இடத்தைச் சுற்றி புதிதாகப் பின்னிக் கிடந்த சிலந்தி வலையைப் பிய்த்து விட்டு, 'கடகட'வென்று எக்காளமாய்ச் சிரிப்பைக் கக்கலானார். "இப்படி வா, வந்து சுரங்கத்தைப் பார்!" என்றார்.

அவனுக்கு விருப்பமில்லை என்றான். ஆனாலும், "வேறு விசேஷம் எதுவும் இல்லையா அங்கே?" என்ற பாவனையில் தன் தகப்பனாரை ஐயக்குறிப்பு மிளிரப் பார்த்தான்.

அவரும் அதை அனுமானம் செய்துகொண்டவர் போல, "அந்தச் சுரங்க அறையில் அரசாங்கத்துக்கு விரோதமான காரியம் எதுவும் நடக்கவில்லை; நடக்கவும் நடக்காது. முன்பு நாம் மயிலாப்பூரில் இருக்கையில் ஒரு சமயம் நகைகள் திருடு போய்விட்டன அல்லவா? அப்படிப்பட்ட கஷ்டங்கள் மீண்டும் தொடராதிருக்க, நானே திட்டமிட்டு யோசித்து, இப்புதிய அமைப்பை உண்டாக்கினேன். பொன்னும் பொருளும் வைப்பதற்கு இதைவிட உகந்த இடம் வேறில்லை. இதை இயக்கும் முறை எனக்கு மட்டுமே தெரியும். உன்னிடம் விரைவிலேயே இது பற்றித் தெரிவிக்க வேணும் என்றிருந் தேன். அதற்குகந்த சந்தர்ப்பமும் இயல்பாகவே உருவாகி விட்டது! வா, ஞானபண்டிதா! வந்து பார்த்துவிட்டுப் போ. சுரங்க வழியை இயக்கும் வழியையும் சொல்லிக் காட்டி விடுகிறேன். நாளை என்று தள்ளிப் போடுவது தவறு தம்பி!" என்றார்.

அவன் பிறகு ஆகட்டுமென்று தடுத்துவிட்டான்.

அவர் சுரங்க அறைப் பொத்தான் இருந்த இடத்தை அடைத்திருந்த நீலத் திரையை இழுத்துவிட்டார். கையில் நிமிண்டியவாறு இருந்த 'டேப் ரெகார்டர்' நாடாக்களை மெத்தையின் தலையணைக்கு அடியில் போட்டுவிட்டு, "சாப்பிட்டாயா தம்பி?" என்று கேட்டபடி, 'சிகார் பைப்'பை எடுத்துப் பற்ற வைத்தார்.

சாப்பிட்டதாகச் சொன்னான் அவன். பிறகு அவரிடம் தன் திட்டங்களை விவரித்தான். இனம் விளங்காத ஒரு வகைப்பட்ட அமைதியிழந்த மனத்துடன் அங்கிருந்து புறப்பட்டான் காரில்.

ரிப்பன் மாளிகை, செக்ரடேரியட் அலுவலகம் ஆகிய இரண்டு இடங்களுக்கும் போய்விட்டு தண்டையார்ப் பேட்டைக்குச் செல்ல விரும்பினான். சற்று நேரம் விச்ராந்தியாக ஓரிடத்தில் தனித்து இருந்தால் சிலாக்யம் என்று கருதினான். பெரிய ஹோட்டல் ஒன்றில் காப்பி குடித்துவிட்டு காரை எடுத்தான். 'ராபின்ஸன் பூங்கா' குறுக்கிட்டது. அங்கேயே காரை நிறுத்திவிட்டு, உள்ளே நுழைந்தான். அடித்த வெய்யில் எங்கே ஓடி ஒளிந்துகொண்டதாம் ?...

எதிரெதிர் வரிசைகளில் அடுக்கி நிறுத்தப்பட்டிருந்த பெஞ்சுப் பலகைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் குந்தினான். கைப்பிடித் துண்டுகொண்டு முகத்தைத் துடைத்துக்கொண்டான். 'டால்க் பவுடரின்' இனிய சுகந்தத்தின் நெடி மனத்துக்கு எவ்வளவு இதமாக இருக்கிறது !

கையுடன் கொணர்ந்திருந்த டைரியைப் புரட்டிய போது, மெல்லிய இருமல் ஒலி கேட்டுத் தலையை உயர்த்தினான் அவன். எதிர்ப் பெஞ்சின் முடுக்கிலே தலை கவிழ்ந்தபடி சாய்ந்திருந்த பெண் ஒருத்தி, அப்போதுதான் மெல்லச் சிரம் நிமிர்த்தினாள்!

என்ன ஆச்சரியம் !....

யார் அவள் ?

பூவழகியா ?

பூவழகிப் பெண்தானா ?

ஆம் ; அவளேதான் !

பூட்டப்பட்டிருந்த அறையிலிருந்து எப்படி விடுதலை பெற்றாள் ?

அழகுத் தேவதைக்கு அன்புத் தேவதை ஏதாவது மனமிரங்கி மாற்றுச் சாவி தந்து விடுவித்திருக்குமோ ?

இருக்கக்கூடும் !....

# 7

## பூவழகி சந்திப்பு

அழகு பேசிக்கொண்டிருந்த அந்தப் பூவையின் மதர் விழிகளையே பார்த்துக்கொண்டிருந்த ஞானபண்டிதன் இமைப்பினை மறந்துவிட்டானோ ? — ஆம் ; அப்படித்தான் அவன் தோற்றம் இருந்தது.

அழகுக்கு அழகே சாட்சியாக — உண்மையாக — உத்தரமாக அமைந்த பாங்கில், அவன் அழகும் அவள் அழகும் அமைந்துவிட்டிருந்தன போலும் !

அவளுடன் எப்படிப் பேசுவது என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அதற்குள் அவள் எழுந்துகொண்டாள். இப்போது அவள் கையில் 'டிபன் பாக்ஸ்' இருந்தது. புறப்பட எத்தனம் செய்தாள்.

"பூவழகி !" என்று குரல் கொடுத்தான் ஞானபண்டிதன்.

பூவழகி பூவிழிகளைச் சிமிட்டி, குறுஞ்சிரிப்பு உதிர்த்து, வியப்புடன் அவனை ஏறிட்டு விழித்தாள்.

"என்னையா ?"

"ம் !"

"தெரியுமா என்னை ?"

"ம் !"

நேற்று இரவு அவன் நேருக்கு நேராகப் பார்த்த காட்சியை விவரித்தான், அவளிடம்.

அதே செங்கோடனுக்குத்தான் சாப்பாடு வாங்கிக்கொண்டு போவதாகத் தெரிவித்தாள் அவள். "பட்டணத்துப் போக்கிரி ஒருவன் என்னை — என் கற்பைச் சூறையாட முனைந்த நேரத்திலே தெய்வம் போல — தெய்வமாக வந்து—என்னைக் காத்தார் இந்தச் செங்கோடன். அந்த நன்றியை நினைச்சுப் பார்க்கக்கூட ஒரு சந்தர்ப்பத்தைத் தராமல், இப்போது என்னைப்

பணத்துக்கு ஆசைப்பட்டு யாரோ ஒருவனிடம் விற்கக் கனவு காணுகிருன் !'' என்ருள் அவள், வெகு தெளிவான பாஷையில். கண்ணீர் மாலே, மாலேயாக வழிந்தோடியது ! அவள் குரலில் அடிநாதம் பரப்பிய சோகத்தை அவள் எப்படிக் கட்டுப் படுத்துவாள். பாவம் !

"செங்கோடன் யார் ? எந்த ஊர் ?''

"அவரு சிலோன் பக்கம் என்று நினைக்கிறேன். யாரோ ஒரு பணக்காரன் ஏதோ ஒரு கொலே செஞ்சிட்டார் போலிருக்கு. அப்போ இவர், கிட்டே இருந்திருக்கவேணும். இதையே ஒருசாக் காகக் கொண்டு, அந்தப் பணக்காரனேப் பயமுறுத்தி, அடிக்கடி பணம் கரந்துக்கிட்டு வருரார்னும் தோணுது. இவரு யாரோ ஒரு பெண்ணே வச்சுக்கிட்டு இருக்கார். அந்தப் பக்கம்தான் அவள் வீடு. அங்கே இருந்துதான் இப்ப சாப்பாடு எடுத்துக் கிட்டுப் போறேன் !'' இப்போது அவள் பேச்சு தடுமாற்றத் துடன் வெளி வந்தது. அவள் மார்பகம் எம்பி எம்பித் தாழ்ந்தது. நேர் கொண்ட பார்வையால் நிமிர்ந்து அவனே அவள் எடை போட்டாளோ ?

"பூவழகி !''

"சொல்லுங்க !''

"நீங்க மறுபடியும் சிங்கத்தின் குகைக்குப் போகத்தான் வேணுமா ?''

"ஆமாங்க. போகாமல் இருந்தால், அது தர்மம்னு எனக்குத் தோணலிங்களே !''

"மெய்தான் ! ஆனல், இன்று இராத்திரி உங்களே எதிர் நோக்கி இருக்கக்கூடிய பயங்கரத்தையும் நினேச்சுப் பார்க்க வேணுமில்லே ?''

"உண்மைதானுங்க. என்னேட தன்னம்பிக்கையும், எனக்குள்ள அந்தரங்க சுத்தியும், நான் கொண்டிருக்கிற கடவுள் பக்தியும் என்னே எப்பவும் கட்டிக் காப்பாத்துமுங்க ஐயா ! அந்த ஆள் நல்லபடியாய் எனக்கு விடுதலே தராட்டி, அப்ப நடக்கிறது வேறேதான் ! வந்துதான் பாருங்களேன் !'' என்று சூள் உரைத்தாள் அவள்.

"நான் நிச்சயமாக இன்னிக்கு ராத்திரி வரத்தான் போறேன். அப்படித்தான் உங்களை நேற்று பார்த்தது முதலே திட்டம் போட்டிருந்தேனுக்கும் !"

"உங்க அன்பு பெரிசுங்க. ஆனுல் நீங்க வர வேண்டாம். செங்கோடன் மகா முரடன் !" அவள் குரலில் பயம் மண்டிக் கிடந்தது.

"நீங்களே அம்முரடனைப் பற்றிக் கவலைப்படாதிருக் கையிலே, எனக்கு மட்டும் அவனைப் பற்றி என்ன கவலை? மீண்டும் நாம் இன்றிரவு அதே இடத்தில் சந்திப்போம் !"

அவள் அவனை நாணப்புன்னகையுடன் பார்த்துத் தலையைக் கவிழ்ந்துகொண்டாள், "ம்.... இன்றிரவு சந்திப்போம் !" என்று சூட்சுமமாகச் சொல்லி விளக்கமாகச் சிரித்தாள். "உங்க பேர்?" என்று கேட்டாள்.

அவன் தன் பெயர், இடம் முதலிய விவரங்களைச் சொன்னுன்.

அவள் அதிசயக்குறியை ஏந்தியவாறு விடை பெற்றுப் பிரிந்தாள்.

அவன் காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். கனவு போலவும், சினிமாக் காட்சி போலவும் நடந்துகொண்டிருந்த நிகழ்ச்சிகளை மெல்ல, அசை போட்டவனுக அவன் 'ஸ்டீரிங்கை' இயக்கினுன்.

பங்களா வந்தது.

வெளிப்புற வாசலில் காரைச் செலுத்தினுன்.

அப்போது, செங்கோடன் வெற்றி மிடுக்குடன் அந்த வெளிப்புற வாசல் வழியே வெளியேறிக்கொண்டிருந்தான். 'இந்தப் பயங்கர முரடன் இங்கே ஏன் வர வேண்டும் ? அப்பாவுக்கு இவனை எப்படித் தெரிந்திருக்கும் ?' என்ற கேள்விக் கணைகள் அவன் நெஞ்சைத் துளைத்தெடுக்கத் தொடங்கின !

# 8

## ‘பெண்கள் அறமடா !

சுவர்க்கடிகாரத்தின் நிமிஷ முள்ளும் விநாடி முள்ளும் கண்ணுக்குத் தோன்ற வகையில் தம் கடமையைச் செய்து கொண்டிருந்தன — கடவுள் கண்ணுக்குத் தோன்றுவதில்லை யல்லவா, அப்படி !

மதிய உணவு கொண்டதும், உண்ட களைப்புத் தீர, பெரியவர் சோமசேகர் கட்டிலைத் தஞ்சம் அடையவில்லை. நேராக ஞானபண்டிதனிடம் வந்தார். இரவு தமக்கு வேண்டிய ஒரு குடும்பத்தாரைப் பார்த்துவரத் தம்முடன் வரும்படி ஞான பண்டிதனிடம் சொன்னர்.

அவரது பேச்சைக் கேட்டதும் அவனுக்கும் பகீரென்றது. இரவு மணி எட்டு—எட்டரைக்குத் தனக்குள்ள மனிதாபிமானக் கடமை அவன் முன்னே நின்று எச்சரித்தது. விஷயத்தைப் பிட்டு வைத்துத் தந்தையிடம் சொன்னல், அவ்வளவுதான் ; அவர் பயந்துவிடுவார் ! — ஊர் வம்பை ஏன் விலைக்கு வாங்க வேண்டுமென்பார் ! இல்லையா ?...

“என்ன தம்பி யோசிக்கிறே ?” என்ருர் அவர்.

அவன் மெல்லத் தயங்கிஞன். ரேடியோ ஸ்டேஷனில் தன்னுடன் படித்தவர் ஒருவர் நாடகத் தயாரிப்பில் இருப்ப தாகவும், அவரை இரவு சந்திப்பதாக ஏற்கெனவே அறிவித் திருப்பதாகவும் சொன்ஞன். ‘பொய்’ சொன்ஞன். வேறு வழி இல்லை.

அவர் மறு பேச்சாடாமல் ‘ஓ. கே.’ சொன்ஞர். “அப்படி யென்ருல் நாளைக்குச் செல்வோம். நாளைக் காலையிலேயே புறப் பட்டு உடனடியாகவே திரும்பிவிடலாம்,” என்ருர்.

அவன் ‘சரி’ சொன்ஞன்.

காலம் கவரிமான் ஆனது.

மணி எட்டை நெருங்கிக்கொண்டிருந்தது — இரவில்.

ஞானபண்டிதன் ஒரு வகைத் துடிப்பும் பதட்டமும் கொண்டு எழுந்தான். சிவப்பு ரிப்பன் அடையாளம் வைத்திருந்த பாரதி பாடலை மீண்டும் புரட்டினன்.

பெண்மைக்கு வாழ்த்துத் தெரிவித்துப் பாடுகிருன் பாவலன் :

**"வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா ;**
**மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள் ;**
**கலிய ழிப்பது பெண்க ளறமடா :**
**கைகள் கோத்துக் களித்துநின் ருடுவோம் !"**

பாடலின் வரிகளை உதடுகளில் உறவாட விட்ட வண்ணம் எழுந்து பீரோவைத் திறந்தான். 'லுங்கி' ஒன்றை எடுத்து உடுத்துக்கொண்டான். 'கூலிங்க்ளாஸ்' அணிந்துகொண்டான். அப்பாவிடம் சொல்லிக்கொண்ட பின், அவன் புறப்பட்டான். தொழிற்சாலை வண்டி அவனுக்குக் கை கொடுத்தது.

அதே இடத்தை — நேற்று இரவு அடைந்த அதே இடத்தை அடைந்தான் ஞானபண்டிதன். தமிழ்ச் சாதிக்காக தன்னுல் இயன்ற பணியினை அணிலாக நின்று செய்ய ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்று அவன் உள்ளூர பெருமையும் பெருமிதமும் அடைந்தான்.

நேர் வழியாகப் படியேறி மாடி முகப்பில் வந்து நின்ருன் இளைஞன்.

தெரு விளக்குகள் மங்கலாக எரிந்தன.

அப்போது, உள்ளே காரசாரமான விவாதம் அரங்கேறிக் கொண்டிருந்தது.

மறைந்து நின்று ஞானபண்டிதன் நடப்பைக் கேட்டறிந் தான். அதுவே விவேகமானதாகவும் தோன்றிற்று.

"அப்படின்னு, உன் முடிவுதான் என்ன ?" என்று கர்ஜனை செய்தான் முரடன் செங்கோடன். முறுக்கு மீசையை லாகவ மாக முறுக்கிவிட்டான்.

பூவழகி அதே வைராக்கியச் சிரிப்புடன் — வீரத் தமிழச் சியின் கம்பீரப் பார்வையுடன் நிமிர்ந்து பார்த்தாள். "நீங்க அந்தப் பணக்காரன் கிட்டே என்னைப் பலி கொடுக்க நினைக்கிறது இந்த ஜென்மத்திலே நடக்கவே நடக்காது ! ஆமா, சொல்லிப் பிட்டேன் !"

செங்கோடன் பயங்கரமாகச் சிரிப்பை உமிழ்ந்தான். "என்கிட்டவே நீ பயங்காட்டுறீயே ?" என்ருன்.

"நீதியும் நேர்மையும் தடம் விலகும் போது, பெண்ணும் பேயாக ஆகிப்பிட வேண்டியது தானே ஐயா !" என்று அமெரிக்கையாகப் பதிலிறுத்தாள் அவள்.

"மயிலே மயிலே இறகு போடுன்ஞ போடாது ! ஊம் !" என்று கறுவிக்கொண்டு, சவுக்குடன் அவளை நெருங்கினன் செங்கோடன்.

அந்தப் பணக்கார மனிதர், பாவம், பயந்துபோய் ஒதுங்கி விட்டார்.

அவள் — பூவழகி — வெகு ஒயிலுடன் கைகளைக் கட்டிக் கொண்டு, எதையும் சமாளிக்க முடியுமென்ற அழுத்தத்துடன் நின்ருள்.

செங்கோடன் சவுக்கை வீசியதுதான் தாமதம்; மறுவினடி அச்சவுக்கு பூவழகியின் பூங்கரங்களிலே சரண் புகுந்தது.

கை தட்டிக்கொண்டே 'ஸ்டைலாக' உள்ளே அடியெடுத்து வைத்துக் கதவைத் தட்டினன் ஞானபண்டிதன்.

பூவழகி வந்து கதவைத் திறந்தாள்.

ஞானபண்டிதனைப் பார்த்த செங்கோடனின் கண்கள் கோவைப்பழம் ஆயின. "ஓஹோ, நீயா ? ஏன் இங்கே வந்தே ?" என்று பெருங்குரலில் கேட்டான் அவன்.

"அபலைப் பெண் பூவழகியைக் காப்பாத்துறதுக்கு வந்தேன் !" என்ருன் அவன். "ஓஹோ, நீயா ?" என்ற கேள்வியின் கிண்டல் பேச்சு, தன்னை ஏற்கனவே அந்த முரடன் அறிந்திருப்பதைச் சுட்டிய சூட்சுமத்தையும் அவன் புரிந்து கொள்ளாமல் இல்லை. மத்தியானம் பூவழகியைச் சந்தித்த பின், பங்களாவிற்குள் நுழைந்த தருணத்தில், இதே முரடன் தன் பங்களாவை விட்டு வெளியேறியதையும் அவனுல் மறக்க முடியாது. பெரியவரிடம் இந்தப் போக்கிரியைப் பற்றிக் கேட்க வேண்டுமென்றுதான் இருந்தான். அதற்கு வாய்ப்பாகச் சந்தர்ப்பம் கூடினல்தானே ?

"பூவழகியைப் பாதுகாக்க நீ வந்திருக்கியா ? பணக்காரப் பிள்ளையை மரியாதை இல்லாது 'நீ' என்று கூப்பிடுறது உனக்குச் கோபமாயிருக்கும், இல்லையா ? நீ அப்பாவி

அதனுலேதானே உன்னையே நீ பாதுகாத்துக்கிடத் துப்பு இல்லாம, பிறத்தியாருக்காகப் பரிஞ்சுக்கிட்டு ஓடி வந்திருக்கியோ ?'' என்று எகத்தளமான நையாண்டி நகைப்பினை மீண்டும் உதிர்ந்தான் செங்கோடன்.

ஞானபண்டிதனுக்கு அவன் பேச்சு, தன் நெற்றிப் பொட்டில் விழுந்த அடியாக வலித்தது. "ஐயா, பண்பில்லாத உம்மிடம் வாதாட நான் வரவில்லை. நீர் பூவழகியைப் பணத்துக்கு விற்பதென்பது, என் உயிர் என் உடம்பில் உள்ள மட்டும் நடக்காது; நடக்கவும் முடியாது. இன்னெரு விஷயத்தையும் நீர் நெஞ்சில் எழுதி வைத்துக்கொள்ளும். என் அப்பா எனக்குக் கடவுள் மாதிரி. அவர் உயிருடன் உள்ளவரைக்கும் என்னை நான் பாதுகாக்க வேண்டிய தேவை இல்லை. என்னை அவர் காப்பாத்துவார்; பாதுகாப்பார் !'' என்று பெருமிதம் துள்ளியோடச் சொன்னுன் அவன்.

"உன் அப்பாவா ? யார் உன் அப்பா ? ஸ்ரீமான் சோமசேகர் உன் அப்பாவா ?'' என்று வீறுடன் முழங்கியபடி மறுபடி சிரித்தான் செங்கோடன். சொல்லிவிட்டு, எதிர்ப்புறம் பார்வையை ஓட்டினுன். அவனுக்குப் பகீரென்றது.

பூவழகியைக் காணவில்லை !

அந்தப் பணக்கார மனிதரையும் காணும் !

"பூவழகி !...பூவழகி !'' என்று ஓலமிட்டவண்ணம் அங்கிருந்து வெளியேறி, இருட்டில் புகுந்தான் செங்கோடன்.

புத்ராக வளைந்து நின்ற பூவழகியின் இனிய நினைவை நெஞ்சிலும், அந்த முரடன் செங்கோடன் கிளப்பிவிட்ட புயலை நினைவிலும் சுமந்தவனுக அங்கிருந்து கிளம்பினுன் ஞானபண்டிதன் !

# 9

## சிலந்தி வலேயா ?

இரவு வாழ்ந்தது ; வளர்ந்தது ! சோமசேகர் சாப்பிடு வதற்கு ஞானபண்டிதனை எதிர்பார்க்கவில்லை. ரேடியோ ஸ்டேஷன் நண்பருடன் சாப்பிட்டிருப்பான் என்றே அவர் கருதினர். ஆகவே, அவர் தனியாகச் சாப்பிட வேண்டியவ ரானர்.

"தம்பி இருந்தால் நீங்க ஒரு பிடி கூடுதலாகத்தான் சாப்பிடுறீங்க !" என்று 'நைஸாக' ஓர் உண்மையினைச் சொல்லி வைத்தான் வேலப்பன், மிச்சம் இருந்துவிட்ட சாதத்தைக் கணித்தபடி.

பெரியவரும் லேசாகச் சிரிப்புக் காட்டினர். வேலப்பன் சொல்லும் பேச்சுக்கு அவர் எப்போதும் அக்கறை காட்டுவது வழக்கம். 'இத்தினி காலமாய் என்னேடே எவ்வளவோ ஒத்துழைச்சவன் இந்த வேலப்பன். என்னேட வாழ்நாளிலே தொழில் நிமித்தமாய் இதுவரை எத்தனை இடங்களை மாற்றிப் பிட்டேன் !... அப்பப்பா ! நடந்த கூத்துக்களை இப்போ நினைச் சாலும் மயிர்க்கூச்சம் எடுக்குது !.... இனிமே நிம்மதிதான் ! எனக்கென்ன ? ஞானபண்டிதன் தலையிலேதான் இனி எல்லாப் பொறுப்பும் விழப் போகுது ! இனிமே முருகப் பெருமானேட ஆறுபடை வீடுங்கதான் சதா எனக்குச் சதம் !...'

எதையோ நினைத்தவர், எதையெல்லாமோ நினைக்க வேண்டியவரானர்.

அப்போது, வேலப்பன் கீழே சமையற்கட்டுக்குப் போனவன் மீண்டும் மாடிப்படிகளைத் தாண்டி வந்து, "ஐயாவுக்குங்க !.... மோனைத் தலை ஆசாமி இல்லீங்க, அந்த ஆம்பளை உங்களோட பேசுறதுக்கு டெலிபோனிலே அழைச சாருங்க கொஞ்ச முந்தி. நீங்க பூஜையிலே இருக்கிறதாய்ச் சொல்லி வச்சிட்டேனுங்க !" என்று ஒப்புவித்துவிட்டுத் திரும்பிவிட்டான்.

பெரியவரோ கை கழுவக்கூட நினைவின்றி, பிரமை தட்டிப் போய் நின்றார்.

அப்போது பார்த்துத்தானா ஞானபண்டிதன் காரிலிருந்து திரும்பி மாடிக்கு வரவேண்டும்? தன் தந்தையின் மலைப்புத் தட்டிய கோலத்தைக் கண்டு அவனும் மலைப்புத் தட்டிப் போனான். என்றாலும், நிலைமையை அனுசரித்து அவன் தன் நிலை எய்தினான். 'அப்பா' என்று கூப்பிட்டான்.

அவர் சுதாரித்துக்கொண்டு கை கழுவிக்கொண்டே' "தம்பி, சாப்பிட்டியா? நீ சாப்பிட்டிருப்பாயின்னு இப்பதான் நான் சாப்பிட்டேன். நீ சாப்பிட்டியா? சாப்பிடு தம்பி!" என்றார்.

அவன் சாப்பிடவில்லை. ஆனாலும் சாப்பிட்டதாக மறுபடியும் ஒரு பொய்யைச் செப்பினான். வெறும் உண்மையை நம்பி மட்டும் இந்தப் பொய்யான வாழ்விலே வாழவே முடியாதோ என்னவோ?....

"அப்பா!"

"என்ன தம்பி?"

சுருட்டு புகைந்தது.

"உங்களுக்கு செங்கோடனைத் தெரியுமா?" என்று கேட்டுவிட்டு, அதே சடுதியில் அவர் முகத்தை உற்றுப் பார்த்தான் அவன்.

"தெரியும். பாவம், அவன் ஏழை. எப்போதாச்சும் பணமுடைன்னு, என்னைத் தேடி வருவான், கொடுப்பேன். ஆள் பார்க்கிறதுக்கு முரடன்! ஏன் தம்பி? உனக்கு அவனை எப்படித் தெரியும்?" என்று வெகு இயல்பான தொனியில் அவனை அவர் விசாரித்தார்.

அவன் நடந்த நடப்பைக் கொஞ்சம் காது மூக்கு வைத்துத் திரித்துச் சொன்னான். "அவன் என்னமோ பொம்பளை விஷயமா தப்புத்தண்டா செஞ்சிட்டானாம். சபாலீசிலே மாட்டிக் கிட்டானாம்!..." என்றான்.

அவன் பதிலைச் சொல்லிவிட்டு முன் போல இப்போதும் பெரியவரை நோக்கிக் கண்களை விரித்தான்.

இப்போது அவர் முகம் எத்துணை தெளிவான பிரகாசம் எய்திவிட்டது!

ஞானபண்டிதனுக்கு உள்ளுக்குள் ஏதோ ஒரு புகைச்சல மூட்டம் போடத் தொடங்கிவிட்டது. ஒரு முறை சுரங்கப் பாதை வழி சென்று மீண்ட தன் தந்தையின் போக்கை எண்ணிய போழ்து, சுவரில் வலை பின்னிக் கிடந்த சிலந்தி வலையையும் அவன் நினைத்தான். எல்லாவற்றுக்கும் மேலாக, 'உன் அப்பாவா ? யார் உன் அப்பா ? ஸ்ரீமான் சோமசேகர் உன் அப்பாவா ?' என்று கேலியும் கிண்டலுமாக, ஏதோ ஓர் அப்பட்டமான—தர்மச்சார்பின் அடிப்படையில் பதுங்கிக்கிடந்த ஓர் உண்மைத் தொனியுடன் எதிர்க்கேள்வி கேட்ட அந்தப் பயங்கரத்தை—அந்தப் பரிதாபத்தை—அந்தத் துர்ப்பாக்கியத்தை—அவன் இனி எப்படி மறக்கப் போகிறான்? இப்போது மீண்டும் மீண்டும் அதே கேள்விச் சுழலில் அவன் மனம் சுற்றிச் சுழன்றது. அவன் மூளை வலித்தது. நெஞ்சு கனத்தது. வரும் வழியில், வேறு வழியின்றி, ஒரு 'ப்ளேயர்ஸ்' பிடித்தான். இப்போது அதற்கும் மார்க்கமில்லை. 'என்வரை ஏதோ ஒரு மர்மம் சிலந்தி வலையாகப் பின்னிவிட்டிருக்கிறது ; ஆம் !...இட் இஸ் தி ஃபாக்ட் அண்ட் இட் இஸ் தி காஸ்....!' மீண்டும் சிந்தனைகளைக் கட்டறுத்து விட்டுவிட்டான்.

இருவரும் எவ்வளவு நாழிகை மோனத்தில் முடங்கிக் கிடந்தார்களோ ?

அவன் எழுந்தான் ; தன் அறைக்குச் சென்றான். அவன் படுக்கையில் சாய்ந்தான். உள்மனம் பொங்கி ஏங்கியது. பிறந்த நாள் தொட்டு, தாய் முகம் காணக் கொடுத்து வைக்காமல், பெற்றவளை இழந்துவிட்ட அந்தத் தன்னுடைய துர்அதிர்ஷ்டத்தைச் சபித்தபடி திண்டில் சாய்ந்தான்.

விநாடிகள் ஊர்ந்தன.

மணி பத்து !

பூவழகியைப் பற்றி நினைப்பு எடுத்த நேரத்தில், அவள்பால் தன்னையும் மீறிய வகையில் ஒரு பாசம் — ஓர் அன்பு — ஒரு பிரியம் — ஓர் ஈடுபாடு — கனிந்து வருவதை அவன் தீர்க்கமாக உணரலானான்.

அப்போது, தொலைபேசி மணி ஒலித்தது. அவன் எடுத்தான். போக்கிரி செங்கோடன் பேசினான். பெரியவர் மாதிரி ஞானபண்டிதன் குரலை மாற்றிப் பேசினான் : "ஆமா, நான்தான் சோமசேகர் பேசுறேன் !" என்றான்.

ரௌடி செங்கோடன் பேசினுன் ; பெரியவர்தான் பேசுகிருர் என்று நம்பியே பேசியிருக்க வேண்டும் !

"உங்க ஞானபண்டிதன் — ஆமாம், நீங்க உங்க மகனின்னு பாவலா செஞ்சிக்கிட்டு வருகிற ஞானபண்டிதன் என்கிட்டவே வாலாட்டத் தலைப்பட்டிருக்கான் ! எனக்குக் காலமெல்லாம் கட்டுப்பட்டுக் கெடக்கிறதுக்குக் கடமைப்பட்ட ஒரு பொட்டை நாயைத் தன்னேட கைக்குள்ளாற போட்டுக்க பார்க்கிருன். சொல்லிவையுங்க. அவன் வாயைக் கட்டாமப் போனீங்கன்னு, அப்பாலே உங்களைப் பத்தி ஊர் உலகத்துக்குச் சொல்லுறத்துக்காக நான் என் வாயைத் திறந்துப்பிடுவேன் !... ஏதோ இந்த ஐஞ்சு வருஷமாய் என்கிட்டேயிருந்து உங்களாலே தப்ப முடியலே. ஆனு, அதுக்கு முந்தி இருபது வருஷத்துக்குக் கிட்டே நீங்க என் பார்வையிலேருந்தே தப்பிச்சிட்ட ஆளான ஆளாச்சே !... சரி... எனக்கு டியூட்டிக்கு நேரமாகுது !.... ஜாக்கிரதை !... மாமூல் பணம் முதல் தேதி ரெடியாக இருக்கோணும் சார் !"

செங்கோடன் குரலில்தான் எவ்வளவு ஆக்ரோஷம் !...

செங்கோடன் 'டக்'கென்று 'ரிஸீவரை' வைத்துவிட்டான். பெரியவரிடமிருந்து மறுமொழி — உத்தாரம் எதுவும் அவனுக்குத் தேவை இல்லையோ ?

முன் ஒரு முறை தொலைபேசியில் கேட்ட குரல் — சோமசேகருடன் தான் ரகசியம் ஏதோ பேச வேண்டுமென்பதாகச் சொல்லி இணைப்பைத் துண்டித்துவிட்ட அதே குரல், இந்தச் சொங்கோடனுடையதே என்ற உண்மையையும் அவனல் அது தருணம் நிர்ணயம் செய்துவிடவும் முடிந்தது.

அன்றிரவு ஞானபண்டிதனுக்கு மகாசிவராத்திரி !

## தோட்ட வீட்டில் !

'செந்தில் விலாசம்' பங்களாவுக்கு உடைய அந்த அழகிய நீலவண்ணக் கார் தாம்பரத்தை இலக்கு வைத்துப் போய்க் கொண்டிருந்தது.

உதயப் பூ மடலவிழ்ந்து மணம் பரப்பிக்கொண்டிருந்தது. பகல் செய்வோன் கதிர்களை வெம்மைப்படுத்தி ஏறு முகத்தில் வீசிக்கொண்டிருந்த வேளை அது.

சிந்தனை வசப்பட்டவனுகச் சாய்ந்திருந்தான் ஞான பண்டிதன். அவன் சிந்தனையிலும் சித்தத்திலும் அக்கணம் செங்கோடன்தான் விசுவரூபம் எடுத்து, இமயமலையாகக் குந்தி யிருந்தான். ஞானபண்டிதனுக்கு வாய்த்திட்ட விதியாகவும், அவன் வாழ்வுக்கு அமைந்துவிட்ட வினையாகவும்கூட அந்த எத்தன் தோன்றினன். ஆம்; அவன் எத்தனுகவே ஞான பண்டிதனின் மனத்தில் தோன்றினன். அதற்காக, அவன் பேச்சைக் காற்றில் தட்டி வீசிவிட்டு அசட்டை செய்யவும் அப்பொழுது ஞானபண்டிதன் தயாராக இருக்கவில்லை. அதன் விளைவாகத்தான், முரடன் செங்கோடனுக்கு விதியின் மதிப்பும், வினையின் அந்தஸ்தும் தர ஞானபண்டிதன் துணிந்துவிட்டிருந் தானே ?

"தம்பி !" என்று குரல் கொடுத்தார் சோமசேகர். முன் ஆசனத்தில் இருந்தபடியே தலையைப் பின்வாட்டில் திருப்பினர்.

கனக் கண்டு விழிப்பவனை ஒத்து கண்களை விழித்தான், அவன். "என்னுங்க, அ....அப்...பா ?" என்று தயங்கியபடியே 'அப்பா' என்ற பதச்சேர்க்கையை வெளியிட்டான் அவன்.

"தம்பி, என்ன ஒரு மாதிரி இருக்கே?" என்று தாழ்குரலில் கேட்டார். டிபனுக்கு அவன் தன்னுடன் வராதது ஒருவேளை வேதனை தந்திருக்கக்கூடும்.

"ஒண்ணுமில்லையே !... அம்மாவைப்பத்தி நினைச்சேன். மனசு ஒருமாதிரி சலனம் கண்டிடுச்சு !...." என்றான். கடைசியில் 'அப்பா' என்ற பாசச் சொல்லை வேண்டுமென்றே அவன் இணைக்கவில்லை.

காலையில் புறப்படு முன்னம், சோமசேகர் கண்களை மூடிய வண்ணம், சூன்யத்தின் வெளியில், நின்று கண்ணீர் வடித்தார். அப்போது, அக்காட்சியைக் கண்ட ஞானபண்டிதன் அவரை நெருங்கினான். "உன் அன்னையை எண்ணினேன் !" என்று கூறி அவர் விழிநீரை வழித்துவிட்டார்.

"அப்பா !..." தடுமாற்றத்துடன் வார்த்தைகளை உதிர்த்தான்.

"சொல்லு தம்பி !"

"அம்மா எப்போது செத்தாங்க ?"

"நீ பிறந்த மூணு நாலு மாசத்துக்கெல்லாம் அவள் கண்ணை மூடிட்டாள் !"

"என்ன சீக்கு ?"

"... நெஞ்சடைப்பு !"

"எங்கே செத்தது ?"

"வந்து... எஸ்... கோயமுத்தூரிலே !"

"அம்மா போட்டோ ஒண்ணுகூட இல்லையா உங்ககிட்டே ?"

"இல்லேப்பா !...."

"ஐயோ, நான் ரொம்ப ரொம்ப அதிர்ஷ்டக்கட்டை ! நான் மிகவும் பாவி !... பெற்ற அம்மாவைக்கூட காணக்கூடக் கொடுத்துவைக்கலே !... அப்பா, உங்க படம் ஏராளம் இருக்கு ! ஆனா அம்மா படம் ஒண்ணுகூட இல்லையே !..."

"அவளை படம் எடுக்கிறதுக்கு இருந்த ரெண்டொரு சந்தர்ப்பம் நழுவிடுச்சு ! அவ போட்டோ இருந்திருந்தால் உனக்கும் எனக்கும் எவ்வளவோ ஆறுதலாயிருந்திருக்கும் ; எஸ்... ! கட்டாயம் ஆறுதலாக இருந்திருக்கும் !" அவர் மூக்குக் கண்ணாடியை நகர்த்திவிட்டு, கண்களைச் சுத்தம் செய்திருப்பார்; கட்டாயம் செய்திருப்பார் !

சுருட்டு புகைந்தது.

ஞானபண்டிதன், காரின் திருப்பத்தில் சாய்ந்தான். துப்பாக்கியின் கைப்பிடியில் தலை இடறியது.

பெரியவருக்கு பட்சி சுடுவது ஒரு 'ஹாபி' !

துப்பாக்கிக்கு அது கடன் — அதாவது, கடமை !...

ஞானபண்டிதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கதவின் பாதி இடைவெளியில் கண்களை மேயவிட்டான். தாம்பரம் பஸ் நிலையம் வந்தது. நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டுக்கும் வலிவூட்டிப் பேசிய சில வாசகங்களைப் பாரதப் பிரதமரின் வாய்மொழியாகப் படத்துடன் அச்சிட்டு ஒட்டப் பட்டிருந்த 'போஸ்டர்கள்' தென்பட்டன. "பொது எதிரிகளை தோற்கடிக்க, வாரீர் !" என்பது போன்ற வீர வாசகங்களும் மின்னின.

கார் மடங்கியது.

பெரியவர் கொடுத்த அடையாளக் குறிப்பின் பிரகாரம் கார் மடங்கியது.

"தம்பி, இன்னும் கொஞ்ச நேரம்தான் !" என்றார்.

"அதுக்கென்ன !" என்ற பாவனையில் அவன் மென்முறுவல் இழைத்தான். "ஆமாம் ; உங்க நண்பர் நகரத்தின் எல்லையைத் தாண்டி இவ்வளவு தொலைவிலே வந்து குடியிருக்காங்களே ?" என்றான்.

"நண்பரல்ல, தம்பி ! நண்பரின் மனைவியும் அவர்களோட பெண்ணும்தான் இங்கே குடியிருக்காங்க !...அடி நாளிலே அந்த நண்பர் மட்டும் இல்லேன்னா, நான் செத்த இடம் எப்பவோ புல் முளைச்சுப் போயிருக்கும் !...." நன்றியின் மனச்சாட்சி போல அவரது குரல் தழுதழுத்தது. "ஆனால்...அந்த நண்பர் இந்த இருபத்தஞ்சு வருஷ காலமா எங்கேயோ தலைமறைவாய் இருக்கார் !....அவர் இருக்கக்கூடிய இடம்தான் தெரியலே... கடைசி காலத்திலே ஐ.பி. கொடுத்திட்டார் ! என் கடமையை நான் செஞ்சுக்கிட்டிருக்கேன் !...." என்று முடித்தார் சோமசேகர்.

அவரது மௌனமான துயரத்தில் அவனும் பங்கு பெற மௌனம் சாதித்தான்.

கார் நின்றது.

"குழலி தங்கமான பெண் ; தங்கமான குணம் !" என்று சம்பந்தமில்லாமல் சொன்னார், பெரியவர்.

ஞானபண்டிதனுக்கு அப்பேச்சு என்னவோ மாதிரி இருந்தது. தன்னை மாலையும் கழுத்துமாகப் பார்க்க வேண்டுமென்று ஒரு நாள் பிரஸ்தாபம் செய்த பேச்சுக்கு இம்முன்னுரை ஏதோ பீடிகையாக இருக்குமோ என்றும் அவன் குழம்பினன்.

தோட்டத்தின் வாசலைத் திறந்துவிட்டான் காவலாளி.

கார் உள்ளே தவழ்ந்தது.

இரு புறமும் தென்னை மரங்களின் ஊசி நிழல்கள் மண்ணில் கறுப்புப் பாய் விரித்திருந்தன.

இளங்காற்று இதமாக வீசியது.

உள்ளே சிறிய அழகிய வீடு தென்பட்டது.

"வாங்க ஐயா !...வாங்க தம்பி !" என்று பண்பும் பாசமும் மிளிர முகமன் மொழிந்தாள் ஓர் அம்மணி. ஐம்பது தாண்டியிருக்கும். நெற்றித் திலகம் துல்லியமான எடுப்புடன் மங்களகரமாக விளங்கியது, அந்தத் தாயின் அசைக்க முடியாத நன்னம்பிக்கையாக ! தன் மாங்கல்யத்துக்கு யாதொரு பயமும் சம்பவிக்காது என்ற திடமுடன் !

பெரியவர் சோமசேகர் தலைமுடியைக் கோதினர். நரை முடிகள் பறந்தன. லெனின் இளந்தாடியை வருடிக்கொண்டார். தலை குனிந்தபடி உள்ளே முன்னதாகச் சென்ருர். "வா தம்பி !" என்ருர்.

"இதுதான் தம்பி — ஞானபண்டிதன் !" என்ருர் அந்த அம்மணியிடம்.

"அப்படித்தான் நெனைச்சேன்," என்று சொன்ளுள் அந்த அம்மாள்.

வீட்டினுள் பிரவேசித்தார்கள்.

பாயில் அமர்ந்தார்கள்.

எங்கும் நிர்மலமான அமைதி கனிந்திருந்தது.

"அம்மாவை நான் இதுக்கு முந்தி ஒரு தரம்கூட பார்த்ததாக ஞாபகமில்லையே, அப்பா ?" என்ருன் ஞானபண்டிதன்.

"நீ பார்த்திருக்க முடியாது !" என்ருர் சோமசேகர்.

உட்புறம் இருபெண் குரல்கள் மெல்லிய குரலில் பேசுவது லேசாகக் கேட்டது.

"அன்னபாக்யத்தம்மா, எங்கே உங்க மகள் குழலி ?"

"உள்ளே இருக்குது. யாரோ அதோட சிநேகிதியாம். அதோடே பேசிக்கிட்டிருக்குது !"

"சரி, தம்பிக்கு காப்பி கொண்டுவரச் சொல்லுங்க !"

"நல்லதுங்க !," என்று வந்த அம்மாள் உள்ளே சென்ருள்.

அடுத்த ஐந்தாவது நிமிஷம் அழகு ஓர் உருக்கொண்ட பாங்கிலே குழலி அன்னநடை பயின்று, குனிந்த தலையை மெல்ல உயர்த்திப் பார்வையில் நாணப்பூவைத் தூவிவிட்டு வந்தாள். கையில் காப்பிக் கோப்பைகள் இரண்டு இருந்தன.

"சும்மா வெட்கப்படாமல் கொடும்மா !"

அவள்—குழலி—காப்பிக் கோப்பை ஒன்றைப் பவ்யமாக ஞான பண்டிதனிடம் நீட்டினுள். முறுவல் சிந்தினுள். கன்னங்கள் குழிந்தன. வலது கன்னத்து மச்சம் அழகுக்கு அழகானது !

ஞானபண்டிதன் அதை மென்மையான புன்னகையுடன் ஏந்தினுன் ; குடித்தான்.

சோமசேகர் காப்பியை அருந்திவிட்டு, துப்பாக்கியை எடுத்துக்கொண்டார். "ஒரு ரவுண்ட் பார்த்திட்டு வர்ரேன். நீங்க பேசிக்கிட்டிருங்க !" என்று சொல்லிச் சென்ருர்.

ஞானபண்டிதனுக்குத் தர்மசங்கடமாகப் போய்விட்டது, "அப்பா உங்களைப்பத்தி சொன்னுங்க !" என்ருன்.

அன்னபாக்கியத்தம்மாள் அப்பேச்சில் திகைப்படைந்தது போலத் தடுமாறினுள். "என்ன சொன்னுங்க ?" என்று கேட்டாள்.

"உங்க கணவர் எப்படியும் உங்களுக்குக் கிடைச்சிடும்னு தானுங்க தோணுது !....பாவம், இத்தனை காலமா அவரை விட்டுப் பிரிஞ்சு இருக்கிறதின்னு அது பெரிய தவம்தானுங்க அம்மா ! எப்படியும் அவரை உங்க கண்ணிலே தென்படவைச்சிடுவார் கடவுள் !"

"எல்லாம் தம்பியோட நல்லவாக்குப்படியே நடக்கட்டும் !" மெய்யுருகிப் பேசினுள் அம்மணி.

குழலியைக் காணுேமே !

அருகில் விரிந்து கிடந்த புத்தகத்தைக் கைநீட்டி நகர்த்தினுன்.

'கச்சதேவயானி' நாடகம் அது !

புரட்டினுன்.

அதற்குள் வெறுங்கையுடன் — ஆனால், துப்பாக்கியுடன் திரும்பிவிட்டார் பெரியவர். "புறப்படலாமா தம்பி ?" என்று கேட்டார்.

"ஓ...எஸ் !" என்றான் அவன்.

குழலியின் இவ்வாண்டுப் பிறந்த நாள் விழாவைத் தம் பங்களாவிலேயே வைத்து நடத்தும்படி கோரினார் அவர்.

அந்த அம்மாள் வெகு நேரம் சென்று இணக்கம் தெரிவித்தாள்.

வணக்கம் தெரிவித்துத் திரும்பினான் ஞானபண்டிதன். அப்பொழுது, புன்னகை கோலமிட, வலது கன்னத்து மச்சம் பளிச்சிட, குழலி கைகூப்பி அஞ்சலி செலுத்தி நின்றாள். அவனும் பதில் வணக்கம் செய்து திரும்பினான். அப்போது அவன் பார்வையில் தற்செயலாகப் பட்டாற்போன்று ஒரு நினைவு முகமும் விழுந்து விலகியது.

அது, பூவழகியின் ஆசைமுகம் !

# 11

## திருப்பு முனைகள்

**தி**ருப்பு முனைகள் இல்லையென்றால், வாழ்க்கையின் பாதைக்குச் சுவை கூடுவது இல்லை போலும் !

ஆம் , அப்படித்தான் ஞானபண்டிதனுக்குப் பட்டது.

இல்லாவிட்டால், யாருக்காக அவன் கடந்த சில மணி நேரமாக அல்லற்பட்டு, ஆதங்கப்பட்டு, ஆதுரப்பட்டானே அதே பெண் பூவழகி, சற்றும் எதிர்பாராத முறையில், குழலியின் வீட்டில் முகம் காட்டி நிற்பாள் என்று அவன் கனவு கண்டிருக்க முடியுமா , என்ன ?

அன்று முரடன் செங்கோடனிடமிருந்து அவன் கண்களில் மண்ணைத் தூவி விட்டுப் பறந்து சென்ற பைங்கிளியை எப்படி மீண்டும் தேடிக் கண்டுபிடிப்பது என்று பலவாறாக அவன் மூளையைக் குழப்பிக்கொண்டிருந்தான். பூவழகி இப்போது தகுந்த நிழலில் ஒண்டி விட்டதாகவே அவன் கருதினான். இந்த ஒதுங்கிய இடம் செங்கோடனின் கழுகுக் கண்களுக்குத் தெரிந்திருக்க வழியில்லை என்பதாகவும் அவன் தனக்குத்தானே தேற்றிக்கொண்டான். எதிரியின் கண்களிலே மண்ணைத் தூவியவள் தன் கண்களிலே சொக்குப்பொடி தூவி விட்டதையும் அவனது அந்தரங்கள் அவனுக்குச் செப்பின. பட்டங்கள் சுமந்த நவ நாகரிகக் குமரிகள் தனக்கென்று பலர் காத்திருக்க, இப்போது இந்தப் பெண் தன் நெஞ்சில் இடம பிடித்துக்கொண்ட விந்தையை, விட்ட குறை என்பதா, தொட்ட குறை என்பதா என்று முடிவு கட்ட முடியாமல் தவித்தான். அவன் தவிப்பு இன்பத் தவிப்பு.

'பூவழகி நிரம்பவும் வெள்ளை மனம் கொண்டவள். தன் கற்பைச் சூறையாட நினைத்தான் ஒரு பாவி என்று கண் கலங்கிச் சொன்னாளே, மறைக்காமல் ! அந்தப் பாவி யாரென்று சொல்லவில்லையே !.... வரவர, உலகத்தில் நீதிக்கும் நேர்மைக்

குமே வாய்ப்பில்லாமல் ;போய்விடும் போலிருக்கிறதே ?... அப்படியும் சொல்லிவிட முடியாது ! ஆம், மெய்தான் !... அபலைப் பெண்ணுக்கு வாழ்வு தந்த பெருமையை எனக்கு என் மனம் அளிக்கும். அதன் மூலம் எனக்குரிய என் கடமையும் பூர்த்தியாகக்கூடும். சந்தர்ப்பம் அறிந்து, பூவழகியை மீண்டும் சந்திக்கும் தருணத்தில் என் உள்ளத்தை —என் முதற்காதலைத் தெரிவித்துவிட வேண்டும் !... அவளது தூய்மை மண்டிய அந்த அன்பு, எனக்கு என் வாழ் நாள் பரியந்தம் நிரந்தரமான கொழுகொம்பாகப் பயன்பட்டு, அதன் மூலம் என்னுடைய பாசக் கொடியும் அவள்மீது படர முடியுமல்லவா ?....! என்று அவன் மனம் எண்ணியது.

அதே சமயம் தன் காதலுக்கு எதிர்ப்புச் சக்திகளாக அமையவல்ல இரு நபர்களைப்பற்றியும் ஞானபண்டிதன் மறந்து விடவில்லை. ஒரு நபர் : அவன் தந்தை. அடுத்த புள்ளி : செங்கோடன். செங்கோடனைப் பற்றி அவன் சிறிதும் அக்கறைப்படவில்லை. அவனைச் சட்டத்தின் பிடியில் அகப்படச் செய்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் ! சோமசேகரிடம் பொய்யாகச் செங்கோடன் ஜெயிலில் அடைபட்டுவிட்டதாகச் சொன்னது உண்மையாக நடக்காது என்பது என்ன நிச்சயம் ? போக்கிரிகளின் வாழ்வில் ஒரு பகுதி சிறையில்தானே கழிகிறது !...

ஆனால் பெரியவர் ?

தோட்ட வீட்டுக்குத் தன்னை அழைத்துச் சென்றதற்கும் ஏதோ ஓர் உட்பொருள் இருக்குமென்றும் அவன் ஆலோசனை செய்தான். ; குழலியின் இனிய முகமும், அந்த வலது கன்னத்து மச்சமும் அவன் உள்ளக்கிழியில் உருவாகின ! அப்போது அவனையும் அறியாமல் அவன் மனத்தில் பாச வெள்ளம் பொங்கிப் புரண்டது !.... ஆனால் ?... 'என் நெஞ்சத்துத் திரையிலே முதன் முதலாகப் புனையா ஓவியமாகிவிட்டவள் அபலைக் கன்னி பூவழகியேஅல்லவா ?....' இவ்வெண்ணம் தோன்றியதும் அவன் நெஞ்சத்தில் காதல் வெள்ளம் சுரந்தோடியது.

ஞானபண்டிதன் திரும்பி, விழிகளை நேர்வசமாய் உயர்த்தி விட்டான்.

கடல் அலைகள் ஆரவாரம் செய்த வண்ணம் இருந்தன.

117

தொடுவானம் பார்ப்பதற்கு எவ்வளவு அந்தமுடன் பொலிகிறது!

மெரீனு கடற்கரை என்ருல் அதன் அழகே அலாதிதான் !

மஞ்சள் வெய்யில் மறைந்துவிடும், இனி !

ஞானபண்டிதன் எழுந்தான். அப்போது தன் பெயரைச் சொல்லி நண்பன் காளமேகம் அழைத்ததை அறிந்தான். அவன் கையில் ஒரு சஞ்சிகை இருந்தது.

"கதை வந்திருக்கா பிரதர் ?" என்று கேட்டான் அவன்.

காளமேகம், 'ஆம்' என்று உரைத்தான். இதழை நீட்டினுன். 'விளையாட்டுத் தோழி' என்ற தலைப்பில் கதை எழுதப் பட்டிருந்தது.

வீட்டில் படித்துவிட்டு, திரும்ப அனுப்பி வைப்பதாகக் கூறி, அந்த 'எழில்' இதழை எடுத்துக்கொண்டான். மெரீனு காண்டீனில் சாயா குடித்துவிட்டு நண்பனிடமிருந்து பிரிந்தான் ஞானபண்டிதன். அப்போது அவனுள் இரு விஷயங்கள் உருவாகியிருந்தன.

ஒன்று : பூவழகிக்குத் தனித் தபால் ஒன்றினை அனுப்ப வேண்டும்.

இரண்டு : சோமசேகர் — பெரியவர் — தன்னுடைய சொந்தத் தந்தையா இல்லையா என்ற பிரச்னைக்குஒரு முடிவு கட்ட வேண்டும் !...

இவ்விதமான இரு நினைவுகளினூடே அவன் 'செந்தில் விலாசத்தை' அடைந்த போது, இருள் விலகி, ஒளித்தடம் விரிந்திருப்பதைக் கண்டான்.

## கடிதம் விடு தூது !

சிகாகோவிலிருந்து வந்திருந்த விமானத் தபால் ஞானபண்டிதனுக்கு அத்யந்த நண்பர் எழுதியது. சேமநிதி கிட்டினமாதிரி அவனுக்குக் களிப்பு ஏற்பட்டது.

சிகாகோ நண்பரின் நாமம் ; ரோட்ரீகஸ் ஜூனியர். பெரும் பணக்காரக் குடும்பம். நம் கணக்கில் ஒரு கோடிக்குச் சேரும். அப்படிப்பட்ட பணக்காரர் வீட்டுச் செல்லப்பிள்ளை, மிடில்டவுனைச் சேர்ந்த சுரங்கமொன்றில் அலுவல் பார்த்த ஒரு கூலிப் பெண்ணைத்தான் காதலித்துத் திருமணம் புரிந்து கொண்டிருந்தான். 'காதல் என்பது பொருளாதார ஏற்றத் தாழ்வு என்கிற கட்டுத்தளைகளை எப்படி அறுத்தெறிந்து விடுமோ அதே மாதிரி அன்பு என்கிற நேசத்தின் கட்டுத்தளை, களுக்கெல்லாம் அடங்கிக்கிடக்கும் விநோதப் பண்பும் காதல் சக்திக்கு உண்டு !''

ஞானப்பண்டிதனுக்காகவே வரம்பறுத்துச் சொல்லப்பட்ட சித்தாந்தமோ அது ?—எது எப்படி இருந்தாலும் 'அன்பின் வழியது உயிர்நிலை' என்ற கோட்பாட்டின் பொதுக்குறிப்பில் ஒரு முக்கிய கிளையாக அவன் காதலை அன்பு பூர்வமாக மதித் திருந்தான். அதே சமயம், அந்தக் காதலுக்கு ஒரு சமுதாய நீதியின்பாற்பட்ட தார்மீகமான அந்தஸ்தும் தன்னிறைவுக்கு உகந்த ஒரு மனச்சாந்தியும் உண்டாவதையும் அவன் விரும்பினான். அப்படிப்பட்ட ஒரு சூழல் உருவாவதற்காக, அவன் அந்தப் பெண் பூவழகியை அடைய வேண்டுமெனவும் ஆசைப்பட்டான்.

**'எந்நேரமும் உன் சந்நிதியில் நான் இருக்க வேணும் ஐயா !''**

என்ற கோபால கிருஷ்ண பாரதியின் தேவகாந்தாரி ராகப்பாடல் ரேடியோவில் அற்புதமாகப் பாடப்பட்டது.

அதை ரசித்த வண்ணம் அவன் கடிதத்தாளை எடுத்து எழுதத் தொடங்கினன். எழுதத் தொடங்கிய போது, அவனை இன்ப உணர்ச்சி ஆட்கொண்டது. 'கார்பன் தாளை' வசமாக வைத்துக்கொண்டான். பேனு ஓடியது ; அதாவது எழுதியது ! பெயர் அச்சடிக்கப்பட்ட கடிதத்தாளில் எழுதினன் !

**நேசம் நிரம்பின பூவழகிக்கு,**

இந்தக் கடிதம் அதுவும், இந்தத் தனிப்பார்வைக்கான கடிதம் உங்களுக்கு நிரம்பவும் வியப்பை அளிக்கக்கூடும். அதே வியப்பில் துளியேனும் மகிழ்ச்சியும் இரண்டறக் கலந்திருக்கும் பட்சத்தில், அது எனக்கும் மானசீகமான அகமகிழ்வைக் கட்டாயம் தருமென்பதற்கு அட்டியில்லை.

இந்து மத சம்பிரதாயத்தில் விட்ட குறை என்றும் தொட்ட குறை என்றும் பேசப்படுகிறது. நீங்கள் அதே இந்து சமயத்துக்கு உட்பட்டவர்களானல், அது குறித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள் !

நீங்கள் யார், என்ன இனம், உங்கள் பிறப்பு வளர்ப்பு யாவை, உங்கள் பூர்வாசிரமம் எது, உங்கள் குணநலம் எப்படி என்பன போன்ற கேள்விகளைப்பற்றியெல்லாம் எனக்குக் கவலை கிடையாது. எனக்குள்ள கவலையெல்லாம், உங்களுடைய அபலைத்தன்மை கொண்ட வாழ்வுக்கு என்னல் விடிமோட்சம் கிட்டினல் அதையே என்னுடைய கடமையின் தன்னிறைவுப் பூர்த்தியின் வெற்றி விழாவாகக் கொண்டாடுவேன். என் சமூகப்பற்று அப்படி. செயல் வழியில் நடக்கக் கனவு கண்டு, திடசங்கற்பம் கொண்டு ஒழுகி வரும் என்னுடைய உதிரத்தில் உதிரமாய்ப் பரவி விட்ட பண்பு அது.

என்னைப்பற்றி நீங்கள் ஓரளவுக்காவது ஒரு பிடிமானம் கொள்வதற்காகவேனும் சில வரிகள் உங்களுக்குத் தெரிய வேண்டாமா ?— அதற்கெனவே சுயநலமிக்க இவ்விவரங்களை உங்கள் முன்னே வைத்தேன்.

என் எழுத்துக்களில் கருணைப் பண்போ அல்லது சுய நலப் பண்போ வாடை வீசுவதாக நீங்கள் கருதினல் அதற்கும் நானே பொறுப்பாகக்கூடியவன். ஏனென்ருல், கருணை காட்டுவதால் ஓர் உயர்வோ, கருணைக்குப் பாத்திரமாவதால் ஒரு

குறைவோ உண்டாவதாக நான் கருத மாட்டேன். நீங்களும் கருதக்கூடாது.

'நீங்கள்' என்று அழைப்பது எனக்கு அவ்வளவு இயல்பான அன்புடன் ஒலிப்பதாகத் தோன்றவில்லை. உங்க ளுக்கு—அல்ல, உனக்கு—இந்த 'உனக்கு', என்பதில் ஓர் ஆனந்தம் எனக்கு உண்டாவதைப் போல உனக்கும் உண்டானால் இப்படியே அழைக்க இனிமேல் நான் தயார்!..

கடிதம் நீள்கிறது.

உன்பால் நான் பூண்டிருக்கக்கூடிய காதலைப் போல நீயும் என்பால் காதல் கொண்டால் — நேசம் கொண்டால்—பிரியம் கொண்டால் — உன்னை நான் என் பங்களாவில் நேரில் எதிர் பார்க்கிறேன்.

இல்லையேல், ஒரு வரிக் கடிதம் போதும். அப்பால் உனக்கு—அல்ல, உங்களுக்கு — என் நன்றி மனிதாபிமானத் துடன் காத்திருக்கும்.

அன்புள்ள,

**எஸ். ஞானபண்டிதன் !**

'எஸ்' என்ற விலாச எழுத்தைக் கிறுக்கிவிடத் துடித்தான்.. பிறகு அவ்வாறு செய்யவில்லை. கடிதத்தை ஒட்டினான். விலாசம் எழுதினான். தயாராக வெளிப்புறம் நின்ற பணியாள் பையனிடம் மேற்படி கடிதத்தைக் கொடுத்து, அடையாளம் சொல்லி, பணத்தையும் கொடுத்தனுப்பினான் அவன்.

காலை வெய்யிலை மிதித்தவனாக வேலைக்காரப் பையன் நடந்தான்.

பரீட்சை முடிவுக்காகத் துடித்துக்கொண்டிருக்கும் பட்டப் படிப்பு மாணவனாக இருந்த நிலையை மீண்டும் அடையலானான் ஞானபண்டிதன்.

# 13

## அப்பா பிரச்னை !

அருமைமிகு தமிழ் நாட்டின் தலைநகர்ப் பட்டணத்திலே 'ஆனந்த்' தியேட்டருக்கு ஒரு தனிப்பட்ட செல்வாக்கு உண்டு. அங்கே படம் பார்ப்பதென்றால், ஞானபண்டிதனுக்கு ஒரு கவர்ச்சி ஊறுவது வழக்கம். மன அமைதியும் கிட்டுவது இயல்பு.

அங்கே 'தி விசிட்' என்ற படம் ஓடிக்கொண்டிருந்தது. 'மாட்னி'க்கு அவன் படம் பார்க்கச் சென்றான்.

'இந்நேரம் பூவழகி ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். என் கடிதமும் அவள் பார்வைக்குக் கிடைத்திருக்க வேண்டும்' என்று நினைத்தான். அந்த லெட்டர் அசம்பாவிதமாகவோ, எதிர் பாராத வகையிலோ, ஒருவேளை குழலியிடம் கிடைத்தால்?" ஒருகாலும் அதை உடைத்துப் பார்க்கும் பண்பிழந்த செய்கையை மேற்கொள்ள மாட்டாள் என்ற வரைக்கும் அவள் அவனிடம் ஒரு நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொண்டிருந்தாள். மேலும், பூவழகி தன்னைப்பற்றித் தோழியிடம் எதுவும் சொல்ல ஏது எதுவுமில்லை என்பதையும் அவன் யோசித்தான். உரிய நபர் இல்லாவிட்டால், கடிதத்தைப் பையன் கொண்டுவந்து விடுவான் !

ஞானபண்டிதனுக்கு நிம்மதி பறிபோய்விட்டது போன்றே இருந்தது. செங்கோடனும் சோமசேகரர் அவர்களும் தன்வரை மூடுமந்திரப் பொருள்களாகவே அவனுக்குத் தோன்றினர்.

செங்கோடன் யாரோ அந்நியன் !

ஆனால் ஸ்ரீமான் சோமசேகர் ?

பெரியவரைத் தன் தந்தை என்று பாசத்துடன் நினைத்துப் பார்க்கக்கூடக் கடந்த சில மணி நேரங்களாக அவன் மறுகினான்.

அதன் பின் ?...

பூவழகிக்கு எழுதிய தபாலில் 'எஸ்' என்ற 'இனிஷியலை' அதனுல்தான் அவன் கிறுக்கிவிடவும் முதலில் துணிந்திருந்தான்.

ஆனுல் நடந்தது...? —

அவனை மத்தியான்னம சாப்பாட்டுக்கு அழைத்தார் பெரியவர். அப்போதே அப்பிரச்னையைத் தீர்த்துக்கொள்ளவே அவன் துடித்தான். ஆனுல் எப்படி அக்கேள்வியை அவரிடம் கேட்பது என்றுதான் அவனுக்குத் தோன்றவில்லை. அதற்கான மனத்தெம்பும் ஒத்துழைக்கவில்லை. இருபத்தைந்து வருஷ காலம், தானே சகலமும் என்று நம்பி, தனக்கெனவே வாழ்ந்து, தன் நிமித்தமே மனைவியை இழந்தும், 'ஒன்றியாக'த் தியாகப் பண்புடன் வாழ்ந்துவரும் அவரிடம் எப்படி, 'நீர் என் சொந்தத் தந்தையா, இல்லையா?' என்று கேட்பது என்ற தயக்கம் அவனை ரம்பமாக அறுத்தது.

ஆனுல், செங்கோடன் பேச்சை நூறு சதவிகிதம் புறக்கணிக்கவும் முடியவில்லை; நூறு சதவிகிதம் நம்பிவிடவும் இல்லை அவன்! இப்படிப்பட்டதொரு குழப்பத்திற்குத்தான் விதியின் பெயர் சூட்டப்படுகிறதோ?

அப்பால்...?

சாப்பிட உட்காருமுன் ஒரு காரியம் செய்தான் ஞான பண்டிதன்.

"எஸ். ஞானபண்டிதன்" என்ற தன் பெயர் அச்சடிக்கப் பெற்றிருந்த 'லெட்டர் ஹெட்' தாள் ஒன்றை எடுத்து, அதில் "எஸ்' என்ற 'இனிஷியலை' அடித்துவிட்டு, அதை உணவு மேஜையில் வைத்திருந்தான்.

சாப்பாட்டுக்கு வந்த சோமசேகர், அவன் கணிப்புப்படியே அத்தாளை எடுத்து உன்னிப்பாகப் பார்த்தார். பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவருடைய விழிகளினின்றும் சுடுசரம் உதிர்ந்தது. "என்ன தம்பி, உனக்கு எஸ் — என்கிற இனிஷியல் மேலே என்ன அவ்வளவு ஆத்திரம்?... இந்தக் கிழத்தகப்பன் மேலே உனக்குக் கசப்பு விழுந்திடுச்சா? அன்புக்கும் பாசத்துக்கும் இப்படி ஒரு மாறுதல் உண்டாகும்னு உன் மூலம்தானப்பா நான் தெரிஞ்சுக்கிடுறேன்! நான் உன் தகப்பன்!... எது எப்படி ஆனுலும் சரி, 'எஸ்' அப்படியேதான்

இருக்க வேணும். அது நீதியின் தர்மம் !...கடவுளே ! செந்தில் வேலா !...'' என்று உணர்ச்சிச் சுழிப்புடன் சொன்னார் அவர்.

அவன் மௌனமாக இருந்தான். அவர் பேச்சு அவன் கண்களையும் கலங்கடித்துவிடத் தவறவில்லை. பிறகு, முரட்டுப் போக்கிரி, 'சோமசேகர் உன் சொந்தத் தந்தையா ?' என்று சவால் கேள்வி விடுத்ததை விஸ்தரித்தான்.

''பிறத்தியான் ஒரு புரளியைக் கிளப்பினால் அதற்காக இப்படியா நீ பேதலிப்பது ?...அவன் ஒரு பாவி ! பகவான்தான் அவனுக்கு நல்ல புத்தி காட்ட வேணும். சே ! அவன் மிருகம், மனித மிருகம் !'' என்று நொந்தார்.

பின்னர், என்ன நினைத்தாரோ, விசும்பத் தொடங்கிவிட்டார் அவர். எழுந்து, மகாத்மா காந்திஜியின் படத்தின் முன் கைகளைக் கூப்பி நின்றார். ''அண்ணலே ! என்ன சோதனை இது ?'' என்று கதறிக் கண்ணீர் வடித்தார். பிறகு, நாற்காலியில் வந்து குந்தினார். ''நான் உன் தந்தை என்பதை நான் எப்படி அப்பா நிரூபிப்பேன் ? ஐயையோ ! நான் எப்படிப் பட்ட துர்ப்பாக்கியசாலி ஆகிவிட்டேன் ! ஐயோ !'' என்று மீண்டும் விம்மலானார்.

''அப்பா ! நீங்கள்தான் என் அப்பா ! நான் நம்பாவிட்டால் தானே நீங்கள் இப்படிப் புலம்ப வேண்டும்?'' என்று சமாதானப் படுத்தினான்.

சோமசேகர் ஐந்து நிமிஷங்கள் சென்று, முகத்தைத் துடைத்துக்கொண்டார். ''சரி, சாப்பிடுவோம் !'' என்றார்.

உணவு உண்டார்கள்.

என்னவோ, மனம் அமைதியைப் பற்றிக்கொண்டாற் போல ஞானபண்டிதன் உணர்ந்தாலும், அம்மனத்திலே அமைதியின் ஆட்சிக்கான தடயம் காணப்படவில்லை என்பதையும் அவன் உணரவே செய்தான் !

படம் ஆரம்பிக்கப்பட்டது.

பூவழகியைப் பூங்காவில் சந்தித்த போது தன்னுடைய நிரபராதித்தன்மையை — தன் தூய்மையை — தன் விழிநீரின் சாட்சியுடன் ஸ்தாபிதம் செய்துகாட்டிய அந்தப் பரிசுத்தத்தை, இப்போது துணைக்கு அழைத்தபடி, அந்த நிம்மதியின் கனி

விலேயே வேறு ஒன்றையும் பற்றி அலட்டிக்கொள்ளாமல், படத்தை அனுபவித்தான்.

படம் முடிந்தது.

தேசிய கீதமும் முடிந்தது.

தன்னை யாரோ தோள் தொட்டு அழைப்பதாக அறிந்தான். திரும்பினான். "மிஸ்டர் ஞானபண்டிதன்! நீ பலே ஆள்!.... அன்னிக்கு டெலிபோனிலே என்னை நீ ஏமாத்திவிட்டதாத்தானே மனப்பால் குடிச்சிட்டிருக்கே! அதுதான் தப்பு!....உன் குரல்னு புரிஞ்சுக்கிட்டுத்தான் நானும் பேசிக்கிட்டிருந்தேனாக்கும்!... நீயும் நானும் கூடிய சீக்கிரமே மீட் பண்ணுவோம்!.... வரட்டுமா? எனக்கு அவசரமான ஜோலி இருக்குது!...." என்று கொட்டி விட்டு, பிள்ளைப் பூச்சி போலச் சுவடு காட்டாமல் நழுவி விட்டான்!

தேள் கொட்டின உபாதை ஞானபண்டிதனுக்கல்லவா தெரியும்?

# 14

## செங்கோடன் = பேய் !

பழமொழி ஒன்று உண்டு :

'மனத்துக்கு மனம்தான் சாட்சி ; மற்றதற்குத் தெய்வந்தான் சாட்சி !'

வாஸ்தவம்தான் !....

காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். ஆயிரம் விளக்குப்பகுதி அவன் மனத்தில் ஆயிரம் வகைப்பட்ட சிந்தனைகளை உண்டாக்கி, வர்ணஜாலம் செய்துகொண்டிருந்தது. மனத்திற்குத்தான் ஆயிரம் இதயங்கள் உண்டே !

'எல்லாம் சரி. இந்த ஸ்கவுண்ட்ரல் செங்கோடன் பெரிய ஆள்தான் ! இல்லேன்னா, ரௌடின்னு பேர் எடுக்க முடியுமா, அதுவும் இந்த மெட்ராஸிலே !... ம்.... வரட்டும், வரட்டும் ! எஸ்.... அப்படியும்கூட செய்திருப்பான் அவன் ! பூவழகி விஷயமாய் இந்நேரம் பெரியவர் காதுக்குக்கூட விஷயத்தை எட்டிடச் செஞ்சுமிருப்பான் ! அது அப்படி நடந்தாக்கூட நல்லதுதான் !....நான் பூவழகியை லவ் பண்ணுற சங்கதியை அவர் நேரிடையாகவோ, இல்லாட்டி மறைமுகமாகவோ தெரிஞ்சுக்கிடுறது சிலாக்யந்தான். அப்பதான், குழலியையும் என்னையும் வச்சு முடிச்சுப்போடுற விஷயமாய் ஏதாவது யோசிச்சிருந்தால் அதுக்கும் ஒரு தீர்வு கிடைக்கும். ஆமாம் !....' மனம் சிலந்தி வலே பின்னியது.

இப்படிப்பட்ட சிந்தனைகளைச் சுமந்தவாறு 'ஹோட்டல் ஸவே'யில் ஒரு சூடான சாயாவைக் குடித்துவைத்தான். 'பிளேயர்ஸ்' புகை பற்றத் தொடங்கிவிட்டது. அந்தப் புகையை அவன் நெஞ்சைத் தாக்க அனுமதிக்க மாட்டான்.

அவனுக்குச் சகலமும் தெரியும்.

வண்டியில் கடைசிப் புகையைக் கக்கி நிரப்பிவிட்டவனுக உள்ளே குந்தினுன். காரை 'ஸ்டார்ட்' செய்ய முனைந்த நேரத்தில், "ஸார் !" என்ற குரல் கேட்டது.

அங்கே பூவழகி நின்ருள். மான் விழி தாழ்த்தி, மையல் விழி நிமிர்த்தி, அன்பும் பண்புமாக ஓர் உருவம் பூண்டு, புன்னகையின் புது நிலவாக நின்ருள் பூவழகி. அவள் பூவின் அழகியோ ? பூவுக்கு அழகியோ ?

அவள் அழகுக்கு எல்லாம் தெரியும் !

பூவழகியைக் கண்டதும், தேவதை விண்ணிலிருந்து மண்ணுக்கு இறங்கி வந்துவிட்டதாகவே அவனுக்குத் தோன்றியது. விழிக்கரைகளில் புளகிதம் நீராக உருக் காட்டியது. இதழ்க்கரைகளில் இன்பம் ஈரக்கசிவின் வனப்புப் பெற்றது.

"ஏறிக்கொள்ளுங்கள் !..."

"பரவாயில்லை !..."

தான் அவளுக்கு அனுப்பிய காதல் தூதுக் கடிதம் நல்ல பதிலாக இவள் உருவம் பூண்டு வந்திருப்பதாகவே அவன் ஊகம் செய்தான்.

அவள் ஏனோ தயங்கினுள். "நீங்க ஷோவுக்கு ஆனந்த் தியேட்டருக்குப் போயிருப்பதாகப் போனில் சொன்னுங்க. அதான் தேடி வந்தேனுங்க !" என்ருள். அவள் பேச்சின் தன்மையிலிருந்தும் தயக்கத்திலிருந்தும் இன்னும் ஏதோ சொல்ல வேண்டுமென்று துடிப்பதும் தெரியவந்தது.

"பேசிக்கொண்டே வீட்டுக்குப் போகலாமே ! வாருங்கள் !"

"இப்படிப்பட்ட மரியாதைப் பேச்சை என்னுல் தாங்க முடியாதுங்க. சும்மா ஏக வசனத்திலேயே பேசுங்க. உங்களுக்கு நான் சின்னவள் !" என்று 'உணர்ந்து' பேசி, ஒரு வேண்டுகோளையும் அவனிடம் சமர்ப்பித்தாள்.

தன்னுடைய கடிதத்தில் தான் எழுப்பியிருந்த ஒரு திட்டத்துக்குத்தான் அவள் இப்போது தன் வாய்மொழியாக ஒரு பதிலைச் சொல்லுகிருள் என்று அவன் அனுமானம் செய்யவும் தயாராஞன். அவளும் தன்னைப் போலக் காதலுக்கு இலக்காகும் பட்சத்தில், இருதரப்பிலும் காதல் இணங்கிவரும் போது, அவளை அவன் 'நீ' என்று ஏக வசனத்தில் அழைக்கத்

தயாராக இருப்பதாக அவன் அவளுக்கு விடுத்த கடிதத்தில் குறிக்கவில்லையா ?— அதற்குத்தான் இப்போது பூவழகி விடை சொல்லுகின்றாளோ ? 'என் காதலுக்கு 'ஓ. கே' சொல்லத்தான் இப்போது இவள் நேரிலேயே பிரசன்னம் ஆகியிருக்க வேண்டும் !' என்றும் அவன் அழுத்தமாக முடிவு கட்டினான் !

"பூவழகி, சாயா சாப்பிடுகிறாயா ?"

"சாப்பிடுகிறேனுங்க !"

"பேஷ் !...."

அவளுக்குச் சாயா வாங்கிக்கொடுத்தான்.

"உங்களுக்கு ?"

"நான் சற்றுமுன்தான் சாப்பிட்டேன் !"

"இல்லை, நீங்க என் முன்னாலே ஒரு ட்ரிப் சாப்பிடுங்க !"

"ஆல் ரைட் !"

அவன் பில்லுக்குப் பணம் கொடுக்கப் போனான்.

அவள் சொன்னாள்: 'உங்க சாயாவுக்கு நான் கொடுப்பேன். என் சாயாவுக்கு நீங்க கொடுக்கலாம் ! பரஸ்பரம் நம் அன்பான மனசுக்கு ஓர் ஆறுதல் பாகப்பிரிவினை ஆகுமுங்க !...."

அவன் அதற்கும் சம்மதித்தான்.

திரும்பினார்கள்.

"பின் சீட்டில் ஏறிக்க பூவழகி !"

"என்னை மன்னிச்சிடுங்க. நான் இனி உங்க பங்களாவுக்கு வரமுடியாது. அது உசிதமுமில்லேங்க. உங்ககிட்டே ஒரு நிமிஷம் பேசி, நீங்க எனக்காக எவ்வளவோ உடம்பாலவும் மனசாலவும் பாடுபட்டீங்களே — பாடுபடவும் நினைச்சீங்களே, அதுக்கெல்லாம் உங்களுக்கு என்னோட இதயபூர்வமான நன்றியை அள்ளி அள்ளிக் கொடுத்துட்டுப் போயிடணும்னுதான் வந்தேன். ஏழையாவும் தாய் தந்தை இல்லாத அனாதையாவும் பிறந்துவிட்ட இந்த அபலைப் பொண்ணுகிட்ட இருப்பதெல்லாம் இந்த அன்பும் நன்றி மனமும்தானுங்களே !... நான் உங்ககிட்டேயிருந்து விடை வாங்கிக்கிறேன் !... அனாதையாய்ப் பிறந்த எனக்கு அனாதை இல்லம் — அண்ணல் அனாதை இல்லம் — நிழல் தந்திடுச்சு. இடை நடுவிலே, ஒரு பாவிப்பயல் என்னோட கற்பைச் சூறையாட நினைச்சு ஏமாந்திட்டான். அந்தச் சமயம் என்னைக் காப்பாத்தினான் செங்கோடன். இதாலல்லாம்

ஒரு இடைவெளி விழுந்திட்டுது. எனக்கின்னு ஒரு முடிவு இருக்குது. அது எனக்கு மட்டுந்தான் தெரியும் !... நான் புறப் படுகிறேனுங்க !.... இன்னொரு முக்கியமான சமாசாரமுங்க !.... குழலி அக்கா உங்களைத்தான் ரொம்ப தூரம் மனப்பூர்வமாக நம்பியிருக்குதுங்க !... அந்த மனசை என்னாலே நல்லா புரிஞ்சுக்கவும் முடிஞ்சுதுங்க. அதோட ஆசை ரொம்பவும் நியாய மான — நேர்மையான — இயல்பான ஆசைதானுங்க !....

"இன்னொரு விஷயத்தையும் நான் மறந்திட மாட்டேனுங்க. என் ஆவி பிரியிறமட்டும் அது என் நெஞ்சை விட்டு — நினைவை விட்டு—அகலாதுங்க ! நீங்க என் பேரிலே காட்டின கருணைக்கு — நீங்க என் மேலே வச்சிருக்கிற நேசத்துக்கு — நீங்க எங்கிட்ட கொண்டிருக்கிற ஈரத்துக்கு நான் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கேனுங்க.

"உங்க லெட்டரை நான் மட்டும் படிக்கலே ; அக்காவையும் படிக்கச் சொன்னேன். உடனே, இங்கிட்டுப் புறப்பட்டு வந்தேனுங்க !.... சரிங்க, நான் போயிட்டு வாரேனுங்க !..." என்று சொல்லிக் கைகளை நளினமாக எழிலுடன் குவித்து வணங்கிப் பின் வசமாகத் திரும்பி, புறப்படுவதற்குத் தோதாக நின்றாள். பரவிய ஒளியில், அவள் முகத்தில் துயரம் தெரியவே செய்தது.

ஞானபண்டிதனின் கண்கள் கலங்கின. மனக்கோட்டை தகர்ந்து விழ, அதன் சிதிலத் துகள்கள் அவனது நேத்திரங் களில் விழுந்திருக்கவும் கூடும்.

அவன் கல்லாய்ச் சமைந்து நின்றான். சமைந்து நின்றவனை மீண்டும் உயிர்ப்பூட்டியது பூவழகியின் பதட்டக் குரல். "ஸார் !.... அதோ செங்கோடன் வந்துக்கிட்டிருக்கான் ! சீக்கிரம் வண்டியை ஸ்டார்ட் செய்யுங்க !" என்று காரில் ஏறி அமர்ந்து கொண்டாள் அவள். பேயைக் கண்டவளாகக் குலை நடுங்கினாள்.

செங்கோடன் மறைந்தானோ என்னவோ, அந்தக் கார் மட்டிலும் மாயமாய் மறைந்தது !

15

## விருந்தினர் ஹால்

ஆயிரம் விளக்குச் சுற்றுச் சார்பில் மறைந்து போன அந்த MSX 4043 என்ற எழுத்துக்களும் எண்களும் 'செந்தில் விலாசம்' பங்களா வாசலில் மீண்டும் ஒளிவிடத் தொடங்கி விட்டன.

ஞானபண்டிதனும் இப்போது நல்ல மூச்சு விட்டான். பூவழகியுடன் இருக்கையில் தானும், தன்னுடன் இருக்கையில் பூவழகியும், போக்கிரி ஒருவனின் கழுகுப் பார்வைக்கு, நரம்பற்ற —இதயமிழந்த பேச்சுக்கோ இலக்காகக்கூடாதென்றே அவனும் கருதித்தான் அப்பொழுது பூவழகியின் இஷ்டப்படி காரைச் செலுத்தவும் செய்தான்.

முகப்பில் வந்து நின்றது 'ஸ்டாண்டர்ட்.'

நில நிறக் குழலொளியில் அவள் அங்கிருந்து பிய்த்துக் கொள்ள வேளை நோக்கி நின்ருள்.

அவனே அவளை நோக்கி, "வா, மாடிக்குப் போகலாம்!" என்று கெஞ்சிய குரலில் உரிமையைக் குழைத்துக் கூப்பிட்டான்.

பூவழகி விரக்தியுடன் சிரிப்பை உமிழ்ந்தாள். "நான் போய்விடுகிறேன். இல்லாவிட்டால், என்னுடன் கூடப் பிறக்காத அக்காளுக்குத் துரோகம் செய்தவளாகிவிடுவேன்! நான் அப்புறம் பேராசைக்காரியாகவும் ஆகிவிடுவேன்!.... குழலி தான் உங்களுக்கு உகந்தவள். நான் உங்களை மறந்துவிட முயலுகிறேன். நீங்களும் என்னை மறந்துவிடுங்கள்!" என்று வீறு கொண்டு பேசிவிட்டு, அவள் அங்கிருந்து புறப்பட முனைந்தாள்.

அப்போது, ஞானபண்டிதன் பூவழகியின் பொற்கரங்களைப் பற்றினன். அவனது கண்ணீர்த்துளிகள் அவளது புறங் கைகளில் விழுந்தன.

அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

அந்நேரத்தில் அங்கே பெரியவர் சோமசேகர் தோன்றினர். ஞானபண்டிதனையும் பூவழகியையும் அவர் தம் பார்வையால் அளந்தார்.

சுய நினைவு எய்திய ஞானபண்டிதன் தன் கைகளை உதறினன். ஆனல், அதற்குள் அக்கைகளை விலக்கி, தன்னை விடுவித்துக்கொண்டு நின்ருள் பூவழகி.

"அம்மா, நீ யாரு?"

"ஐயா, நான் அனுதைங்க... ஊர் பேர் இல்லாத அனுதைங்க... இந்த அனுதையைத் தெய்வம் சோதிக்குதுங்க... இது அந்தத் தெய்வத்துக்கே அடுக்காதுங்க!..." என்ருள் அவள், மெலிந்த தொனியில்.

"நல்லாப் பேசுறே அம்மா நீ. உன் பேர்தான் பூவழகியோ?" என்ருர் அவர்.

"ஆமாங்க!..." என்று அதிசயக் குறிப்பு மிளிர பதில் மொழிந்தாள் கன்னி.

"தெய்வத்துக்குச் சோதிக்கிற வேலை இல்லேன்ன, அப்புறம் அன்பு, பாசம், நேசம் என்கிற தத்துவங்களுக்கு ஒரு மகிமை உண்டாகாதேம்மா!...." என்ருர் பெரியவர்.

அவரை வியப்பு விரிய நோக்கினன் ஞானபண்டிதன். அவர் பேச்சின் தாத்பரியம் தனக்குச் சார்புடையதாகத் தெரிந்தது. அவர் தம் கையில் ஏதோ நூல் வைத்திருந்தார்.

கசன் — தெய்வயானையின் கதை நூல் அது. குழலியின் தோட்ட வீட்டில் அல்லவா அது இருந்தது?

"தம்பி, இந்தப் பொண்ணுக்கு நம்ம 'விருந்தினர் ஹாலே' ஏற்பாடு செஞ்சு கொடுக்கச் சொல்!... நீ போய்ச் சாப்பிட்டிட்டு ஓய்வெடுத்துக்கம்மா. விடியட்டும்....! எல்லாத்துக்கும் நல்ல பொழுது விடியும்!...." என்று சொல்லிவிட்டு, விரைந்தார் அவர்.

'விருந்தினர் ஹாலே' அவன் பூவழகியுடன் அடைந்த போது, அங்கே குழலியும் அவன் தாயான அன்னபாக்கியத்தம்மாளும் ஏற்கெனவே விருந்தினர்களாக நிறைந்திருந்தார்கள்!

# 16

## முள்ளுக்கு முள் !

விருந்தினர்கள் மூவரையும் ஒரே அளவான விசேஷ சிரத்தையுடன் கவனித்து, அவர்களுக்கான வசதிகளையும் செய்து கொடுத்துவிட்டுத்தான் ஞானபண்டிதன் சாப்பிட்டான்.

பெரியவர் சோமசேகர் அவர்களுக்கு வயிறு மந்தம். இரவு பட்டினி போட்டார். 'லங்கணம் பரம ஔஷதம்' என்பதை அனுபவபூர்வமாகக் கண்டவர் அவர்.

இராப்பொழுது கழிந்துகொண்டிருந்தது.

நண்பன் காளமேகத்திடமிருந்து வாங்கி வந்த பத்திரிகையின் நினைவு அப்போதுதான் அவனுக்கு வந்தது. எடுத்துப் படித்தான். ரேடியோ மெல்ல முனகிக்கொண்டிருந்தது, சீக்காளி பிதற்றும் பாவனையாக. அதை நிறுத்திவிட்டுக் கதையைப் படித்தான். வாஸ்தவத்திலேயே ஒரே மூச்சில்தான் படித்தான். படித்ததும் அவன் சிந்தனை கிளர்ந்தெழுந்தது.

கதை இதுவேதான்:

ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் சிறு பிராயத்தில் விளையாடுகையில் 'டூ' போட்டுப் பிரிந்துவிடுகிறார்கள். காலம் ஓடுகிறது. அவன் பெரியவனாகிறான். தன் விளையாட்டுத் தோழியை எப்படியாவது கண்டு, அவளுடன் 'டூ'வைக் கலைத்து, 'ராசி' ஆகிவிடத்துடிக்கிறான். மணப்பெண் கோலத்தில் இருக்கும் தன் விளையாட்டுத் தோழியை அவள் புருஷனின் அனுமதியுடன் தனியே சந்தித்து 'ராசி' ஆகிறான்.

உணர்ச்சி சுழித்திடும் நல்ல மனோதத்துவப் பின்னல் கதை.

விளையாட்டுத் தோழியைப் பற்றி வருணித்திருந்த விதத்தைப் படித்தான். அப்பெண்ணின் வலது கன்னத்து மச்சம்பற்றிக் குறிப்பிட்டது அவனுக்குக் குழலியை நினைவு படுத்திக் காட்டியது. பெரும்பாலும், சொந்த அனுபவங்களையே பெரும்பாலானவர்கள் கதைகளாகச் சிருஷ்டிப்பதையும் அவன்

கேள்விப்பட்டிருந்தான். அப்படி இதுகூட காளமேகத்தின் அனுபவப் பழைமையின் அடிப்படையில் உருவாகியிருக்க லாமோ என்றும் அவன் கருதினான்.

மறுநாள் அவன் தொழிற்சாலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அப்போது டயர் தொழிலகம் பற்றி அவன் செக்ரட்டரி மோகன் 'போன்' மூலம் பேசினான். அதையடுத்து, காளமேகம் 'போன்' செய்தான். பேச்சோடு பேச்சாக, ஓர் உண்மை தெளிவானது. அவன் சந்தேகப்பட்டது போலவே, அக்கதை காளமேகத்தின் சொந்த வாழ்வின் ஒரு பகுதியையே பிரதிபலித்ததாம்!

மூன்று நாள் கழித்து காளமேகத்தை வரும்படி கோரினான் ஞானபண்டிதன். பவுடர் தூள்களை எடுத்துப் பூசிக் கொண்டிருந்தான். "புறப்படலாமா தம்பி?" என்று கேட்ட வாக்கில், மெல்லிய நுனிப்பிரம்புக் கழியுடன் வந்தார் சோம சேகர். இழைப்பு லேசாக தடம் காட்டிற்று.

"ஆகட்டுங்க!" என்று புறப்பட்டான்.

"சற்று இரேன். போகலாம்!"

"ஓ!"

"தம்பி!"

சொல்லுங்க!"

"உன் அப்பாவை நீ மறந்திட்டே போலிருக்குது!" என்று சிரித்தபடி மகனை ஆழமாகப் பார்வையிட்டார் அவர்.

அவனுக்குத் 'திக்'கென்றது. அவன் அவரை ஊடுருவி நோக்கினான். "உங்களை மறந்திட்டு நான் எப்படிங்க அப்பா உயிரோட இருக்க முடியும்?" என்று ஆதரவாகவும் அன்பாகவும் பேசினான் ஞானபண்டிதன்.

சோமசேகர் தம் கண்களைத் துடைத்துக்கொள்ள வேண்டியவரானார்.

"தம்பி!"

"சொல்லுங்கப்பா!"

"உன் திட்டம்தான் என்ன?"

"என்னோட திட்டம் பூவழகியின் கையிலேதான் இருக்குது!"

"ஆனா, அதோட முடிவு...?"

"அது குழலியின் மனசிலே இருக்குதுங்கப்பா !"

"அதோட மனசு ?"

"அது உங்க தீர்ப்பிலே இருக்குமுங்க அப்பா !" என்று மௌனமானன் அவன்.

"நோ...நோ !.... அப்படியெல்லாமில்லே !... என்னோட உயிர்ச்சிநேகிதரோட மகள் உன் வசம் ஒப்படைச்சிட்டால் அது என் நன்றிக்கும் என்னுடைய ஆத்ம திருப்திக்கும் சரியாயிருக்கும்னுதான் யோசிச்சிருந்தேன், ஒரு காலத்திலே ! ஆனா, வரவர என்னோட மனசே ஒரு விதமாய் மாறி வந்துக்கிட்டிருக்குது !... அதோட, பெரிய அதிசயம் ஒண்ணும் ராத்திரி நடந்திட்டுது. பூவழகி தான் இருந்தா, குழலியோட காதல் பலிதமடையாதின்னு நெனேச்சு, உனக்கு ஒரு கடுதாசியை எழுதி வச்சுப்பிட்டு, தலைமறைவாய் மறைஞ்சிடத் திட்டமிட்டிருந்திருக்குது. இதை எப்படியோ புரிஞ்சுக்கிட்ட குழலி, உடனே எங்கிட்டே வந்து, தன் சிநேகிதியின் வாழ்க்கையை நல்லபடியாச் செம்மைப்படுத்துவதே தன் லட்சியக் கனவுன்னு சொல்லி, உன் இலட்சியக் கனவுப் பிரகாரமே பூவழகியை உனக்கே கல்யாணம் செஞ்சுவைப்பதே தன் முதல் அலுவல்னும் சொல்லிச்சு. காதலுக்காக ஒருத்தியோட ஒருத்தி மல்லுப் பிடிக்கிற லோகத்திலே, ஒருத்திக்காக ஒருத்தி மல்லு கட்டிக்கிட்டுத் தியாகம் செய்யத் துடிக்கிற ஒரு அதிசயமான உண்மையை — ஒரு உண்மையான அதிசயத்தை இப்பத்தான் இவ்வளவு வயசுக்கப்புறம் நேருக்கு நேராகக் கண்டுக்கிட்டேன்"..." என்று கூறினர் அவர்.

பிறகு, பூவழகியைத் தன்னிடம் ஒப்படைக்காவிட்டால் வம்பு வரும் என்று உருட்டிய செங்கோடனின் பேச்சுக்களை அவரிடம் அவன் ஞாபகமூட்டினன்.

தமக்கும் அது பற்றி சற்று முன் டெலிபோனில் பயங் காட்டிய விவரத்தையும் சொன்னர் அவர்.

யாரோ ஒரு பணக்காரர் இலங்கைச் சீமையில் யாரையோ தன் சிநேகிதரைக் கொலை செய்த போது, வேலையாளாக அவ்விடம் இந்த செங்கோடன் இருந்ததாகவும், அந்தக் கொலையாளி இப்போது சென்னையில் இருப்பதாயும், அவரைப் பழைய நிகழ்ச்சியை வைத்து உருட்டி மிரட்டிப் பணம்

அபகரிப்பதாகவும் கேள்விப்பட்டதைச் செப்பினன் ஞான பண்டிதன்.

"அப்படியா ?" என்ற ஒரு வியப்பு விஞவுடன் முடித்து விட்டு, புறப்பட்டார் சோமசேகர். "இம்மாதிரிப் பயல்களை யெல்லாம் நம்பி எண்ண வைக்க வேணும் !" என்றும் அவர் உக்கிரத்துடன் உறுமினர்.

"ஆமாம்," போட்டான் ஞானபண்டிதன்.

டயர் தொழில் விஷயமாக புது டில்லிவரை நாளை போக வேண்டுமென்கிற செய்தியைப் பெரியவரின் செவிகளிலே போட்டான் ஞானபண்டிதன். அப்படியே, வாஷிங்க்டன் ரோஜவையும் சந்தித்து, அவள் கடிதப்படி சில நிமிஷம் உரையாடி மகிழவும் செய்யலாமென்றும் உள்ளூர எண்ண மிட்டான் அவன்.

இருவரும் தண்டையார்ப்பேட்டைக்குப் புறப்பட்டு ஹாலைக் கடந்தனர்.

அப்போது சோமசேகரின் பார்வையில் ஏதோ ஒரு தாள் காற்றில் பறந்து விழுந்தது. அதைப் பார்த்தார். அவர் கைகள் நடுங்கின. மறுகணம் 'சிகரெட் லைட்டரை'ப் பொருத்தி அந்தத் தாளைப் பொசுக்கினர்.

அவன் அக்காட்சியைப் பார்த்தபடியே நின்றுன்.

டெலிபோன் அழைத்தது.

எடுத்தான்.

எத்தன் செங்கோடன்தான் பேசினன்.

"இப்படிக் கொடு !" என்று வாங்கினர். "பணந்தானே ? எதற்கு ?.... ஒரு பைசா இனி பெயராது !...ம்....நன்ருக உன் இஷ்டப்படி நட !....ஞானபண்டிதனுக்கு நான் அவனுடைய சொந்த அப்பா இல்லை என்கிற ரகசியம் தெரிஞ்சிட்டுது ! இதோ, அவனும் பக்கத்திலேதான் இருக்கான் ! பூவழகிக்கும் அவனுக்கும் மாரேஜ் ஜாம் ஜாம்னு நடக்கப்போகுதாக்கும் ! ஒழுங்கா வந்து, ஒரு வெட்டு வெட்டிட்டுப் போ !..." என்ருர்.

"ஓ....வெட்டிட்டுப் போறேன், கட்டாயமா !" என்று எதிர்த் தரப்பில் செங்கோடன் வறட்டுத் திமிர்ச்சிரிப்புடன் முழங்கிய குரல் தெளிவாகக் கேட்டது.

135

ஞானபண்டிதனுக்குக் குழப்பம் மிகுந்தது.

"நான் உன் அப்பா !....நீ பயப்பட்டுவிடாதே ! முள்ளை முள்ளால்தான் எடுக்க வேணும் !...செங்கோடன் சாப்பாட்டை வெட்டட்டும்...இல்லே, யாரையானும் வெட்டிட்டுப் போகட்டும் ! .... இவன் கொடிதானே நாட்டிலே கொடி கட்டிப் பறக்குது !.... இவன் மாதிரி துரோகிகளையெல்லாம் பாகிஸ்தான்காரனைச் சுட்ட மாதிரி சுட்டுப் பொசுக்க வேணும் !...ம் !" என்று என்று சிரித்தபடி ஸ்ரீமான் சோமசேகர் புறப்பட்டார் ! அவருடன் புகைச் சுருள்களும் புறப்பட்டன.

ஞானபண்டிதன் மட்டிலும் புறப்படாமல் இருப்பானா, என்ன ?...

17

# நாணத்தின் குழலி

**போ**னது வந்தது தெரியாமல் 'பறந்து' போய் 'பறந்து' வந்துவிட்டான் ஞானபண்டிதன். புது டில்லிப் பயணம் அவனுக்கு இனியதொரு சுகமாக அமைந்திருந்தது. மிஸ் ஸ்டெல்லா ஜான்ஸன் சந்திப்பும் அவனுக்கு இனிய நற்கனவை எண்ணி எண்ணி மகிழ்வதை நிகர்த்து இருந்தது.

கார் வீட்டுக்கு வந்தது.

அவன் குளித்து மீண்டான். மீண்டதும் புதிய தெளிவு பெற்று, 'விருந்தினர் அறை'க்குச் சென்றான். அன்னபாக்கியத் தம்மாளுக்கு வணக்கம் தெரிவித்தான்.

பிறகு குழலி — பூவழகி இருவரையும் ஒரு சேரச் சந்தித்தான். "என் குழலியை என்னிடம் சேர்ப்பித்த பெருமையும், அவளை இப்போது என்னிடம் பத்திரமாக ஒப்படைத்த புண்ணியமும் உன்னையேதான் சேரும் சகோதரி!" என்றான் ஞானபண்டிதன். 'சகோதரி' என்ற புதிய உறவின் கூப்பாட்டில் அவன் உள்மனம் பாசத்தால் விம்மிப் பூரித்தது.

புதுடில்லிக்குப் பயணப்பட்ட போது, ஒரு வேளை திரும்புவதற்குள் முன் போலப் பூவழகி மறைந்துவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சி, குழலியிடம் நிரம்பவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். "உன் அண்ணியை என்னிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டியது உன் பொறுப்புத்தான் அம்மா!" என்று ரத்தினச் சுருக்கமாக, அவளிடம் அவன் பெரும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டான்.

எப்படியோ பொறுப்பு செவ்வனே நிறைவேற்றப்பட்டது.

அவன் குழலியை எந்தப் பிறப்பில்தான் மறப்பான்?

"....உங்கள் உள்ளங்கவர்ந்த பெண் உண்மையிலேயே பாக்கியவதிதான்! அந்தப் பாக்கியத்துக்கு அவள் முன் ஜென்மத்தில் நல்ல பூ எடுத்துப் போட்டிருக்க வேண்டும்!....

சமூக சேவைப் பண்பு — அபலைப்பெண்களுக்கு ஆதரவு நல்கும் பரோபகாரம் — ஏழை எளியவர்கட்கு உபகாரியாகும் பாசம் போன்ற அற்புதமான குணச் சேர்க்கைகொண்ட உங்களைப் புருஷனாக அடையப் பேறு பெற்ற பூவழகி — என் உடன் பிறவாச் சோதரி — கொடுத்து வைத்தவள். அவள் என்னுடைய அன்புச் சிநேகிதி. நானும் அம்மாவும், இந்த சோமசேகர் ஐயா அவர்களின் புண்ணியமான கருணையினால் ஒரு கிராமத்தில் இருக்கையில், பூவழகி எங்களுக்காக உதவி யிருக்கிருள். உங்கள் அப்பாவின் உதவியை நாங்கள் மறக்கவே முடியாது. என் அக்காளுக்கு ஒரு அத்தான் கிடைத்துவிட்டார். எனக்கு ஒரு அண்ணன் கிடைத்து விட்டார் !''...என்று அவள் — குழலி — எழுதிய கடிதத்தை ஞானபண்டிதன் மீண்டும் நினைத்துக்கொண்டான்.

மறுதினம் :

குழலியின் பிறந்த நாள் விழாவை மிகவும் சிக்கனமாக நடத்திஞர்கள். தெய்வ வழிபாடு மட்டும் தாராளமாக நடந்தது.

பெரியவர் ஆனந்தக் கண்ணீருடன் குழலியை ஆசீர்வாதம் செய்தார்.

''ஐயா உன் அப்பாவாட்டம். விழுந்து நமஸ்காரம் செய்யம்மா ! ஞானபண்டிதனுக்குக் கும்பிடு கொடு !'' என்று தெரிவித்தாள் அன்னபாக்கியத்தம்மாள்.

அவ்வாறே இருவருக்கும் தாழ்ந்து வணங்கி, நமஸ்காரங்களைத் தெரிவித்தாள் குழலி.

அன்னபாக்கியத்தம்மாள் மகிழ்வின் மேலீட்டினல் லேசாக விம்மிஞள். தன் பங்குக்கும் அவள் தன் புதல்வியை வாழ்த்திஞள்.

அழகிய நெக்லஸ் ஒன்றைக் குழலிக்குப் பிறந்த நாள் பரிசிலாகக் கொடுத்தான் ஞானபண்டிதன்.

''தம்பி, உன்னை உன் துணையுடன் மணக்கோலத்திலே பார்க்கும் அதே நேரத்தில் குழலியையும் தன் கணவனுடன் மணக்கோலத்திலே பார்க்கத் துடிக்கிறேன் நான். நீயும் உன் மனைவியும் — குழலியும் அவள் கணவனும் புனித மயமான நிறைவுடன் தீவலம் வரும் அற்புதக் காட்சியைக் கண்டு விட்டால் என் பிறப்பு பலன் பெற்றதாகிவிடும் !'' என்று

அவர். "நம்ப குழலிக்கு எங்கே புருஷனைப் பிடிச்சுப் போட்டிருக்கோ? பகவானுக்குத்தான் தெரியும்!" என்றார் அவர்.

குழலியின் மனத்துக்குப் பூரணம் நல்கும் மாப்பிள்ளையை 'செட்டில்' செய்வதே தன் முதல் கடமை என்றான் ஞானபண்டிதன்.

அப்போது எழுத்தாளன் காளமேகம், ஆனந்தத் துள்ளலுடன் ஞானபண்டிதனைத் தேடி வந்தான்.

நண்பனை வரவேற்றான் அவன்.

'விளையாட்டுத் தோழி' கதையைப் பற்றிப் பேசினார்கள்.

அப்போது ஞானபண்டிதனின், குறிப்புப்படி காப்பி கொணர்ந்தாள் குழலி.

அவளைக் கண்டதும் "ஆ, நீயா?" என்று கூவிவிட்டான் காளமேகம்.

குழலிக்கு, அவன் பழைய நிகழ்ச்சியை நினைவூட்டியதும் நினைவு துலாபாரமாக மின்னிப் பளிச்சிட்டது.

'நாம் ரெண்டு பேரும் 'டு' போட்டுப் பிரிஞ்சோம். இப்போ ராசி ஆகிடுவோம். உங்க சம்மதத்தோடு ராசி ஆகிடுறோம், மிஸ்டர் ஞானபண்டிதன்!" என்று உணர்ச்சி வசப்பட்ட, குதூகலக் குரலெடுத்துச் சொன்னான் காளமேகம்.

"ஆஹா!" என்றான் ஞானபண்டிதன்.

'டு' போட்ட அவளுடைய தளிர் விரலை 'ராசி' செய்து, தன் விரலையும் அவள் விரலுடன் கோத்து மகிழ்ந்து அவன் பங்கிற்கும் 'ராசி' ஆகிவிட்டார்கள்.

மறுவிநாடி, குழலி, நாணம் சிரிக்க, அன்பு சிரிக்க, ஓட்டமாகி ஓடிப் பூஞ்சிட்டு ஆனாள்.

இக்காட்சியில் லயித்துவிட்டிருந்த ஞானபண்டிதன், திடுமென்று தனக்குத்தானே பேசிக்கொண்டான். 'எஸ்...! குழலியோட கல்யாணப் பிரச்னையும் தீர்ந்த மாதிரிதான்! ஸிஸ்டர் சம்மதம் சொல்லிட்டா, எல்லாம் சரிதான்!

எழுத்தாளர்ன்னு எவ்வளவு ஒசத்தியானவர்!.... அப்பாகிட்டவும் காளமேகத்தை அறிமுகப்படுத்திடலாம்!' என்று மனத்திற் குள்ளாக ஆராய்ந்து முடிவு எடுத்துக்கொண்டு, பெரியவரிடம் காளமேகத்தை அறிமுகப்படுத்தினன்.

அப்போது குழலியின் நாணத்தை எட்டி நின்று பார்த்து, 'இனம்' கண்டுகொண்டான் ஞானபண்டிதன்.

## 18

## "அம்மா ! அம்மா !..."

**'ஓ. கே'** சொல்லிவிட்டாள் குழலி என்பதாகப் பூவழகி வந்து ஞானபண்டிதனிடம் அறிவித்தாள், மட்டற்ற மகிழ்ச்சியோடு.

"நான் எற்கனவே எதிர்பார்த்ததுதான்," என்று ஒரு மடக்கு மடக்கினன் ஞானபண்டிதன்.

பூவழகி ஒசிந்து விலகி, ஒயில் மாருமல் சிரித்தாள். புது தில்லியிலிருந்து வாங்கி வந்திருந்த அழகிய நெக்லஸ் அவளுக்குத் தூக்கலாகவே இருந்தது. சிவப்பு ரோஜாவுக்கு நகை பூட்டி அழகு பார்த்தால் எப்படி இருக்கும் !....

"கல்யாணப் பெண்ணுக்கு இஷ்டம் என்ருல், எனக்கும் சரிதான் !" என்ருர் செந்தில் விலாசத்தின் அதிபர். "எல்லாம் செந்தில் அருள் !" என்று மெய் மறந்து செப்பிஞர்.

ஞாயிற்றுக்கிழமை ஆனதால் எல்லாருமே ஓய்வாகவும் உணர்வுடனும் அமைதியாகவும் காணப்பட்டார்கள்.

பலகாரம் முடிந்து பேச்சு நடந்தது.

பெண்கள் இருந்த பகுதியை விட்டு, பெரியவர் சோமசேகரும் ஞானபண்டிதனும் தனியே வந்து மாடியை அடைந்தார்கள்.

"சமூக அந்தஸ்து பெற்றவர்தான் மாப்பிள்ளை. அதிலே துளிகூடச் சந்தேகம் இல்லை. ஆனல் பணம்தான்...." என்று இழுத்தார் பெரியவர்.

"நீங்க சம்பாதித்து இருக்கிற சொத்திலே பாதி நாளைக்கே தங்கச்சியைத்தானே சேரப்போகுது ! அப்புறம் தங்கச்சி குழலியின் புருஷன் ஒரு பணக்காரர்தானே அப்பா !..." என்ருன் ஞானபண்டிதன்.

"இஸ் இட் ஸோ?... மெய்யாகவா தம்பி?" என்று சுவாரஸ்யமான பூரிப்புடன் கேட்டார் பெரியவர்.

"சத்தியமாக! நீங்க தொழுகிற உங்க செந்தில்மீது ஆணையாக!...." என்று நீர் விலக்கிக் கூறினான் ஞானபண்டிதன்.

"அப்பனே! செந்தில்!" என்று சித்தபேதம் எய்தியவரைப் போலப் பல முறை கூவினார். பிறகு, தவமுனி போல மோனத்தில் மூழ்கினார். பிறகு கண் விழித்தார்.

அப்போது ரேடியோவில், "ரேடியோ சிலோன்...இப்போது திரைகானம்!" என்ற அறிவிப்பு சொல்லப்பட்டதும், வீறு கொண்டவராக சோமசேகர் எழுந்தவர், அடுத்த அரை நொடியில் மீண்டும் ஆசனத்தில் அமர்ந்துகொண்டார். தமக்குத் தாமே சிரித்தார்! பிறகு விம்மினார்; பிறகு சமன் அடைந்தார்.

"தம்பி! ஒருவன் குற்றம் செய்துவிட்டால், பிற்பாடு அவன் செய்த குற்றத்தை உணர்ந்து வருந்தி மன்னிப்புக் கோரினும், தெய்வம் அவன் மன்னிப்புக்குச் செவி சாய்த்து விடுமா?" என்று கேட்டார்.

"குற்றம் புரிந்தவன் செய்த தவற்றினை உணரும் பட்சத்தில் அவன் மன்னிப்பை பெற்றவனாகவே ஆவதாகத்தான் எல்லா மதங்களும் சொல்கின்றன!" என்றான் ஞானபண்டிதன்.

"எனக்கென்னவோ இப்படிப்பட்ட பொதுவான ஒரு கோட்பாட்டில் ஒரு நீதி இருப்பதாகத் தோன்றவில்லை. ஏன் தெரியுமா? இப்படிப்பட்ட நிலை பரவினால், அப்புறம், ஆத்திரத்தில் ஒருவன் ஒரு கொலை செய்துவிட்டு, அப்பால் ஆத்திரம் தணிந்ததும், செய்த தவற்றை உணர்ந்து தெய்வத்திடமோ மற்றவரிடமோ மன்னிப்புக் கோரி, அவன் பாவத்துக்கு உடனடியான விமோசனம் செய்துகொண்டால், ஒவ்வொருவனுமே கொலை செய்யத் துணிந்துவிட மாட்டானா? அவனுக்காகத்தான் மன்னிப்பு—பாவமன்னிப்பு 'ரெடிமேட் ஸ்டாக்' ஆக காத்திருக்கிறதே!...ஆனால், மன்னிப்பு விஷயத்திலே மனித மனமும் நீதி தேவனின் சட்டமும் இவற்றுக்கெல்லாம் புறம்பானவை. இவை எதனின்றும் எந்தக் குற்றவாளியும் எப்போதும் தப்பிவிட முடியாது!...சட்டத்தை ஒருவன்—சமுதாயத்துரோகி—ஏமாற்றினால், அவன் மனம் நித்த நித்தம் தரும் நகரவேதனையின் உபாதையை அவன் அனுபவிக்காமல்

ஏமாற்றிவிட முடியுமா ?'' என்றும் மீண்டும் ஒரு கேள்வியைச் சொடுக்கிஞர் அவர்.

"முடியாது !'' என்ருன் ஞானபண்டிதன் : "முடியாதுங்க அப்பா !...''

"பேஷ் ! என் கட்சிக்கு என்னுடன் நீயும் சேர்த்தி !'' என்று குதித்தார் பெரியவர்.

மாலையில் வெளியில் புறப்படு முன்னம் ஞானபண்டிதன் பெரியவரிடம் சொல்லிக்கொள்ள வந்தான்.

தாழிடப்பட்ட கதவுகளுக்குப் பின்னே சோமசேகர் நின்றது நின்றவாறு, அண்ணலின் படத்தின் முன்னே செருமிக் கொண்டிருந்தார்.

ஞானபண்டிதன் கதவைத் தட்டினுன்.

கதவைத் திறந்தார்.

"அழுதீங்களா, அப்பா ?''

"ஆமா தம்பி ! உன் அம்மாவை நெனைச்சுக்கிட்டேன் ! அழுதிட்டேன் !''

ஞானபண்டிதனுக்கும் அழுகை வந்துவிட்டது : "அம்மா ! அம்மா !''

# 19

## காதலுடன் பவனி

பூவழகியை அழைத்துக்கொண்டு, மவுண்ட் ரோடு, சைனு பஜார் ஆகிய இடங்களுக்கும் போனுன் ஞானபண்டிதன். அவளுக்குப் பிடித்தமான துணிமணிகளை அவன் எடுத்தான். அவனுக்கும் எடுத்துக்கொண்டான். "நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து எடுத்தால் சரிதான்," என்று பொறுப்புக் கட்டி விடவே, குழலிக்கும் ஒரு 'செட்' துணிமணிகள் எடுத்தான்: மாப்பிள்ளை காளமேகத்துக்குத் தனக்கும் பொறுக்கியதைப் போலவே எடுத்தான்.

ஆக, வந்த வேலைகள் பூர்த்தி. புஹாரியில் சாயா சாப்பிட்டார்கள். இம்முறை அவன்தான் 'பில்' கொடுத்தான். அவள் அட்டி சொல்லக் காணும். "எனக்கு இப்படி ஒரு நல்ல பாக்யம் உண்டாகும்னு கனவிலேகூட நினைக்கலேங்க! அந்தப் பாக்யத்தைக் கடவுள் நிலைக்கச் செய்ய வேணும். எனக்குக் கிடைச்ச அதிர்ஷ்டத்தை நான் அல்லும் பகலும் அனவரதமும் காப்பாத்திக்கிடுவேனுங்க!...உங்க அன்பு பெரிசு; பாசம் பெரிசு; பண்பு பெரிசு; ஈரம் பெரிசுங்க!" என்ருள் பூவழகி.

நாளை கல்யாணம் செய்துகொள்ளப் போகும் கணவனிடம் அவனைப் பற்றிப் புகழ்வது அவளுக்கு லஜ்ஜையாகத்தான் இருந்தது. ஆனலும், நன்றியின் மனம் அவள் மனத்தில் பட்டதைச் சொல்லும்படியே பணித்தது.

காதற்புருவின் புகழுரைகள் அவனைப் போதை கொள்ளச் செய்தன.

அவை போதம் நிறைந்தவை அல்லவா?

அந்திப் பொழுதில் ஆழித்தென்றலை அனுபவித்தவர்களாக இருவரும் நெடுநேரம் இருந்தார்கள். நாட்டின் பாதுகாப்புக்காக உண்டியல் குலுக்கி வந்தார்கள். அவனும்

அவனும் உண்டியலில் போட்டார்கள். அக்குழுவில் சிறு பொழுது அவர்கள் இருவரும் சேர்ந்து உண்டியல் குலுக்கினார்கள். "என் நாட்டுக்காக நான் ஆற்றிடவேண்டிய சேவையின் கடமையை எப்படியும் கூடிய சீக்கிரம் செய்துவிடுவேன். நாளைக்கே நிலை மோசமானால், நான் கட்டாயம் போரில் பங்கு பெற்றே தீருவேன். என்னுடைய இம்முடிவுக்கு நீ எப்போதும் தயாராயிருக்க வேண்டும், பூவழகி !... நாம் மணவறையில் இருக்கும் போதோ, அல்லது தீவலம் வரும் போதோ போர் நெருக்கடி விளைந்தால், உடனே நான் புறப்பட்டாக வேண்டும் !" என்றான் ஞானபண்டிதன்.

"உங்கள் இஷ்டம்தான் என் பாக்கியம், அத்தான் !" என்றாள் பூவழகி. "அது என் கடமை மட்டுமல்ல ; அது என் பாக்கியமும்கூட !" என்றும் தொடர்ந்தாள்.

அவனுக்கு அவள் பேச்சு ஆறுதலாகவும் பெருமையாகவும் இருந்தது.

இருவரையும் சுமந்த கார் பறந்தது.

இருள் கழிந்தது.

ஒளி கூடியது.

அவர்கள் பங்களா முகப்பில் காரை விட்டு இறங்கினார்கள்.

அவள் தன் அறைக்குச் சென்றாள்.

அவன் உள்ளே சென்றான்.

துணி மூட்டையை டிரைவர் எடுத்து வந்து ஹாலில் வைத்தான்.

ஞானபண்டிதன் மாடிக்குச் சென்றான்.

பெரியவரின் அறையை எட்டிப் பார்த்தான்.

பெரியவர் படுக்கையில் சுருண்டு கிடந்தார். அவர் பக்கத்தில் அன்னபாக்கியத்தம்மாள் உட்கார்ந்திருந்தாள். சோகமே வடிவமாக இருந்தாள். நெற்றித்திலகம் எடுப்பாக இருந்தது. கழுத்துத்தாலி மங்களகரமாகப் பொலிந்தது.

பெரியவர் விம்மினார்.

அந்த அம்மாள் அவரது விழி வளையங்களில் செறிந்திருந்த கண்ணீர் மணிகளைத் துடைத்தாள். "உடம்புக்கு ஒண்ணுமில்லேங்க. டாக்டர் கொடுத்த மாத்திரைகளைச்

சாப்பிட்டா, எல்லாம் குணமாகிப்பிடும். ரெண்டு கல்யாணங்களை நீங்கதான் நடத்தி வைக்கப் போறீங்களே !'' என்றாள்.

மறைந்து நின்று எட்டிப் பார்த்த ஞானபண்டிதனுக்கு நெஞ்சு பொருமியது ; கண்கள் கலங்கின. பெரியவர் தமது முடிவை நெருங்கிக்கொண்டிருக்கிறார் என்ற அந்த ஒரு கசப்பான உண்மையை — விதியின் விதிக்குக் கட்டுப்பட்ட — மறுக்கவொண்ணாத அவ்வுண்மையை அவன் மறுக்க முடியாமல் தவித்த மாதிரி, அவ்வுண்மையை ஏற்று அங்கீகரித்துக் கொள்ளவும் முடியாதவனாக அவன் தவித்துத் தண்ணீராக உருகிக்கொண்டிருந்தான்.

உண்மை, என்றென்றும் உண்மைதான் ! — ஆனால், சந்தர்ப்பங்களின் நெருக்கடியை அல்லது அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களின் பயங்கரத்தன்மையைத் தாள முடியாத கட்டங்களிலே, மனிதனின் அறிவுக்கப்பாற்பட்ட பலஹீனம், மேற்படி உண்மையானது பொய்யாக மாறிவிடலாகாதா என்று எண்ணத் தூண்டுகிறது. இப்படிப்பட்ட ஒரு தூண்டுதலில் தான் ஞானபண்டிதன் மனம் மறுகி, அப்படியே சிலையாக நின்றது நின்றபடி நின்றான்.

இன்னமும் அன்னபாக்கியத்தம்மாள் அப்படியேதான் பெரியவர் பக்கத்தில் இருந்தாள். அந்த அம்மணி துணிந்து பெரியவரது கண்ணீரைத் துடைத்த விஷயத்தை அவன் வியந்தான் ; அந்தத் தூய அன்பைப் போற்றினான் !

அவனால் பொறுக்கக்கூட முடியவில்லை.

"அப்பா !" என்று அலறியபடி உள்ளே போனான் அவன்.

அன்னபாக்கியத்தம்மாள் மெல்ல எழுந்தாள். "வா தம்பி !" என்றார் பெரியவர்.

அவன் மெத்தையை ஒட்டிக் கிடந்த நாற்காலியில் அமர்ந்தான்.

அவர் மெல்ல எழுந்து திண்டில் சாய்ந்தார். அவர் அன்னபாக்கியத்தம்மாளைப் பார்த்தார்.

அந்த அம்மணி புறப்பட்டு நகர்ந்தாள்.

பெரியவர் தொண்டையைக் கனைத்துக்கொண்டார்.

மேஜை விளக்கின் வெளிச்சத்தில் இருந்த சாத்துக்குடிப் பழத்தை உரித்தான் ஞானபண்டிதன். ஒரு சுளையை அவரிடம் நீட்டினான். அவர் வாயில் போட்டுச் சுவைத்தார்.

நாளது தேதிவரையுள்ள வரவு செலவு கணக்கு விவரம், இருப்பு, சுரங்கத்தின் நிலை, பாங்க் சேமிப்பு போன்ற எல்லா

விவரங்களேயும் பூராவாகச் சொன்ஞர் அவனிடம். அவன் பெயருக்கு மாற்றுவதற்கான ரிஜிஸ்தர் பத்திரங்களிலே பாங்கு — சொத்து ஆகியவை சொல்லப்பட்டு, அடியில் பெரியவர் சோமசேகர் கையொப்பம் செய்திருந்தார். எல்லாவற்றையும் கண்ணேட்டமிட்ட அவனுக்கு எல்லாமே அதிசயமாக இருந்தன.

"இப்ப என்ன வந்துட்டுது இதுக்கெல்லாம்! உங்க ஜீவிய காலத்திலே இப்படிப்பட்ட ஒரு மாறுதலுக்கு இப்போது என்ன வந்துட்டுதுங்க?" என்று குறுக்கிட்டான் அவன்.

"எனக்கு என் முடிவு தெரியும் தம்பி! ஆகவேதான், திட்டமிட்டு இப்படிப்பட்ட முன்னேற்பாடுகளேச் செய்ய முனேஞ்சேன்!" என்று காரணத்தைக் காட்டினர்.

அவர் பேச்சு மேலும் புதிராக இருந்தது. அவர் பேசாமல் ஒரு பத்திரிகையை அவனிடம் நீட்டினர்.

ஞானபண்டிதன் அதைப் பார்த்தான். அது ஒரு மஞ்சள் பத்திரிகை. பூவழகியையும் ஞானபண்டிதனேயும் சம்பந்தப் படுத்தி, ரசக் குறைவான தாக்கல்கள் எழுதப்பட்டிருந்தன. பூவழகி பண்பு கெட்ட பெண் என்றும் கொட்டை எழுத்துகளில் அச்சாகியிருந்தன.

ஞானபண்டிதன் அந்தப் பத்திரிகையைப் படித்துவிட்டு, பிறகு அதை அப்படியே சுக்கல் நூருகக் கிழித்துத் தீக்குச்சியை உரசிப் பற்ற வைத்தான். "அப்பா! இதெல்லாம் பொய்!... இப்படிப்பட்ட ரசாபாசமான விஷயங்களேப் பொது மக்கள் கிட்டே சொல்லி, வேசிப் பொழைப்பு நடத்திற இந்த மாதிரி மஞ்சள் பத்திரிகைகளே அரசாங்கம் தடை செய்யணும். சிக்கிரமே செய்திடுவாங்க! இம்மாதிரி அபலேப்பெண் ணுங்களேப்பத்தியெல்லாம் இல்லாததையும் பொல்லாததையும் சொன்ஞல், அதனுலே அவங்களோட எதிர்கால வாழ்க்கை பாழாகிடுமே என்கிற இரக்க குணம்கூட அற்றுப்போன மிருகங்கள் இவர்கள்!... அப்பா! இதை நீங்க பெரிசாக எடுத்துக்கிட வேணும்!... நான் என் பூவழகியை நம்புகிறேன்!.... அது போதும் எனக்கு! இந்த ஒரு உண்மையின் நிலேமைதான் எனக்கும் சரி, என்னேட பூவழகிக்கும் சரி—

ஆதாரம், காப்பு, உயிர் எல்லாம் !.... முரட்டுப் போக்கிரி செங்கோடன்தான் இந்த அற்ப வேலையைச் செஞ்சிருப்பான் ! பாவம் !...." என்று ஒரே மூச்சில் பேசினான் ஞானபண்டிதன்.

'டக்'கென்று அங்கே தோன்றினாள் பூவழகி. அவள் எல்லா நடப்பையும் கேட்டுக்கொண்டிருந்திருக்க வேண்டும். அவளது மனத் தூய்மை அவளது முககாந்தியில் பளிச்சிட்டது. திலகமும் மஞ்சளும் பூவும் அவளுக்கு வாய்த்திட்ட அருமை பெருமையாகவும் விளங்கின.

"ஐயா....!" என்று அழைத்தாள் பூவழகி.

பெரியவர் சோமசேகர் நிமிர்ந்தார்.

அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினாள் அவள். "ஐயா ! நீங்க என்னோட புனிதத்தை நம்பி அங்கீகாரம் செஞ்சாத்தான் நான் இங்கே இருக்க முடியுங்க !..." என்று வெகு கம்பீரமான உண்மைத் தெளிவுடன் சொன்னாள்.

"உன்னை நம்பலேன்னா, நான் தெய்வத்தை எப்படியம்மா நம்புவேன் ?.... நடப்பைச் சொன்னேன் இவன் கிட்டே. அவ்வளவுதான் !" என்று உணர்ச்சிப் பெருக்குடன் ஆதரவான குரலில் சொன்னார் அவர்.

"மாமா !" என்று ஆனந்தக் குரலில் கூவினாள் பூவழகி.

பிறகு, "உங்களைப் பார்க்கிறதுக்கு ஒருவர் வந்திருக் காருங்க !" என்றாள் பூவழகி.

"வரச் சொல்லம்மா !" என்றார் அவர்.

வெளிப்புறம் போய்த் திரும்பினாள் பூவழகி.

யாரோ ஒரு நபருடன் அவள் தொடர்ந்து வந்தாள்.

அந்த மனிதர் ஆடம்பரமாக உடுத்தியிருந்தார். பட்டுச் சட்டை மின்னியது. ஆனால், அவர் முகத்திலே-கன்னங்களிலே-ஐந்து விரல்கள் அப்படியே பதிந்துவிட்டிருந்தன.

"யார் நீங்க ?"

அந்த மனிதர் பயம் மண்டிய மௌனத்திற்கு ஆட்பட்டு, விழி சோர, குற்றவாளியைப் போல உட்கார்ந்திருந்தார்.

அவரிடம் பூவழகி ஒரு கோப்பைக் காப்பியை நீட்டினாள். "ம்....சாப்பிடுங்க !" என்று பரிவுடன் கேட்டுக்கொண்டாள்.

அந்த மனிதர் ஏறிட்டு நிமிர்ந்தார். முகத்தில் வேர்வை சொட்டியது. சட்டையை இழுத்துவிட்டார். இளமீசை துடித்

தது. அம்மனிதர் காப்பியைக் குடித்தார். பயந்து பயந்து செத்தார் அவர்.

"மாமா ! இவர் யார் தெரியுங்களா ? பெரிய பணக்காரராம்! அந்தத் திமிரிலேதான் என்னைக் கற்பழிக்க முனேஞ்சார். அப்ப ஒருவாட்டி அறை கொடுத்தேன். இப்பவும் ஒருவாட்டி கொடுத்தேன். இந்த ஆளை என் கண்ணிலே காட்டும்படி பகவானை நெதம் பிரார்த்திச்சேன். மனுசன் கிடைச்சார்!" என்று நிறுத்தினுள் அவள். அசல் தமிழச்சியாக அவள் சுடர் விட்டாள்.

அப்போது சோமசேகரின் குடும்ப டாக்டர் நாகலிங்கம் உள்ளே நுழைந்தார் ; தளர்ந்து போய்விட்ட அவர் மெல்ல நுழைந்தார். அவரைக் கண்டதும், அந்தக் குற்றவாளி நபர் நடுங்கினுர். டாக்டர் அந்த ஆளைப் பார்த்துவிட்டார். "தம்பி, என்ன இங்கே ?" என்ருர்.

அதற்கு அம்மனிதர் அழுகையை மட்டுமே பதிலாகத் தெரிவித்தார்.

"அண்ணே ! நான் பாவி ! இந்தப் பெண்ணுேட அதீதமான அழகிலே கிறுக்காகி, அதைக் கெடுக்க முயற்சி செஞ்சேன். அவ்வளவுதான் ! அவள் நெருப்பு. சுட்டிட்டுது!... அவள் பரிசுத்தமான தெய்வம் ! நான் செஞ்ச தப்புக்கு இப்போ தண்டனை அனுபவிக்கக் காத்திருக்கேன் !..." என்று தேம்பினுர்.

"அட பாவி ! இந்த வயசிலே உனக்கு ஒரு கேடா ? இந்தப் பொண் ஒத்த ஒரு மகள் உனக்கு இருக்கையிலேகூட உனக்கு இப்படி ஒரு இசை கேடான புத்தியா ?" என்று காறி உமிழ்ந்தார்.

"அம்மா, நீ தண்டனையைக் கொடம்மா !" என்று சொல்லி அவர் எழுந்தார்.

"அவர் செஞ்ச தப்பை உணர்ந்து அழுகிருரே, அதுவே ஒரு தண்டனைதான் டாக்டர் ஸார் !" என்ருள் பூவழகி வெகு நிதானமாக.

"டே ராமு ! உன்னை என் தம்பின்னு சொல்லிக்கிறதுக்கே எனக்கு ஷேம் ஆக இருக்குடா ! போடா !" என்று கர்ஜனை செய்தபடி, அவரை நெட்டிப் பிடித்துத் தள்ளினுர்.

அம்மனிதர் தரையில் விழுந்து, ரத்தத் துளிகளை வடித்து விட்டு எழுந்து மறைந்தார்.

"ஸார், என் நிமித்தம் என் பிரதரை எக்ஸ்யூஸ் பண்ணுங்கோ ஸார்!" என்று நைந்த குரலில் கேட்டுக் கொண்டார், டாக்டர்.

பூவழகியுடன் ஞானபண்டிதன் அங்கிருந்து கிளம்பினான். இந்தப் பூ விரல்களா அந்தப் பாவியை அவ்வளவு கன்றும்படி அறைந்தன!...பேஷ் பேஷ்!" என்று போற்றினான் அவன். "இந்த விரல்களுக்கு அப்பால் ஒரு நல்ல பரிசு தருவேன்!"

அவள் அவனிடமிருந்து தன் கரங்களை விடுவிக்க முடியாமல் திணறியது ஒரே ஒரு நிமிஷம் மட்டுந்தானும்!....

## 21

# 'சஸ்பென்ஸ்'

ஊர் முழுவதற்கும் உறக்கத்திற்கான காலம் நிர்ணயிக்கப் பட்டிருந்த வேளை அது.

ஆனல், ஞானபண்டிதன் மட்டும் உறக்கம் கொள்ளாமல், கொட்டக் கொட்ட விழித்துக்கொண்டிருந்தான். மேஜை விளக்கின் பாதத்தில் இருந்த பொத்தானை அழுத்தி, விளக்கை அணைத்துவிட்டு உறங்க வேண்டுமென்று முயன்ருலும், அவனல் முடியவில்லை.

மணி இரண்டு—இரவில்! ஏதோ ஒரு தாளிலே, தன்னுள்—தன்னுடைய நெஞ்சிலே, ஏதோ ஒரு நெருஞ்சி முள் தைக்கப் பட்டுவிட்டதையும், அது பிடுங்கி எறியப்படாமல் அப்படியே இருந்து வருவதையும், அவ்வேதனை நெஞ்சுக்கு மாளாத் துயரத்தை அளித்து வருவதையும் அவன் அவ்வப்போது அடிக்கடி உணர்ந்து வராமல் இல்லை. ஓய்வு கண்டால், அப்படிப் பட்ட சிந்தனைகள் அவன் அமைதியைப் பறித்துவிடுவது வழக்கம்.

இன்று அவன் மனம் பெரிதும் சலனமடைந்து பாதிக்கப் பட்டது. எல்லாவற்றிற்கும் போக்கிரி செங்கோடனே ஆதார மான ஒரு பயமாக—சூதாக—விதியாக—அவனுக்குத் தோன்றி வந்தான். 'செங்கோடன் என்னை மீட் பண்ணுவதாக டம்பம் பேசிச் சென்ருனே, ஏன் வரவில்லை ?' என்று அவன் தனக்குத் தானே ஆலோசனை செய்துகொண்டிருந்தான். அதே நேரத் தில், செங்கோடன் தன்னிடம், "சோமசேகர் உன் சொந்தத் தந்தையா ?" என்று கேட்ட கேள்வி, அடிக்கடி அவனையும் அறியாமல் அவனை நச்சரித்ததையும், நையாண்டி செய்ததை யும் எச்சரிக்கை செய்ததையும் அவன் சில சமயங்களில் மறந்துவிட முயன்ருன்; பல தருணங்களிலே, அவ்வார்த்தைகளை ஒன்றை ஒன்பதாகப் பெருக்கித் தன் மூளையைக் குழப்பிக்

கொண்டு கஷ்டப்பட்டான். அப்படிப்பட்ட நேரங்களிலெல்லாம் அவன் "நான் தாயற்றவன் ஆனேன். அதே போலத் தந்தையும் அற்ற அனாதையாகிவிடுவேனோ? அப்படித்தான் ஆகிவிட்டிருப்பேனோ?" என்றெல்லாம்கூட அவன் உள்ளூரச் சிறு குழந்தையாக விம்மினான்.

மண்டை வலித்தது.

விரிந்து கிடந்த புத்தகத்தை எடுத்தான். அப்போது, தான் பார்த்த 'தி விசிட்' படம் ஞாபகத்திற்கு வந்தது. தன்னைப் பழி வாங்கிய பழைய காதலனை — காமுகனைப் — பிறகு ஏழையாக இருந்து பெரும் பணக்காரி ஆகிவிட்ட பிறகு அச்சீமாட்டி பழிக்குப் பழிவாங்கி, கடைசியில் அவனை மன்னித்துத் திரும்பும் உச்சக் கட்டத்தை அவன் மனம் ரசித்து, மீண்டும் மீண்டும் அசை போட்டது. அவனையும் அறியாமல் கண்ணீர் சுரந்து வழிந்தது.

அவன் பார்வை 'விருந்தாளிகளின் விடு'தியை நோக்கிச் சென்றது. பூவழகி ரேழியில் வந்து நிற்பது போலப் பட்டது.

அவளைச் சந்திக்க வேண்டுமென்று அவன் ஆசைப்பட்டான்.

ஆனாலும், அது ஒரு வேளை பிறர் கண்ணுக்கு 'அசிங்கிதமாக'ப் படக்கூடுமே என்று கருதிவிட்டான்.

அன்று தன் தந்தையின் கண்ணீரைக் குழலியின் அம்மா துடைத்த காட்சியை அவன் மனம் இப்போது விபரீதமாகவே எடை போட்டது. அவ்வெண்ணம் அவனுக்கு விருப்பம் தராது. உடனே எழுந்து சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

அப்போது:

'டக்,டக்' என்று சத்தம் கேட்டது. ஏதோ சத்தம் போலிருக்கிறதென்று மீண்டும் படிக்க ஆரம்பித்தான். மீண்டும் 'தடபுடா' என்னும் சத்தமும் பேச்சொலியும் கேட்கத் தொடங்கின.

ஞானபண்டிதனுக்கு அதற்குமேல் இருப்புக் கொள்ளவில்லை. உடனே எழுந்தான்; நாற்புறமும் எட்டிப் பார்த்தான்; நடந்தான்.

பெரியவரது படுக்கை அறைக்கு அவன் ஓடினான். விளக்கு எரிந்தது.

ஆ ! என்ன பயங்கரம் !...

அங்கே, மொட்டைத்தலையும் பயங்கரமான மீசையும் கொண்ட முரட்டு எத்தன் செங்கோடன் நின்றான். ஒரு கையில் 'பிச்சுவா' இருந்தது. இன்னொன்றில் கைத் துப்பக்கி... அருகில் ஒரு 'டேப்ரெகார்டர்' இருந்தது.

"நீர் எனக்கு இப்போது பத்தாயிரம் ரூபாய் தரல்லேன்னா, இப்பவே இந்த மிஷினைப் போட்டுக் காட்டி, உம்மைச் சீரழிச்சு, கம்பி எண்ண செஞ்சுப்பிடுவேன் ! அப்புறம், உம் வீட்டிலே நடக்கப் போகிற ரெண்டு கல்யாணங்களையும் உம்மால் பார்க்கவே முடியாது !.... என்ன சொல்கிறீர் ? எனக்குக் காசுதான் கடவுள் !... இப்போது, பணம் தந்தாக வேணும் ! இல்லேன்னா, இதே வீட்டிலே கூடிய சீக்கிரம் பல கொலை நடக்கும் !... அந்தக் குட்டி பூவழகியையும் எங்கே இருந்தாலும் பழி வாங்காமல் தூங்க மாட்டேனாக்கும் !... ம்... சொல்லும் ! இல்லாட்டி, இப்பவே உன் மகன் கிட்ட எல்லா நடப்பையும் சொல்லிப்பிடுவேன் ! அப்புறம் அவன் உம்மை உயிரோடு சாகடிச்சுப்பிடுவானே !..." என்று பயமுறுத்திக்கொண்டிருந்தான், செங்கோடன்.

"போ ! போய் ஞானபண்டிதனிடம் சொல். என் முடிவை நான், அறிந்தவன்தான் !...ம்...ஓடு !...நான் இனி உனக்கு அம்மன் காசுகூடத் தரமாட்டேன். எல்லாம் ஞானபண்டிதன் சொத்து !... அதில் எனக்கு ஏது உரிமை !" என்று கலங்கிய—உறுதியான — குரலில் சொன்னார் பெரியவர் சோமசேகர்.

ஞானபண்டிதனுக்கு ரத்தம் உறைந்துவிட்ட மாதிரி இருந்தது. போக்கிரிப் பயல் செங்கோடனை எதிர்த்துப் பாடம் கற்பிக்கத் துடித்தான் அவன். அதற்குள் அவனுக்கு வேறொரு யோசனை தட்டியது. போலீசுக்குப் 'போன்' செய்ய வேண்டுமென்பதே விவேகமானதாகப்பட்டது. அதற்குள் — போலீஸ் வருவதற்குள்—செங்கோடனுடன் நயந்துபேசி தங்கவைத்துவிட வேண்டுமென்றும் கருதி, டெலிபோன் செய்யக் கீழ்த்தளத்துக்கு ஓடி வந்தான்.

அங்கே 'போலீஸ் ஜீப்' ஒன்று வந்து நின்றது.

சப்இன்ஸ்பெக்டர் மாடிக்கு வர சற்று நேரமாகியிருந்தால் கூட சோமசேகரை அந்தச் செங்கோடன் கைத்துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தியிருப்பானே !

செங்கோடனைக் கையும் களவுமாகப் பிடித்தார்கள். அவன் பிடிபட்டபோது, "சோமசேகர் பெரிய கொலைகாரன் ஐயா !... அதோ அந்தப் பெட்டியைத் திறந்து பாருங்கள். அது டேப் ரிகார்ட் பெட்டி !..." என்று கரடியாகக் கத்தினன் செங்கோடன். ஆனல், அவன் பேச்சு எதுவும் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் செவிகளில் ஏறவேயில்லை.

"அப்பா ! அப்பா !" என்று பயந்த குரலில் விம்மினன் ஞானபண்டிதன்.

அங்கு பூவழகி, அன்னபாக்கியத்தம்மாள், குழலி ஆகியோர் கூடினர்.

"ஏம்மா பூவழகி ! நீதானே முரடன் செங்கோடன் வந்ததும் போலீசுக்குப் போன் செஞ்சே ?" என்று சரியாகக் கேள்வியைக் கேட்டார் பெரியவர்.

"ஆமாங்க !" என்று பூவழகி தலை தாழ்த்தினள்.

ஞானபண்டிதன் அவளை நன்றியறிவு மிளிரப் பார்த்தான்.

"எனக்கு இனி பயமில்லே ! எல்லாரும் அவங்க அவங்க அறைக்குப் போய்த் தூங்குங்க !" என்று சொல்லிவிட்டு, சோமசேகர் படுக்கையில் படுத்தார்.

எல்லோரும் புறப்பட்டார்கள்.

மறுபடி, என்ன நினைத்தாரோ, "தம்பி !" என்று அலறினர்.

ஞானபண்டிதன் வந்தான்.

"உன்கிட்ட தர்றதுக்குத்தான் இந்த டேப் ரெகார்டரை எடுத்து வெளியே வச்சேன். ரொம்ப நாளா இது பேரிலே குறிவைச்சிருந்த செங்கோடன், இன்னிக்கு இதைக் கண்டதும், வெறிபிடிச்சுக் கத்திட்டான். இது அவன் கையிலே கிடைச்சிட்டால், அப்புறம் அவன் பாடு வேட்டைதான் ! இதை எடுத்துக்கிட்டு ஓடத்தான் என்னைச் சுடுறதுக்கு முனைஞ்சது எல்லாம் ! அதுக்குள்ளே போலீஸ் வந்திட்டுது !... உட்கார் தம்பி, போட்டுக் காட்டுறேன் !... இந்தப் பங்களாவிலே நடக்க

வேண்டிய ரெண்டு கல்யாணங்களையும் கண் குளிரக் கண்டு முடிஞ்சதும் இதைப் போட்டுக் காண்பிக்க வேணும்னு இருந்தேன். அதுவரைக்கும் விதி சும்மா இருக்கல்லே !...'' என்றார் அவர்.

ஞானபண்டிதன், "அப்பா ! இந்த டேப் ரெக்கார்டரை இனி நான் போட்டுக் கேட்டு என்ன ஆகப் போகுது ?... நீங்க நிம்மதியாய்த் தூங்குங்க அப்பா !...'' என்று அன்பும் ஆதரவும் சொட்டிய குரலில் கெஞ்சினன்.

பெரியவர் சோமசேகர் விரக்தியுடன் சிரித்தபடி, "சரி, அப்புறம் உன் இஷ்டம் !'' என்று சொல்லி, படுத்துக்கொண்டு விழிகளை மூட ஆரம்பித்தார்.

மறுபடியும் திரும்பி வந்தான் அவன். "அப்பா, நீங்க இல்லேன்னு, எனக்கோ அல்லது தங்கச்சிக்கோ வேறே யாருமே நாதி இல்லாமப் போயிடும் !.... முதலிலே, இந்த டேப் ரெக்கார்டரை போட்டு உடையுங்க !...'' என்றான் அவன்.

"அப்படியே உடைச்சிடட்டுமா, ஞானபண்டிதா !''

"ம் !'' என்றான் அவன்.

ஆனல், மறுகணம் நடந்தது என்னவென்று தெரியுமா ?

அதுதான் : 'சஸ்பென்ஸ்' !...

**ஆ**ம் ; விதி இல்லையென்றால், வாழ்வுக்குச் சுவை இல்லை. அதே போல, 'சஸ்பென்ஸ்' இல்லையென்றால் கதைக்கு — வாழ்வின் கதைக்குச்—சுவை இருப்பது இல்லை.

பின்னிரவு — மணி மூன்று, பத்து !... சுடுகாட்டு அமைதி !...

'டேப் ரெக்கார்டரை உடைத்துப் போட்டுவிடுவதாகப் 'பாவலா' செய்துகொண்டு அதை எடுத்த பெரியவர் சோமசேகர் அவர்கள், அந்த ஒலிப்பதிவு நாடாவைச் சுற்றி, பொத்தானை அழுத்தி இயக்கினர்.

மறுகணம்தான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

**"சோமசேகரா ! என்னைக் கொல்ல முனையாதே !... என் மகன் ஞானபண்டிதன் குழந்தை !... என்னைக் கொல்லாதே ! இந்தப் பாவம் உன்னைச் சும்மா விடாது !... உன் குடும்பத்தை அழித்துவிடும் !... ஐயோ, வேலைக்கார.... செங்கோடா ! அட, பாவி, நீயுமா அவனுடன் சேர்ந்துகொண்டாய் ? தெய்வமே, என்னை இப்படியா நீ செய்ய வேண்டும் ! ஐயோ.... நான் செத்தேன் !"** என்ற அபயக் குரலைத் தொடர்ந்து, துப்பாக்கி வெடிச்சத்தம் எதிரொலித்தது ; முடிந்தது.

மறுகணம் அமைதி.

சோமசேகர் அரைப் பைத்தியம் போலச்சிரித்தார். வெள்ளின் தாடியையும் மீசையையும் தடவிக்கொண்டார். "மிஸ்டர் ஞானபண்டிதன் ! நான் கொலைகாரன் ! இந்தப் பாவி உங்க சொந்த அப்பன் இல்லை !... ம்... இப்போது கேளுங்கள் !"

மறுபடியும் ஒலிப் பதிவுப் பெட்டி இயங்கி ஒலித்தது.

ஞானபண்டிதன் இயந்திரமானான். அவன் இதயம் அந்த ஒலியலைகளிலே மிதந்தது.

“நான் சோமசேகர்!... நானல்ல உன் தந்தை!... ஞானபண்டிதா!... உன் தந்தை செந்தில்தான்! அவரும் நானும் சிலோனில் நூவரெலியாவில் அமர்க்களமாகத் தொழில் செய்து வளர்ந்தோம். பேரும் புகழும் பணமும் கிடைத்தன. கடைசிக் காலத்தில், உன் தந்தை செந்திலுக்கு என் பேரில் பொறாமை ஏற்பட்டது. தன்னால் நான் முன்னேறி வளர்ந்தது அவருக்குப் ‘பொசுபொசு’ப்பை உண்டாக்கிவிட்டது. ஒரு நாள் என்னைப் பலர் முன்னிலையில் ஏசவும் செய்தார். இதனால் அவர் பேரில் எனக்கு வஞ்சம் வளர்ந்தது. ஒரு சமயம் குடிபோதையிலிருந்த என்னை அவர் சாடவே, நான் அவரை — உன் அப்பாவைச் சுட்டுவிட எத்தனித்தேன். அப்போதுதான் டேப் ரெக்கார்டரை வைத்து இயக்கிய அவர், என் கையில் துப்பாக்கியைக் கண்டு, என் நிலையையும் ஊகித்துக் கத்தினார். என் கையாளாக இருந்தான் இந்த முரடன் செங்கோடன். கடைசியில் நான் உன் தந்தையைச் சுட்டுவிட்டேன்!...என் போதையும் ஆத்திர வெறியும் என்னைக் கொலைகாரனாக்கி விட்டன. இச்சந்தர்ப்பத்தில் அந்த டேப்ரெக்கார்டர் பெட்டியை நலியாமல் எடுத்துக்கொண்டு ஓடிவிடச் செங்கோடன் முனைந்தது பலிக்கவில்லை. நான் துடித்தேன்—அப்புறம்தான் என்னுடைய மாபெரும் தவறு எனக்குப் புரிந்தது.

“உன் தந்தை இறந்த அதிர்ச்சியில் உன் அன்னையும் குழந்தையான உன்னை விட்டுவிட்டுக் கண்களை மூடிக்கொண்டார்கள்!

“இப்பயங்கரமான முடிவுகளைக் கேட்ட என் மனைவி என்னைச் சுடுமொழிகளால் ஏசிச் சாடினாள். தன் பெண் குழந்தையும் தானும் இனி அனாதைகளாகிவிட்டதாகக் கதறினாள். பிறகு, அனாதைக் குழந்தையான உன்னை என் கைகளில் வைத்து, உடனே இந்தியாவுக்குச் செல்லும்படியும், நான் நல்லபடியாக மனம் திருந்தினால்தான் அவள் அங்கு தன் மகளுடன் வரமுடியுமென்றும் சொல்லி, என்னைக் கப்பலேற்றி விட்டாள். இல்லையேல், எந்தச் சமயமும் அவள் போலீசுக்கு என்னைப் பற்றித் தெரிவித்துவிடுவதாகவும் எச்சரித்தாள்.

“நான் தாயகம் திரும்பினேன்.

"என் கஷ்டங்களுக்குள் ஒரு நல்ல பொழுதாக இந்தச் செங்கோடனை இலங்கையில் சிறையில் போட்டுவிட்டார்கள் பல காலம் !

"உன்னை என் சொந்த மகனாகவே வளர்த்தேன் !

"தீயவனான என்னை என் மனச்சாட்சியும் மகாத்மா காந்தியும் தெய்வமும் நல்லவனாக மாற்றினாலும், என்னுள் இம்மி அளவுகூடச் சாந்தி பிடிக்கவில்லை.

"அதற்கேற்றாற்போலச் சில வருஷங்கட்கு முன் விடுதலை பெற்று வந்த செங்கோடன், என்னைக் காட்டிக்கொடுத்து விடுவதாகப் பயமுறுத்தி, அவ்வப்போது நூறு, இருநூறு என்று பணம் கறந்து சென்று வரத்தொடங்கினான்.

"எல்லாம் ஏன் தெரியுமா ?

"நான் கோழை அல்ல !

"என் மனைவியிடமும் என் மகளிடமும் நான் மனம் திருந்தியதை நிரூபித்துக் காட்டி, உன்னையும் ஆளாக்கிவிட்ட ஆனந்தமான பேரமைதி பெறவேண்டுமே என்பதற்காகத்தான் !

"என் மனைவி யார் தெரியுமா ?

"அதோ, விருந்தினர் விடுதியில் இருக்கிறாளே அன்ன பாக்கியம், அவள்தான் என் மனைவி — ஆருயிர் மனைவி !... அவள் சத்தியம் ! அவளே தர்மம் !...

"என் மகள்தான் குழலி !

"என் மகளை உன்னிடம் ஒப்படைத்துவிடத்தான் நான் சொப்பனம் கண்டேன்.

"ஆனால், அன்றிலிருந்து இன்று வரை என் மகனாகவே ஆகி விட்ட உன்னை, எப்போதுமே என் மகனாவே அமர்த்திக்கொண்டு விடவே பிறகு முடிவு செய்துகொள்ளத் தொடங்கிவிட்டேன்.

"நான்தான் தனக்குத் தந்தை என்ற உண்மையை என் மகள் குழலி அறியவே மாட்டாள், இது பரியந்தம் !

"நான் செய்த பயங்கரமான குற்றத்துக்குத் தண்டனையை நீதான் எனக்கு அருள வேண்டும். அதுவே முறை — நியதி !...

"அன்று என்னை வாழ்வித்த என் உயிர் நண்பன் செந்திலுக்கு இந்தச் 'செந்தில் விலாசம்' என்றுமே ஒரு நினைவுக்கூடம் !

"உன் கருணை, என் மனைவியையும் என் மகளையும் என்றும் வாழச் செய்யுமென்று நான் எதிர்பார்க்கக்கூட எனக்கு வெட்கமாயிருக்கிறது, தம்பி !...

"ஐயோ, நான் பாவி ! மகாபாவி ! உன்னை அனுதையாக்கி விட்ட கொடும்பாவி !... இருபத்தைந்து வருஷத்திய என் நரக வேதனைக்கு — எனது மன்னிக்க முடியாத பெரும்பாவத்துக்கு — இதோ முடிவு கிட்டப் போகிறது!...என் தவற்றுக்கு நான் என் தண்டனையை அனுபவிக்காவிட்டால் அப்புறம் தர்மத்திற்கு அர்த்தமில்லாமல் போய்விடுமே !..."

அத்துடன் நின்றுவிட்டது ஒலி.

விடிவெள்ளி முளைத்தது.

ஞானபண்டிதன் வேர்வையைத் துடைத்துக்கொள்ளக்கூட மனமின்றி அப்படியே சிலையாக நின்றான். "ஐயோ, நான் அனுதையாகிவிட்டேனே !" என்று அலறிக்கொண்டே, மண்டையில் அடித்துக்கொண்டான். மறு விநாடி, 'நான் அனுதையா ?... அல்ல ! என் நிமித்தம்—தர்மத்தின் நிமித்தம்—கொண்ட புருஷனுக்கு — கட்டிய கொலைகாரக் கணவனுக்கு ஒரு நீதியாகவும் ஒரு விதியாகவும் இருந்து, அறவலி கொண்டு, வனவாச வாழ்வு வாழ்ந்து நிரூத்துவிட்ட அன்னபாக்கியத்தம்மாள் இருக்கையில், என் அன்னையாக அவர்கள் இருக்கும் போது நான் அனுதையா ? ஊஹூம், இல்லை ! அவர்களுக்கு நான் எவ்வளவோ கடமைப்பட்டவனல்லவா ? பெரியவரை அவர்களே மன்னித்துவிட்ட பின், வேறு என்ன புது முடிவு வேண்டும் ? அப்பா !...அப்பா !' என்று உணர்ச்சிப் பெருக்குடன் தன்னுள் பேசியவாறு, அவன் கண்களைத் திறந்து பார்த்தான்.

அங்கே பெரியவர் சோமசேகர் இல்லை. ஓடினான்.

அப்போது, "ஐயையோ ! என்னை ஏமாற்றுப்பிட்டீங்களே அத்தான் !" என்று கூவியபடி, வீழ்ந்துவிட்ட சோமசேகரின் பாதங்களில் விழுந்து புரண்டு கதறினாள், அன்னபாக்கியத்தம்மாள்.

"ஐயோ அப்பா !" என்று ஓலமிட்டபடி அப்படியே நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான் ஞானபண்டிதன்.

பெரியவரைப் பார்த்தான். மூச்சு இருந்தது. நெற்றியில் வழிந்த ரத்தத்தைத் துடைத்தான். உடனே டாக்டருக்கு 'போன்' செய்தான். கைத்துப்பாக்கி இடறியது !

குழலி, "அப்பா ! அப்பா !...." என்று கதறினாள்.

அன்னபாக்கியத்தம்மாளின் நெற்றித் திலகம் சத்தியத்தின் ஜோதியாக ஒளிர்ந்தது. அவள் கதறலை நிறுத்தவில்லை.

"அம்மா ! நீங்க தர்மத்துக்கு ஒரு சாட்சி. சத்தியத்துக்கு ஒரு குரல். உலகத்திலே குற்றம் அழியவும் தர்மம் வாழவும், நீங்க கொண்ட புருஷனையே உங்க வாக்காலே தண்டிச்சு, இருபத்தைஞ்சு வருஷ காலம் சத்தியத்துக்காக—தர்மத்துக்காக—நீதிக்காக நீங்க தனிச்சு வனவாசம் கணக்காய் ஒதுங்கி இருந்தீங்க. உங்க கணவரைவிட்டு இவ்வளவு காலம் பிரிஞ்சு இருந்தீங்க. உங்க மகளுக்கும் அதன் அப்பாவைக் காண்பிக்காமலும் அவ்வளவு வைராக்கியத்தோட இருந்தீங்க ! உங்களைப் பார்க்கிறதே சத்திய தரிசனமாகவே தோணுது. நான் வாழ, உங்களையே அழிச்சுக்கிட்டீங்க !... எனக்குக் கடவுளைக் கண்டு பழக்கமில்லை, தாயே ! ஆனால், இப்போ கடவுளைக் கண்டு பழகிக்கிட்டேன் !... நீங்க அழாதீங்க ! என் அப்பாவுக்கு உயிருக்கு ஒரு பயமும் இல்லை !... என் பிரார்த்தனையைக் கடவுள் வாழ்த்தாமல் இருக்க மாட்டாரம்மா !..."

ஞானபண்டிதன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டார்.

டாக்டர் வந்தார்.

ஸ்ரீமான் சோமசேகர் அவர்களுக்குப் புதிய ஜன்மத்தைக் கொடுத்துவிட்டு விடை பெற்றார்.

அங்கு அமைதி சொல்லிச் சொல்லி வழிந்தது.

"அப்பா ! இந்தப் பங்களாவிலே நடக்கவேண்டிய கல்யாணங்களை நடத்தி வைக்காமத்தானே எங்களை ஏமாத்திட்டுப் போகப் பார்த்தீங்க ? அது முடிஞ்சுதா ? இனி ஒரு விநாடிகூட இந்தப் பங்களாவிலே எங்களுக்குத் தெரியாம நீங்க மூச்சுவிடக்கூட மறந்திட முடியாதாக்கும் ! அதுமட்டுமா ? இந்தப் பங்களாவிலே பிறக்கப்போற குழந்தை குட்டிங்ககூட உங்களை அந்தண்டை இந்தண்டை நகர விடாதாக்கும் !...

இனி உங்க உடலிலே தங்கியிருக்கிற உயிர் உங்களுக்குச் சொந்தமில்லே !.... அது எங்களுக்குச் சொந்தமாக்கும் ! இல்லேயா, அம்மா ?...இல்லேயா தங்கச்சி ? இல்லேயா, பூவழகி ? ... இல்லேயா வேலப்பா ?..." என்று ஆள் மாற்றி மாற்றிக் கேட்டான் ஞானபண்டிதன். "வசந்தம் திரும்பி வருமென்று சொல்றது சரியாகப் போயிட்டுது !"...

"ஆமாம் !" என்று ஒரே குரலாக நான்கு குரல்கள் ஒலி கிளப்பின. ஆமோதித்தன.

பெரியவர் சோமசேகர் ஆனந்தக் கண்ணீருடன் எல்லோரையும் பார்த்தார். பிறகு, "தம்பி !" என்று அழைத்து, ஞானபண்டிதனின் கன்னங்களை ஆதரவுடன் வருடினர்.

"அப்பா !" என்று பாசமிகுதியுடன் கூவினன் அவன்.

பிறகு, அவர் அன்னபாக்கியத்தம்மாளேயும் குழலியையும் நெருங்கினர். "அன்னபாக்யம் !... அம்மா குழலி !" என்று தேம்பினர். குரல் நடுங்கியது.

அவர்களும் தேம்பினர்கள்.

பூவழகியும் நீர் ததும்ப நின்ருள்.

பெரியவர் நிமிர்ந்து நடந்தார். என்றுமில்லாத அமைதிப் புன்னகையை இழையோடவிட்டபடி, ஹாலில் தொங்கிக் கொண்டிருந்த மகாத்மா காந்திஜியின் படத்தின் முன்னே மண்டியிட்டு வணங்கித் தொழுதார். கண்ணீர் மாலே நீண்டது.

போதி புத்தர், ஏசுபிரான், நபிகள் நாயகம் ஆகியோர் அவரை ஆசிர்வதித்திருக்க வேண்டும் !

அங்கு வந்து நின்ருன் ஞானபண்டிதன். "எங்ககிட்ட பெர்மிஷன் வாங்காமல் நீங்க இப்படி வந்திடலாமா அப்பா ?" என்று ஒரு போடு போட்டான் !— பெரியவர் அமைதியுடன் ஆனந்தமாகப் புன்முறுவல் பூத்தார் !

மறுகணம், அங்கு சிரிப்பு — வெடிச் சிரிப்பு - சொல்லிச் சொல்லி வழிந்தது !

பொழுதும் விடிந்துவிட்டது !

# எங்கள் புதிய வெளியீடுகள்

அலைகள் ஓய்வதில்லை
—கே. பி. நீலமணி

வங்கம் பிறந்த கதை
—தி. சு. கலியபெருமாள்

ஆடத் தெரியாத கடவுள்
—எஸ். மகராஜன்

சி. ஐ. டி. சிறுவர்கள்
-தமிலன்

உண்மைக்கு வெற்றி
பூவண்ணன்
(நாடகம்)

கார்வண்ணன் கண்ட கனவு
(குழந்தை எழுத்தாளர் சங்கப் பரிசு பெற்ற நூல்)
—ரேவதி

Asian Printers,. Madras-600014